# குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி



ஷேக்ஸ்பியர்

ஊசி 2 குத்து 7

★ ஏப்ரல் 1964 ★

இதனுள் :

பாங்கர் சுமக்கும் பல்லக்கு !
ரிக்ஷாவும் பல்லக்கும்
பாங்கர் வெங்கடாசலபதி !
லெனின் !!!
மீண்டும் தலை குனிவோம் !
நுந்து கன்று
சோஷலிச பட்ஜெட்
சாதியை ஒழிக்க வழி
முதலாக்கம்
கல்லாய்ச்சமைந்த உயிர்கள்
கவிதைப் பகுதி
இலக்கியப் பகுதி
— இன்னும் பல



## தி மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன்: 82026) சென்னை-34

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

*எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—*

| | | | |
|---|---|---|---|
| ஒரு ஆண்டும் அதற்கு மேலும் | ... | $4\frac{1}{2}$% | ஒரு ஆண்டிற்கு |
| இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | $4\frac{3}{4}$% | ,, |
| மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 5% | ,, |
| நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | $5\frac{1}{4}$% | ,, |
| ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை | | $5\frac{1}{2}$% | ,, |

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

டி. வி. நரசிம்மன் M.A., C.A., I.I.B.
(காரியதரிசி)



## "அறிவுப் பாதை"

*தமிழ் வார ஏடு*

( *ஆசிரியர்:* குத்தூசி சா. குருசாமி )

*கிண்டல் நிறைந்த குத்தூசிக் கட்டுரைகளுடன்* அறிவியல் (சுயமரியாதை) இயக்கத்தின் ஆதரவில், சோஷலிச தத்துவத்தையும் *அறிவியல் கொள்கைகளையும் தீவிரமாகப் பரப்பும் பொருட்டு,* அரசியல் கட்சி சார்பற்ற, விறுவிறுப்பான அறிவுப் பிரசார ஏடு. *இதழ் ஒன்றுக்கு 25 காசு வீதம் முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் தேவை. விற்பனையாளர்கட்கு 3 காசு கழிவு.*

ஆண்டுக் கட்டணம் ரூ. 6-00
தனி இதழ் 13 காசு

*நிர்வாகி*
**" அறிவுப் பாதை "**
*50-சி. ஐ. டி.* (C.I.T.) *பிளாக்*
சென்னை-30.

மே மாதம் 1-ந் தேதி முதல் வெளிவரும்.

# குத்தூசி

[ஆசிரியர்: சா. குருசாமி]

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ் : விலை 50 காசு;

ஆண்டுக் கட்டணம் :

உள் நாடு : ரூ. 5 கொழும்பு : ரூ. 6

வெளி நாடு : ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.

விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

விளம்பர விகிதம் :

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய்;
அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய்;
இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்.
(அரைப் பக்கம் : 25 ரூபாய்)

குறிப்பு :-நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

---

குறிப்பு :—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை; முன் அனுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

# MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

---


Manufacturers of:

**Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.**

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

பாங்கர் சுமக்கும் பல்லக்கு!



''மெய்ப்பொருள் காண்பது அறிவு''


குத்தூசி

ஊசி 2 ஏப்ரல் 1964 குத்து 7


# பாங்கர்கள் சுமக்கும் பல்லக்கு !

இந்தியா சோஷலிசத்தை நோக்கிச் செல்வதாகக் கூறப்படுகிறதல்லவா? உலக மக்களில் மூன்றில் ஒரு பங்குப் பேர் இன்று சோஷலிச ஆட்சி முறைக்கு உட்பட்டிருக்கின்றனர். பல கோடி மக்கள் சோஷலிச சமுதாய அமைப்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்; இவர்களில் இந்திய மக்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்திய ஆட்சியின் முன்னணித் தலைவர்களும் ஆட்சிக் கட்சியின் முன்னணித் தலைவர்களும் சோஷலிசத்தைத் தவிர இந்நாட்டை முன்னேற்றக் கூடிய வழி வேறெதுவு மில்லை என்று கருதுகிறவர்கள். ஆனாலும், ''காயப்படுத்த ஆசைதான்; அடிக்க மட்டும் அச்சம்'' என்ற இங்கிலீஷ் பழமொழிக்குப் பொருந்தக்கூடியவர்களா யிருக்கின்றனர்.

அஞ்சல் துறை, நகர மன்றங்கள்,—போன்ற ஒரு சில அமைப்புக்கள் பிரிட்டிஷார் ஆட்சியின் போதே அரசாங்கத்துக்குச் சொந்தமாக (பொது உடைமைகளாக) இருந்து வந்தன. நாடு விடுதலை பெற்றதும் ரயில் வண்டிப் போக்கு வரத்து, மின்சார உற்பத்தி–பங்கீடு–அமைப்புக்களில் சில, ஆயுள் ஒப்பந்தம் (இன்ஷூரன்ஸ்) ஒரு சில இரும்பு எஃகு உற்பத்தித் தொழிற் சாலைகள், ஒரு சில பஸ் போக்கு வரத்துக்கள் முதலியன தேசீய (பொது) உடைமைகளாயின.

சோஷலிசம் என்ற சமுதாய அமைப்பின் குறிக்கோள் என்ன? பொருளும் அதை நுகரும் வசதியும் ஒரே இடத்தில் குவியக்கூடாது;

காற்றைப் போலும், நீரைப் போலும் பொருளும் அதை நுகரும் வாய்ப்பும் எல்லோருக்கும் பொதுவாக இருத்தல் வேண்டும். மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போட்டு நிரப்ப வேண்டும். சம தரையில் தான் சமுதாயப் பயிர் வளரும். எனவே தனியார் துறைகளில் பொருள் குவிந்து கொண்டேயிருப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும். வரிகள் மூலமாகவே இதைச் சாதித்துவிடலாம் என்கிறார்கள், சிலர். இசை மூலம் பயிர் வளர்க்கலாம் என்ற கற்பனையைப் போன்றது இது. வரியை ஏமாற்றத் தெரியாதவரும், ஏமாற்றிக்கொண்டிராதவரும் (பிற நாடுகளில் எப்படியோ ?) இந் நாட்டில் ஒருவர் கூட இல்லை. அவரவர் நெஞ்சே அவரவருக்கு விடை தரும்.

இந்நாட்டில் பாங்குகளை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்ற கிளர்ச்சி ஆளும் கட்சிக்கிடையே கூடத் தீவிரமாக இருக்கிறது. ஆனால் அரசாங்கமோ அஞ்சுகிறது ; பல நொண்டிக் காரணங்களை அள்ளி வீசுகிறது.

பாங்குகளே தொழிற் சாலைகளையும், மொத்த வாணிபங்களையும், ஆட்டிக்கொண்டிருக்கின்றன என்பதையும், பாங்க் முதலாளிகளே சங்கிலித் தொடர் பத்திரிகைகளுக்கும் முதலாளிகளாக இருந்து வருகின்றனர் என்பதையும், இவர்களே பெரும்பான்மையான பார்லிமெண்ட் உறுப்பினர்களையும், மாநில சட்ட மன்ற உறுப்பினர்களையும் தேர்தலில் நிற்கவைத்துத் திரை மறைவில் நின்று இயக்கி வருகின்றனர் என்பதையும் அரசாங்கம் மறுக்க முடியாது. டிபாசிட் பாதுகாப்பு சங்கதியிலும், பொது நிர்வாகத் துறையிலும் தனியார் துறை பாங்குகள் அரசாங்க பாங்காகிய ரிசர்வ் பாங்குக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன என்பது உண்மையாயிருக்கலாம். ஆனால் பாங்குகளின் லாபத்தையும், கடன் கொடுக்கும் உரிமையையும், செலவு செய்யும் உரிமையையும் எவ்வாறு—எந்த அளவுக்குக் கட்டுப்படுத்துகிறது என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறது.

இந்தியாவில் மொத்தம் 267 பாங்குகள் (கிளைகளைக் கணக்கிடாமல்) இருக்கின்றன. இவற்றின் மொத்த டிபாசிட் (மூலதன இருப்புத் தொகை) 2,300 கோடி ரூபாய். இதில் மூன்றில் ஒரு பங்கு (778 கோடி ரூபாய்) அய்ந்தே அய்ந்து பாங்குகளிடம் இருக்கின்றன :—

| | | | ரூபாய் |
|---|---|---|---|
| 1. | சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா | ... ... | 251 கோடி |
| 2. | பஞ்சாப் நேஷனல் பாங்க் | ... ... | 154 ,, |
| 3. | பாங்க் ஆஃப் இந்தியா | ... ... ... | 154 ,, |
| 4. | பாங்க் ஆஃப் பரோடா | ... ... ... | 111 ,, |
| 5. | யுனைடெட் கமர்ஷியல் பாங்க் | ... ... | 108 ,, |
| | | ஆக | 778 ,, |

இன்று சோஷலிச அரசாங்கத்தின் பல்லக்குத் தூக்கிகளாயுள்ள பாங்க் முதலாளிகளில் குறிப்பிடத்தக்கவர்கள் :—

| | | |
|---|---|---|
| சிங்கானியா ... ... | 107 | டைரக்டர் இடங்கள் |
| டால்மியா ஜெயின் ... — | 103 | ,, |
| யூபியா ... ... ... | 80 | ,, |
| பிர்லா ... ... ... | 60 | ,, |
| கோயங்கா ... ... | 55 | ,, |
| ஜாட்டியா அண்ணன்-தம்பிகள் | 51 | ,, |
| தப்பார் ... ... ... | 35 | ,, |
| டாட்டா ... ... ... | 21 | ,, |

ஒரு சட்டைப் பையிலிருந்து எடுத்து மற்றொரு பையில் போட்டுக் கொள்வது போல, இந்திய பாங்குகள் தங்கள் டைரெக்டர்களுக்குக் கொடுத்துள்ள கடன்களின் மொத்தம் (1962-ன் கணக்குப்படி) 197 கோடியே 34 லட்சமாகும்.

முன்பக்கத்திலுள்ள அய்ந்தும் இந்திய பாங்க் அமைப்பின் மன்னர்களாகும்.

இவற்றிலுள்ள 55 டைரெக்டர்கள் ஏனைய நிறுவனங்களில் 674 டைரெக்டர் பதவிகளை வகித்து வருகின்றனர். இந்நிறுவனங்கள் அற்பமானவையல்ல; இந்தியப் பொருளாதாரத்தின் ஆணிவேர்-சல்லி வேர்கள்.

எனவே, அடுத்த ஆண்டுக்குள்ளாக வேனும் பாங்குகள் அனைத்தும் அரசாங்க (தேசீய) உடைமைகளாக ஆகிவிடவேண்டும்; ஆகிவிடும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. தவறினால் சோஷலிசப் பாதையிலிருந்து பிரிந்து நெடுந்தொலைவு புதர் நிறைந்த காட்டுக்குள் சென்றுவிட நேரிடும். இது மட்டுமல்ல,

"சோஷலிச அமைப்புக்கு இடைவிடாத, பிடிவாதமான கடின உழைப்பு வேண்டும்; ஒவ்வொரு துறையிலும் ஆழ்ந்த அறிவு வேண்டும்; ஒழுங்கான, உண்மையான கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்; சிக்கனமான நிர்வாகம் வேண்டும்; சோம்பல் கூடாது; திருடக் கூடாது; உழைப்பில் ஒழுங்கு முறை வேண்டும்,"

என்றார், சோஷலிச ஆட்சியை உலகில் முதன் முதல் நிலை நாட்டிய உலகப் பெரியார், லெனின்.

பொது மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான திட்டங்களை வகுக்க வேண்டுமானால் பாங்குகளையும் இயந்திர உற்பத்தித் தொழிற் சாலைகளையும், எஞ்சியுள்ள போக்கு வரத்துக்களையும் உடனடியாகப் பொது (அரசாங்க) உடைமைகளாக்கித் தீரவேண்டும். இதன் மூலம் இடைக்காலத்தில் ஊழல்களும், லஞ்சமும், பிற குறைகளும் முளைக்கத்தான் செய்யும். இவற்றை சகித்துக்கொள்வது பொது மக்கள் கடமை; துப்பாக்கி முனையிலாவது இவற்றை ஒழித்துக் கட்டுவது ஆட்சியாளரின் அவசரப் பொறுப்பு.

---

# நல்ல வழிதான்; ஆனால்...

ஒருவருடைய கருத்துக்கு அல்லது புதிய திட்டத்துக்கு, எதிர் பாராத இடத்திலிருந்து திடீர் ஆதரவு கிடைக்கும்போது, அதில் ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சி உண்டாவது மனித இயற்கை. அரிய பெரிய சாதனைகளெல்லாம் இவ்வாறுதான் உலகில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

> "சாதிகளை ஒழிப்பதற்குக் கலப்புமணம் ஒன்றுதான் வழியாதலால், ஒரே சாதிக்குள் நடைபெறும் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகாதவை என்று சட்டம் செய்தாக வேண்டும்,"

என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசிய சுதந்தரா கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் கூறியுள்ளார். இரு நூறுபேர் வீற்றிருக்கின்ற ஒரு மன்றத்தில் இப்படியும் ஒரே ஒருவர் துணிந்து கூறுகிறாரென்றால் அவர் பாராட்டப்பட வேண்டியவரே!

சாதி ஒழிப்பில் இன்றைய ஆட்சிக்கு உண்மையான கவலை கடுகளவும் கிடையாது. இந்நாட்டின் பெருந் தலைவர்களுக்கு இதில் போதுமான அக்கறை இருந்திருக்குமானால், அரசியல் சட்டத்தில் தீண்டாமைப் பழக்கம் குற்றமாக்கப் பட்டிருப்பது போல் சாதியும் குற்றமாக்கப் பட்டிருக்கலாம். சட்டத்தின் மூலமாக மட்டுமே, இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்நாட்டை அரித்து வருகின்ற சாதிக் கறையானை ஒழித்துவிட முடியாது என்பது உண்மையே; பல திக்குகளிலிருந்தும் பலபேர் ஒரே சமயத்தில் கடுந்தாக்குதல் நடத்தினால்தான் இக்கேட்டை ஒழித்துக் கட்டமுடியும். இதுபற்றிய போட்டிக் கட்டுரைகளில் முதற் பரிசுபெற்ற கட்டுரையை இம்மாதம் வெளியிட்டுள்ளோம்.

எனினும், மத்திய அரசாங்கமும் பார்லிமெண்டும் இத்துறையில் இன்றுவரையில் கவலையற்றிருப்பது வருந்தத்தக்கது.

ஒரே சாதியில் நடக்கும் திருமணங்களைச் சட்டப்படி செல்லாதவைகளாக ஆக்க வேண்டுமென்றால் சக்கிலியர், பள்ளர், பறையர் முதல்

# ரிக்ஷாவும் பல்லக்கும்!

ரிக்ஷா:—அய்யா, பல்லக்கு சுவாமிகளே! நலந்தானா? என்ன, ரொம்ப நாளாக உங்களை இந்தப்பக்கமே காணோமே!

பல்லக்கு:—ஆமாண்டா, ரிக்ஷா! நான் காஞ்சியிலிருந்து சென்னை வந்துவிட்டுப் பிறகு கும்பகோணம், இராமேஸ்வரம், மதுரை போன்ற புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய்விட்டு இன்றுதான் இவ் ஊர் வந்தேன். ஆமாம், நீ எப்படி இருக்கிறாய்? உனக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டதாகப் பத்திரிக்கையில் படித்தேனே!

ரிக்:—ஆமாங்க அய்யா! மனிதனை என்மீது வைத்து மற்றொரு மனிதன் இ(சு)ழுப்பது ரொம்ப ரொம்ப மானக் கேடாயிருக்கிறதாம்! அதற்காக என்னைப் பட்டினிபோட்டு படிப்படியாகச் சாகடிக்கப் போகிறார்களாம்! சட்ட சபையிலே பெரியவர்கள் பேசியிருக்கிறார்கள். என்ன செய்வது? நாகரீகமும், படிப்பும், அறிவும் வளர வளர–பழைய சங்கதிகளெல்லாம் மறைந்து ஒழிய வேண்டியது நியாயந்தானே? பழைய குத்து விளக்கு இன்றைக்கு என்ன ஆச்சு? மந்திரிகள் புதுக் கட்டடம் திறக்கிறபோதும், பழைய புராணப் பிடுங்கல்களின் திருமணத்தின் போதும்தானே காட்சியளிக்கிறது? அதுபோலத்தான்.

பல்:—போடா பைத்தியம்! பழமையையாவது, அழிப்பதாவது? அதெல்லாம் உன்னைப் போன்ற ஏழை முட்டாள்களிடம்தான் செல்லும்! என்னைப்பார்! நீயாவது நேற்றுப் பிறந்தவன். நான் பிறந்து எத்தனையோ ஆயிர வருஷங்கள் ஆகிவிட்டன! ஆனாலும் என்னையும் எனக்குள்ளே உள்ள ஆளையும் சேர்த்து நான்கு பேர்—ஆறுபேர் (இழுப்பதுகூடச் சுலபமாச்சே) தூக்கிக்கொண்டே போகவில்லையா? அதுவும் ஒரு மைலா? இரண்டு மைலா? இரு நூறுமைல், முன்னூறு மைல்! எந்தச் சட்டமாவது என்னை அசைக்க முடியுமா? எந்தக் கட்சியாவது என்னைக் கண்டிக்கிறதா? என்னை ஒழிக்க நினைத்தால் என்ன ஆகும்? அடுத்த மாதமே "மதம் போச்சு! துவேஷம் ஆச்சு! ஒழிக இந்த ஆட்சி" என்ற கூக்குரல் எழும்பாதா? நான் ஒரு யோசனை சொல்கிறேன், கேள்! நீயும் கிழட்டு சாமியார்களைப் பார்த்து ஏற்றிக்கொண்டு போ! அல்லது அந்தமாதிரி வேஷம் போட்டுக் கொண்டாவது உட்காரச் சொல்! உன்னை இழுத்துப் போகிறவனிடம் சொல். "முருகா! முருகா!" என்று கூச்சலிட்டுக் கொண்டே இழுக்கச் சொல்! போலீஸ்காரர் ஏதாவதொரு குற்றத்துக்காக உன் ஆளைப் பிடித்தாலுங்கூட உடனே, "முருகா! முருகா!" என்று கூச்சலிடச் சொல்! ஏறுகிற ஆட்களைக்கூட (ஆணானாலும், பெண்ணானாலும்) "முருகா, ஏறி உட்கார்! முருகா இறங்கு!"

பார்ப்பனர் வரையில்—எல்லா சாதி மக்களுமே-கடுமையாக எதிர்ப்பார்கள். அரசியல் கட்சிகள் அத்தனையும் எதிர்க்கும். ஏனெனில், தன்னைவிடத் தாழ்ந்த சாதி இருப்பது ஒன்றே போதும் என்றுதான் ஒவ்வொரு சாதியும் எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்கிறது. அரசியல் வாதிகளோ, சாதியை மூலதனமாகக் கொண்டுதான் பதவி வேட்டை ஆடவேண்டியவர்களாயிருக்கின்றனர்.

''உயர் சாதி''க்காரர்களால் ''மகாத்மா'' பட்டம் சூட்டப் பெற்ற காந்தியார்கூட சாதியை ஒழிக்க வேண்டுமென்று சொல்லவேயில்லை; மாறாக, ''நான்கு வர்ணமும் அதனதன் கடமையைச் சரிவரச் செய்து வரவேண்டும்'' என்று கூறி, சாதி நச்சு மரத்துக்கு இரும்பு முள் வேலீ கட்டினார்.

சாதியை ஒழிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட வடநாட்டுப் பெருந் தலைவர்களில் ஒருவர் அரை குறை வேலை செய்துவிட்டு மறைந்து விட்டார்; தென்னாட்டுத் தலைவர்களில் ஒருவர் சாதி ஒழிப்பு முயற்சிக்குச் சமாதி கட்டிவிட்டு வேறுபல வேலைகளில் ஈடுபட்டுவிட்டார்.

இந்நாடு விடுதலை பெற்ற பிறகு தனிச் செழிப்புடன் வளர்ந்திருக்கும் நச்சு மரங்கள் இவை:—

1. சாதி
2. மதவெறி
3. லஞ்சம்

இந் நாட்டில் மாற்று மதக்காரர் பலகோடிப் பேரைப் பெற்றெடுத்திருப்பது எது? சாதியை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்து மதந் தான். ஆனாலும் இதைத்தான் இன்றைய அரசாங்கம் (கொள்ளிக் கட்டையினால் தலையைச் சொரிந்து கொள்வதுபோல்) முழுமூச்சுடன் வளர்த்துக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தான் அறுவை (ஆப்பரேஷன்) செய்து நம் உடல் உறுப்பை இழந்த பிறகு கூட இந் நாட்டுப் பெருந் தலைவர்களுக்கு மதஒழிப்புத்துறையில் துணிவும் அறிவும் வரவில்லையே, என்ன செய்வது?

சாதி ஒழிப்புக்கான சட்டதிட்டங்கள், புரட்சி இயக்கங்கள் வந்தாலொழிய இந்நாட்டில் மாற்று மதக்காரர்கள் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருப்பதைத் தடுக்க முடியாது; மதவெறிப் படுகொலைகளையும் தடுக்க முடியாது.

கட்டாயக் கலப்புமணம் பற்றி சட்ட மன்றத்தில் கூறப்பட்ட கருத்தை இன்று அசட்டை செய்யலாம், ஆட்சியாளர். வருங்காலத்திலாவது இதன் தேவையை உணர்வார்கள் என்பது உறுதி.

என்று சொல்லச்செய்! இப்படி ஒரே மாதம் தமிழ் நாடெங்கும் கட்டுப் பாடாகச் செய்யச் சொல்! பிறகு எவனும் உன்மேல் கைவைக்க மாட்டான்! மதம் என்றாலே பயம்!

ரிக்:—பயம்தானுங்க! ஆனாலும் அதுவும் ஆளுக்குத் தக்கபடித் தானுங்க நடக்குது! நாங்கள் கூட்டமாக நிற்கிற இடத்திலெல்லாம் (சிறப்பாக சென்னை மாநகரில்) கோவில் கட்டியிருக்கிறார்கள்! ஆள் நடக்கும் நடைமேடைகளையெல்லாம் பிள்ளையார் கோவிலாக்கியிருக்கிறார்கள்! இந்தக் குட்டிக் கோயிலை இடிப்பதற்கு எந்த வீரனுக்கும் துணிவில்லை; அந்த மாதிரி வீரன் ஒருவன் கூட சென்னை நகரசபையிலுமில்லை; போலீசிலுமில்லை. ஆனாலும் இவ்வளவு பக்தி காட்டியுங்கூட எனக்கே அழிவு காலம் வந்துவிட்டதே! அட, ப்ளேட்ஃபாரக் கடவுளே! எதிலும் சாதிக்கும் பணத்துக்கும் தான் செல்வாக்கு! இதோ, பாருங்களேன், உங்களைப் போலத்தான் கோவில்களிலேகூட நடக்கிறது! ரப்பர் டயர் சக்கரம் போட்ட என்னையாவது ஒரு மனுஷன் நல்ல தார் ரோட்டில் சுளுவாக இழுத்துச் செல்கிறான்! அங்கே பாருங்கள்! 5 பவுண்டு எடையுள்ள ஒரு பொம்மையை 5000 பவுண்டு எடையுள்ள ஒரு வாகனத்தின் மீது வைத்துக்கட்டி அதன் பக்கத்தில் 300 பவுண்டு எடைக்குக் குறையாத மனிதன் (சில சமயம் இம்மாதிரி ஆட்கள் 2-3-பேர்கூட) உட்கார்ந்து கொண்டு இவ்வளவையும் ஆயிரம் பவுண்டு எடையுள்ள பெரிய கம்புகளில் வைத்துக்கட்டி பக்கத்துக்கு எட்டுப்பேர்-பத்துப்பேர் தூக்கிக்கொண்டுதானே போகிறார்கள்? தூக்குகிறவர் தோள்பட்டை பட்டைச்சோறு மாதிரிக் காய்த்துப்போயிருக்கிறதே! பழங்காலத்தில் வேறு வழியில்லாமலிருந்திருக்கலாம்! இக்காலத்தில் இந்த 5 பவுண்டு பொம்மையை ஒரு சைக்கிள் "காரியர்" பின்னால் வைத்துக் கட்டி ஓட்டக் கூடாதா? அதற்கு வாகனம் எதற்கு? கருடாழ்வாரும், மாடும், மயிலும், குரங்கும், பாம்புமா இந்தப் பொம்மைகளைத் தூக்குகின்றன? எதற்காக இந்தச் சிறுபிள்ளைகள் (அறிவில்) இன்னமும் இப்படி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்? அப்படியே வாகனம் தேவையென்று பெரும் புத்திசாலிகள் விரும்பினாலும், வாகனத்தோடு மோட்டார் லாரியில் வைத்துக்கட்டி ஓட்டிக்கொண்டு செல்லக் கூடாதா? இதுமட்டுமா? தேர் என்று சொல்லி......

பல்:—உஸ்! உஸ்! நிறுத்து! நிறுத்து! பேசாதே! பேசாதே! இது மதம்! மதத்துக்கும் தலைவர்களுக்கும் எதிலும் விதிவிலக்குகள் உண்டு! தலைவர்களை ரதத்தில் வைத்து இழுப்பது மட்டும் சரியா? இதுதானா சோஷலிசம்? இது தானா ஜனநாயகம்? - என்று கூடக் கேட்பாய் போலிருக்கிறதே!

ரிக்:—இந்த நாடு உருப்படுமா? எனக்கொரு சட்டம், உங்களுக்கொரு சட்டமா? இதுதானா சமதர்மம்?

பல்:—நாடு உருப்பட்டால் எனக்கென்ன? உருப்படாவிட்டால் எனக்கென்ன? என்னை அசைப்பதற்கும் ஒழிப்பதற்கும் இன்று உயிரோடிருக்கின்ற எந்தத் தலைவனாலும் முடியாது! எனக்குத் துணையாக உள்ள மத கலாசாரத்தைப் பாதுகாப்பதாக அரசியல் சட்டத்திலேயே இருக்கிறது, தெரியுமா? சுப்ரீம் கோர்ட் வரையில் சென்றாவது என்னைக் காப்பாற்றி விடுவார்கள், பல்லக்கு மத பக்தர்கள்!

[ 'ரிக்ஷா ஒழிக! பல்லக்கு வாழ்க! ஓம் முருகா! ஜேய் ஹிந்த்!!—என்ற ஒலிகள் முழங்குகின்றன.]

# பாங்கர் வெங்கடாசலபதி !

இந்நாட்டிலுள்ள இன்றையப் பெரும் பணக்காரர்களில்-கோடீசுரர் என்று சொல்லப்படுபவர்களில் —7—8 பேர்களைப் பற்றி அடிக்கடி கூறப்படும்போதெல்லாம் மனம் புழுங்கி வேதனைப்படுகின்ற ஒரு சிலர், இதோ :

1. வெங்கடாசலபதி ரெட்டியார், திருப்பதி.
2. மீனாட்சி யம்மாள், மதுரை.
3. ரெங்கநாதய்யங்கார், ஸ்ரீரங்கம்.
4. பழனியாண்டவ முதலியார், பழநி.
5. தியாகராசய்யர், திருவாரூர்.

இவர்களில் திருப்பதி ஸ்ரீமான் வெங்கடாசலபதி ரெட்டியார் அவர்களைக் கண்ட (தெரிசித்த) போது அவர் எம்மிடம் கூறியதாவது :

"இந்நாட்டு சோஷலிசத் தலைவர்களும் பொது உடைமைப் பெரியார்களும், சிறு உடைமைச் சிறியார்களும் என் செல்வப் பெருமையைப் பற்றி இவ்வளவு அலட்சியமாக இருப்பது பற்றி வருந்துகிறேன். தலை மயிர் காணிக்கை வாங்கிச் சம்பாதித்தவன்தானே! உண்டியல் பிச்சையெடுத்துப் பொருள் சேர்த்தவன்தானே! ஏமாந்த சோணகிரிகளிடமும், அடிமுட்டாள்களிடமும், பணப்பதுக்கல் பக்தர்களிடமும் சுரண்டிப் பணஞ் சேர்த்தவன்தானே—என்றெல்லாம் என்னை அலட்சியம் செய்கிறார்கள், நாளைக்கே இதை சோஷலிச நாடாக்கி விடுவதாகக் கனவுகண்டு கொண்டிருக்கின்ற வீணர்கள். நான் ஒருவன் உயிரோடுள்ளவரையில் இந்நாட்டு ஏழைகளின்

வாழ்க்கைத் தரத்தை எந்தப் பெரிய தலைவனாலும் உயர்த்தவே முடியாது. பவுனாகவும், வெள்ளியாகவும், பணமாகவும்; மேலும் அவனவன் தலையின் மேலுள்ளதையும் உள்ளே உள்ளதையும் கூடச் சேர்த்துக் கறந்துவிடுவேன்! இதோ என் இரண்டாண்டு வரவுக்கணக்கு :

1961-62ல் 54,96,000 ரூ.
1962-63ல் 58,52,000 ரூ.

இது [உண்டியில் விழுந்த பணம் மட்டும். இனி, உண்டியில் விழுந்த—

## வெள்ளி

1961-62ல் 1,06,000 தோலா
1962-63ல் 1,01,000 ,,

## தங்கம்

1961-62ல் 7,623 ,,
1962-63ல் 9,136 ,,

[ஒரு தோலா வெள்ளி மதிப்பு ரூ. 3; ஒரு தோலா தங்கம் மதிப்பு ரூ. 70.]

சென்ற ஜனவரி மாதத்தில் என் உண்டியல் வருமானம் என்ன தெரியுமா? 8 லட்சத்து 25 ஆயிர ரூபாய்!

எத்தனை கோடி ரூபாய் கிடைத்தாலும் எனக்கு வருமானவரி கிடையாது என்பது நினைவிருக்கட்டும்! இப்பேர்ப்பட்ட செல்வச் சீமானாகிய என்னை சிலர் கேலி செய்யலாம்; அலட்சியப்படுத்தலாம். எனக்கு ஒரு ராஜ்ய சபா உறுப்பினர் பதவிகூடத் தராமலிருக்கலாம்!'

ஆனாலும் இந்நாட்டிலுள்ள எல்லா பாங்குகளிலும் என் படம் இருக்கிறது! பாங்கர் பெருமை பாங்கருக்கல்லவோ தெரியும்! ''பாம்பின் கால் பாம்பு அறியும்'' என்பது போல! சுதந்தரம் பெற்ற பிறகு எல்லா அரசாங்கப் பணிமனைகளிலும் இடம் பெற்றிருக்கிறேன்! பெரிய கடைகளில் நான் இல்லாத கடையே இல்லை! பெருநிதி படைத்த கடவுள்களிலெல்லாம் குபேரக் கடவுள் நான்தான்! கேவலம், அரசமரத்தடிப் பிள்ளையார் மாதிரி யல்ல, நான், வராக அவதாரங்கள் உடல் அரிப்பைப் போக்கிக்கொள்வதற்கும், நாய்மார்கள் தங்கள் இயற்கைக் கடன்களை முடித்துக்கொள்வதற்கும், பயன்படுவதுபோல்!

என்னைப் "பேட்டி" காண்பதற்கே பணம் தரவேண்டும்! எனக்குப் படையல் தரவும் பணம்! என் பெயரைச் சொல்லவும் பணம்! பிறர் பெயரை என்னிடம் சொல்லவும் பணம்!

ஆகவே, நான்தான் இந்நாட்டிற்கே தனிச் சிறப்புடைய உலகப் பெரியார்! பாகிஸ்தான் படையெடுப்பா? அஞ்ச வேண்டாம்! சீனாக்காரன் தாக்குதலா? சீறிவிழ வேண்டாம்! "எப்படியாவது இரு எதிரிகளையும் விரட்டியடியுங்கள்! நாற்பது கோடி மக்களின் தலைமயிரை காணிக்கையாகத் தருகிறோம். ரிசர்வ் பாங்கியிலுள்ள பணத்தை யெல்லாம்-பவுனை யெல்லாம்-உங்கள் உண்டியலில் கொட்டிவிடுகிறோம்," என்று இன்றே வேண்டிக்கொள்க!"

இவ்வாறு எம்மிடம் இயம்பினார், பாங்கர் வெங்கடாசலபதி, என்க.

## மறு உலகமா?

*வெளிநாட்டார் உன்னைப் பார்த்து, "நீங்கள் யாவரும் கடவுள் நம்பிக்கை உள்ள பரிசுத்தமான மக்கள்; நீங்கள் மறு உலகைப் பற்றியே எண்ணி வாழும் மகத்தானவர்கள்", என்று கூறுகிறார்கள். "ஏ! முட்டாளே! நீ அவர்கள் கூறும் முகமனில் மயங்கி விடுகிறாய். வாழ்த்துரை வழங்கவில்லை, அந்த வெளிநாட்டான். அவன் உன்னுடைய காலை வாரிவிடுகிறான்; உன்னுடைய முட்டாள் தனமான எண்ணத்தைக் கண்டு எள்ளி நகையாடுகிறான். நீ இங்கே வாழத் தகுதியற்றவன்; நீ வாழ ஏற்ற இடம் மறு உலகமே" என்கிறான்.*

*இந்து மதத்தினர் ஏன் மறு உலகையே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்? ஆண், பெண் இருபாலாரும் மணத்திற்கு முன் சுதந்தரமாகச் சேர்ந்து வாழாததே ஆகும். மனிதவாழ்வில் இயற்கை அமைத்துத் தந்த மையப் புள்ளியாம் பெண்களைச் சுற்றி இவர்களின் எண்ணம் ஓடுவதை அனுமதிப்பதில்லை; வாழ்வின் தூண்டுகோலை இழந்து வாடுகிறீர்கள். இந்த உலகத்தை இழந்தீர்கள். அடுத்த உலகம் ஒன்றுதான் உங்களுக்காக இருக்கிறது அந்த அடுத்த உலகம் எங்கே இருக்கிறது?*

Prof. Bharat Ram.
("Rationalist")

பழமொழி விளக்கம்:—

# "கல்லாஞலும் கணவன் புல்லாஞலும் புருடன்!"

[ச. செந்தில்நாதன்]

பண்டை நாளில் போர்க்களத்தே தம் வீரத்தை நிலைநாட்டி, மார்பிலே புண்பட்டு இறப்போரைப் பாராட்டுவது தமிழ் மரபு. அவ்வாறு இறந்துபடும் வீரர் தம் பெயரையும் பெருமைகளையும் கல்லிலே எழுதி, ஆற்றங் கரைகளிலும், ஏனைய பொது இடங்களிலும் நிறுத்தி வைத்துச் சிறப்புச் செய்தனர் தமிழர்கள்.

அந்தக் கல்லை, அந்த வீரனுடைய மனைவி நீராட்டிப் பூதூவித் தன் கணவனுகவே எண்ணி வழிபடுவாள். புறநானூறு முதலிய நூல்களில் இதற்குச் சான்றுகள் உள்ளன. "ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை, நடுகல் தொழுது பரவும்", என்ற வரியையும் நினைவில் கொண்டால், "கல்லானுலும் கணவன்" என்பது இந்த வரியின் அடிப்படையிலே எழுந்தது என்ற உண்மை எளிதில் புலனுகும்.

அடுத்துப் "புல்லாஞலும் புருடன்" என்றதன் விளக்கத்தைப் பார்ப்போம். நெற்கதிர் முற்றிவரும் நாளில் புல்லாலும் வைக்கோலாலும் மனித உருவம் ஒன்றைச் செய்து நிறுத்திவைக்கும் பழக்கம் இன்றும் நிலவி வருவதை நாம் அறிவோம். அதைச் சிலர், "புல்லாள்" என்றும், வேறு சிலர், "சோளக் கொல்லை பொம்மை", என்றும் அழைப்பர்.

அதனிடம் வீரச் செயல் எதுவும் இல்லையாயினும், இரவில் வருவோர்க்கு ஆள் போல் தோன்றி அச்சத்தைத் தரும். உழைத்து வாழ முடியாமல் வழிப்பறி செய்து வாழ்பவரையும் "புல்லாள்" என்று அக்கால மக்கள் அழைத்தனர். இதனைப் பதிற்றுப் பத்து என்னும் சங்கநூல், "புல்லாள் வழங்கும் புல்லிலை வைப்பின் புலம்", என்று குறிக்கின்றது.

தன்னை மனைவியாக ஏற்றுக் கொண்ட கணவன் வீரமில்லாத "புல்லாளாயினும்" அவனை வெறுத்து ஒதுக்கிவிடாமல், கணவனுகக் கொண்டு வாழவேண்டியது பெண்களுக்குரிய அக்கால அறமாகும். இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே "புல்லாஞலும் புருடன்" என்ற பழமொழி தோன்றியது.

(சான்று:—ஔவை. துரைசாமிப் பிள்ளையின் "நந்தா விளக்கு")

# ஷேக்ஸ்பியர் : குறிப்புக்கள்

[கு. கு.]

மேலட்டையில் காட்சி தருகிறார். இம்மாதம் அவரது நானூறாவது பிறந்த நாள் (23-4-1564) உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

மாக்பெத், ஜூலியஸ் சீசர், ஒதெல்லோ, ஹாம்லெட், கிங் லியர், விண்டர்ஸ் டேல், டெம்பஸ்ட், ஆஸ் யூ லைக் இட்-போன்ற உலகப்புகழ் பெற்ற இங்கிலீஷ் நாடகங்களை எழுதிய மாபெரும் கவிஞர், நாடக நூலாசிரியர். எழுதிய மொத்த நாடகங்கள் 37; கவிதைகளும் சில. இவரது நாடகங்கள் பிற மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு நடிக்கப் படுகின்றன.

ஷேக்ஸ்பியர் பிறந்தது, ஸ்ட்ராட்ஃபோர்டு-அன்-ஏவன் என்ற சிற்றூரில். தந்தை வணிகர். ஷேக்ஸ்பியர் பனிரெண்டு வயது வரையில் இலக்கணப்பள்ளியில் படித்தார்; அதற்குமேல் படிப்பதற்கு வசதியில்லை.

19 ஆவது வயதில் 25 வயதுடைய பெண்ணை அவசரமாக மணந்து கொண்டார். முதலில் ஒரு பெண் குழந்தை; பிறகு ஆணும் பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகள். மகன் பதினோராவது வயதில் இறந்து விட்டான்.

ஷேக்ஸ்பியர் லண்டனுக்குச் சென்று நாடகக்கலை பயின்றார். நடிகராகவும், நாடக ஆசிரியராகவும் பயிற்சிபெற்றார். நாடகக் கம்பெனியில் பங்குதாரராகச் சேர்ந்து விரைவில் முன்னேறிப் பெரும் பொருள் ஈட்டினார். தம் சிற்றூரில் பெரிய வீட்டைக் கட்டினார்; நிலம் வாங்கினார். 46-ஆம் வயதில் ஓய்வுபெற்று அய்ந்தாண்டு அமைதியாக வாழ்ந்து 1616-ஆம் ஆண்டில் 52-ஆம் வயதில்—காலமானார்.

கற்பனை சக்தியில் ஒப்புயர்வற்றவர்; ஆனாலும் அவரது நாடகங்களின் மூலக் கதைகள் முழுதும் கடன் வாங்கப்பட்டவையே.

ஷேக்ஸ்பியர் தூய்மையான கலைஞர்; சீர்திருத்த வாதியுமல்ல, தத்துவ ஞானியுமல்ல. "இதுதான் ஷேக்ஸ்பியரின் கொள்கை", என்று சுட்டிக் காட்டக் கூடியது ஒன்றுமேயில்லை. ஒரு பொது உண்மையோ, அல்லது அரசியல் கொள்கையோ, (பர்னார்ட்ஷாவுக்கு சோஷலிசம் இருந்ததைப் போல), அல்லது சமயக் கொள்கையோ அவரிடமிருந்து கிடைக்கக் கூடியது எதுவுமில்லை. அவரது நாடக பாத்திரங்களின் வாயிலிருந்து பல்வேறு கருத்துக்கள் —இடத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி— கொட்டப்பட்டிருப்பதைப் படித்து இன்புறலாம். அவ்வளவே! படிக்கப்படிக்கச் சுவை தருபவை அவரது நாடகங்கள். உண்மை நிறைந்த தாராளப் பண்பை உலகுக்குக் கற்பித்த ஆங்கிலேயருக்கு ஷேக்ஸ்பியர் சரியான பிரதிநிதியாவார்.

கவிதைப் பகுதி

# மக்கள் அரசிலே!...

[மனைசை ப. கீரன் பீ. ஏ.]

செந்தமிழ்த் தலைநகர் சென்னைக் கோட்டையில்
நந்தமிழ் நாட்டின் செயலாண்மைப் பணிமனை
வேலை செய்யும் மிகப்பல மக்களும்
மாலை நேரம் வருகிற பொழுது

மங்காப் புகழின் வாயில் வழியாய்ப்
பொங்கும் ஆறுபோல் போகும் சாலையில்
கோட்டை நிலையம் நோக்கிய பாதையின்
காட்சி ஒன்றினைக் கண்டவாறு உரைப்பேன்.:

கையும் காலும் ஒவ்வொன்று இல்லா
நையும் நிலையின் நாயகன் ஒருவன்
ஊன்றுகோல் ஒன்றுடன் ஒடுங்கி நின்றான்.

தோன்றும் எளிமையில் துலங்கும் தமிழரின்
பண்புகள் பொலியும் பாவை ஒருத்தி
அன்புடன் அருகினில் அமர்ந்து தன்தலை
சீவிடும் செயலினில் சிந்தை செலுத்தினள்!

காவியம் புனையாக் கவின்மிகு முகத்தில்
உள்ள நிறைவினில் வெள்ளமாய்ப் பொங்கும்
கள்ளமில் களிப்பின் காட்சி தெரிந்தது!

காண்கிற நாயகன் கண்களில் ஒளியும்
மாண்புறு மனத்தின் மகிழ்வு மலர்ந்தது!

அன்னையின் உதடுகள் அன்புடன் பயிற்றும்
பொன்னுரை ஏதோ புகன்றிட அசையும்!

இருவரும் நோக்கிய ஒருதிசை தன்னில்
அருகினில் சிறிது தொலைவினில் ஆங்கே
வளரும் வாழைக் கன்றுகள் போன்ற
இளையோர் இருவர் ஏதும் அணியாமல்
மலரும் வாயால் மழலை பேசினர்;
தளரும் கைகளைத் தாழ்ந்து நீட்டினர்!

"ஒருகைகால் இல்லாதவர்; உதவி செய்வீர் !
ஒருகாசு தருவீர், ஐயா!" என்றனர்.

அன்னை முணுமுணுப்பு அப்படியே சொன்னர்.

தன்சேய் இருவரும் தன்சொல் தன்னைத்
தவருமல் சொல்லும் தன்மை கண்டே
உவகை கொண்டனர், கவலைகொள் பெற்ருேர்!

தந்தை நொண்டி; நொந்திடும் முடவர்;
நந்தா அன்பின் நல்லவள் மனைவி !
குத்து விளக்குபோல் குழந்தைகள் இருவர்.
இத்தனை இருந்தும் இரப்பதே தொழிலாம் !
பிச்சை கேட்டுப் பிள்ளைகள் வேண்டக்
கொச்சைச் சொற்களில் கூறுதல் பொருட்டே
அன்னை சொல்வதை அவ்விரு மக்கள்
கன்னல் மொழியினில் சொன்னவை கேட்டவள்
வறுமை வருத்தம் மறைந்து கரைய
வெறுமை முகத்தினில் விளக்கம் சுடர்விட
மலரே போல மகிழ்வினில் மலர்ந்தாள்.

பலரும் கண்டு பாலகர் தம்மைச்
சான்ருேர் எனக்கேட்டுச் சாலவும் மகிழ்வதே
ஆன்ருேர் கண்ட அருநிலை யாக,
இச்சகம் கேட்டுப் பிச்சை எடுக்கும்
கொச்சை மொழிக்குக் குளிர்ந்து போய்அவள்
மகிழும் நிலையே வைகும் நாடோ?—
புகழுறும் நாடெனல் பொய்யுரை தானே?
வயிற்றுக் கவலை மாயா நாடோ?
பயிற்றலும் கற்றலும் பசிக்கே அடிமையோ ?

தொல்லை நிலையினில் துன்புறும் இனையோர்க்குச்
சல்லியும் காசும் தந்து செல்வதா ?......
அன்னவர் குடும்பம் அமைத்து வருவாய்ப்
பொன்னும் பொருளும் பெற்றுப் பன்னலம்
ஈட்டி வாழ எல்லாம் செய்து
மாட்சிமை வளர்ப்போம் மக்கள் அரசிலே!

---

# செத்துவிட்டான் சிவன்!

[புலவர் புத்தூரான்]

1

மதுகுடிக்க வண்டினங்கள் பூவை நாடும்
மலர்ச்சோலை அருகினிலே அமைந்த கோயில்;-
இதயத்தில் பக்திதனை ஏற்றி, என்றன்
இருகண்ணை 'தியானத்தில்' மூடி நின்றேன்;
பதனீரைப் பருகுதற்கே உதவு கின்ற
பனையோலை சலசலக்கத் திரும்பிப் பார்த்தேன்;
புதுக்கருத்து பலசொல்லும் அன்புத் தம்பி
புத்தூரின் 'வில்லவ்னும்' சிரித்து நின்றான்;

2

"நித்தநித்தம் நீவணங்கும் ஈசன், இந்த
நீள்புவியை விட்டிறந்து போனான்," என்று
மெத்தமெத்த நான்புகழும் தம்பி, கோபம்
மேருமலை போல்எனக்கு வரவே சொன்னான்;
"சித்தந்தான் குழம்பியதோ? அன்றி யுன்றன்
சிந்தனைதான் மாண்டதுவோ? நமக்கு வாழ்வில்
முத்திதரும் ஈசனைப்போய் இறந்தான் என்றே
மூளையின்றிச் சொல்லாதே!" என்று சொன்னேன்.

3

இத்தரையில் நீவணங்கும் ஈசன்; ஆமாம்
எங்குள்ளான்? சொல்லிடுவாய்; தன்உழைப்பில்

பித்துமனம் கொண்டவர்கள் உறுதியின்ற
பேரின்பம் வேண்டிநின்ற போதும்;தம்மைத்
தொத்துகின்ற துயர்துடைக்க முனைந்திடாமல்
துணைவேண்டித் தொழுதுநின்ற போதும்;பல்லோர்
நித்தநித்தம் நினைந்துள்ளும் காரணத்தால்
நிமலனும்தான் 'விக்கிவிக்கிச்' செத்துவிட்டான்;

4

"மூவுலகைப் படைத்தளிக்கும் சிவனும் உள்ளான்;
மூடனே!நீ அறிந்திடுக;" என்று சொன்னால்
பூவுலகில் அவன்படைப்பில் ஏழைஎன்போர்
புழுவாகத் துடிக்கின்றார்; சாகின்றாரே;
கூவியழும் ஏழையரின் குரலைக் காது
கொடுத்துத்தான் கேட்டானோ? அவர்கள் வாழ்வில்
தாவிவரும் துன்பத்தைத் துடைத்திட் டானோ?
தந்தானோ இன்பத்தை? இல்லை என்பேன்!

5

பாரினிலே நீதிகாப்பான் இறைவன் என்றால்
பாடுபடும் உழைப்பாளர் உழைத்து மாள
ஊரினைத்தான் ஏய்க்கின்ற செல்வர் கூட்டம்
உவகையுடன் வாழ்கின்றார்; ஏனோ சொல்வாய்?
நேர்மையுடன் இறைவனென்பான் இருப்பான் ஆனால்
நீள்புவியில் இந்நிலையை மாற்றல் வேண்டும்;
பாரினிலே அவன்படைப்பில் உயர்வு தாழ்வு
பகுப்பேனோ? சாதியேனோ? சொல்வாய்! சொல்வாய்!

6

இத்தரையில் இறைவனென்போன் இருந்திட் டாலே
இழிநிலைகள் இல்லாமல் இருத்தல் வேண்டும்;
"செத்துவிட்டான் சிவனெ"ன்று சொல்லும் கூற்று
சிறிதளவும் பொய்கலவா உண்மை என்று
முத்தமிழைப் பயில்கின்ற அண்ணா நேர்வாய்!
முனைந்திடுவாய் இக்கருத்தைப் பரப்புதற்கே;
இத்தரையின் தாழ்வுநிலை போக்கி வாழ்வாய்!
எனச்சொன்னான் வில்லவனும்; தெளிவு பெற்றேன்!

# ‘நுந்து கன்று’

[உ.க.]

*[ இந்துமதக் கோயில் என்றாலே சமஸ்கிருதம்! இன்றும் தமிழனின் ‘கடவுள்’களுக்குத் தமிழ் பிடிப்ப தில்லை! வடமொழியில் தான் வழிபாடு! அறிமுகம்! யாவும். ஆகவே கோவில்களில் நீண்டகாலம் நெறியாள ராயிருந்த இந்தக் கட்டுரையாளர், வேண்டுமென்றே நிறைய வடமொழிச் சொற்களைப் பெய்து, அதன் மூலம் நகைச்சுவையைப் பெருக்கியுள்ளார், இக்கட்டுரையில். கோவில் வழக்கு (“பரிபாஷை”)ச் சொற்களில் தனி நகைச்சுவையைக் காணலாம். இன்றையக் கோவில் கள் தமிழர்களுக்காகவோ, தமிழுக்காகவோ இல்லை; இதுபற்றி பக்தர்களுக்கும் புலவர்களுக்கும் கடுகளவும் கவலையில்லை! ‘கடவுள்’ பெருமையைப்பற்றியே ஒரு கூட்டம்! “தமிழின் தொன்மை”ப் புகழ்பற்றியே மற்றொரு கூட்டம்! மான உணர்ச்சிபற்றி இரு கூட்டத் தாருக்கும் அக்கறையில்லை. இவ்வேதனையில் எழுந்தது தான் இக்கட்டுரை! ]*

எங்கள் கோயிலில் தேவாரப் பண் ஓதும் ஓதுவார் திருவாசகத் திலுள்ள திருகோத்தும்பி என் னும் பகுதியில், “நோயுற்று மூத்து நான் ‘நுந்துகன்ரு’யிங்கி ருந்து” என்ற முதலடியில் தொடங்கும் செய்யுள் ஒன்றை இசையோடு பாடி, “நுந்து கன்று” என்பதற்கு, “வெறுத்து ஒதுக்கப்பட்ட கன்றுபோல” என்ற பொருளும் சொல்லி, “தேயுற்ற செல்வ! என்னை உம் மிடத்தே வந்து சேரும்படி ஆண்டுகொள்வதெப்பொழுது?” என்று நெஞ்சிலே கைகளை வைத்துத் தேம்பி அழுவதைப் பலமுறை கண்டதுண்டு. இந்து மதக் கோயில்களில், வெளித் துறைக் கோயில் அன்ருட அலு வல்களை நிறைவேற்றிவரும் பிராமணரல்லாத ஊழியர்கள் எல்லோரும் தேயுற்ற செல்வ ரால் வெறுத்து செலுத்தப்பட்ட “நுந்துகன்றுகள்” தாம் என்று சொல்ல வேண்டும்.

அது ஏன், என்று விளக்கு முன் கோவிலின் தலையாகிய கர்ப்பக்கிரகத்திலிருந்து அதன் வாலாகிய கொடிக் கம்பம் வரை வரிசையாகப் பல கட்டங்களில் அமர்ந்து அலுவல் புரியும் தேவா லய “சேவகாவிர்த்தி”களின் வகைகளைச் சுருக்கமாகப் பார்ப் போம்.

''ஸ்தானீகம்; மந்திர புஷ்பம் சமர்ப்பித்தல், எக்கியோபவீதம் (பூணூல்) 'சப்ளே செய்தல்' சாமிக்கு 'சோடசா உபசாரம் பூசைக்கு 'எடுபிடி' சாமான்களை எடுத்துக் கொடுத்தல், சுயம் பாகம், பரிச்சாரகம் முதலிய 'தேவதாகிரியை புரிவோர்" கர்ப் பக்கிருகத்திலும், அதற்கு அடுத்த அர்த்த மண்டபத்திலும் நிறைந்து கிடப்பர். இவர்கள் பிராமணச் சிப்பந்திகளாவர்.

மற்ற மகா மண்டபம், சுற்றுப் பிரகாரம்,துவஜஸ் தம்பம் அடுத்த திறந்தவெளி முதலிய இடங் களில் ஏராளமான பிராமணரல் லாத சேவகர்கள் தேனடையில் ஈ மொய்த்தாற் போல் ஒரே கூட் டமாகக் கூடி நிற்பர்.

பின் சொன்ன இவர்கள்தாம் அதிகாலையில் 'சாமி திருமஞ்ச னத்திற்குத் தண்ணீர் எடுப்பதி லிருந்து, இரவு அருத்தசாம பூசை முடிந்து ஆண்டவன் தன் பள்ளிகொள்ள, சோபன அறை புகுந்து, கதவைத் தாளிட்டுக் கொள்ளும் வரை கோவிலின் அன்றாட அலுவல்களை ஓட்டமும் நடையுமாய்த் திரிந்து, சிறிதும் அயராது நிறைவேற்றி வருப வர்கள். இவர்கள் சேவிக்கும்படி உத்திரவிடப் பட்டிருக்கும் உத்தி யோகங்களாவன:— கோயிலின் உள்ளும் வெளியும் கனத்த நாத இசை வெள்ளம் எங்கும் பரப்ப நிறைந்து வழியச் செய்யும் 'பெரியமேளச் சேவுகம்'; ஆட லும் பாடலும் கொண்ட சின்ன மேள ஊழியம்; திருவிளக்குப் போடுதல்; கைத்தீபம் ஏந்துதல் (பெண் ஊழியக்காரி) மலர் மாலே தொடுத்துக் கொடுத்தல்; சாம்ப ராணி தூபக்கால் தூக்கிப் பிடித் தல்; ஒய்யாரமாக சாமரை விசுறு தல்; திருவலகு எடுத்து கோயில் பெருக்குதல்; நெய் தீவட்டி பிடித் தல்; பிரார்த்தனை முன் ஒப்பந்தப் படி பக்தர்களின் தலைமுடி சிரைத்து இறக்கி வைத்தல்; பல் லக்குச் சுமத்தல்; தேவாலய ஆதீன அதிர்வெடி போடுதல், மெய்க்காவல், இவை போன்ற இன்னும் பல ஊழியங்கள் அந் தந்தக்கோயிலின் வருவாய்க்குத் தகுந்த அளவு நியமனம் பெற்றி ருக்கும்.

இவர்கள் எல்லோரும், கல் சிலைக்குள் 'ஆரோகணமாகியிருக் கும் சர்வேசுவரன்' தான் வீற்றி ருக்கும் கர்ப்பக்கிரகத்திற் குள்ளோ, அன்றி அதற்கடுத்த பிராமண சிப்பந்திகள் அலுவல் பார்க்கும் அர்த்த மண்டபத்திற் குள்ளோ தலைநீட்டிப் பார்க்கவும் அனுமதியாமல், வெருட்டி வெகு தொலைவில் எட்டாக்கையாக் நின்று சேவிக்கும்படி அருள் கூர்ந்திருக்கிறார் என்றால், இந்த "பிருகிருதி"களை மாணிக்கவாச கர் பாடியிருப்பது போல், ''தேயுற்ற செல்வர் 'நுந்து கன்று'க ஓட்டியிருக்கிறார் என்று தானே சொல்ல வேண்டும்?

## வெண்டைக்காய்

வெண்டையின் தாயகம் ஆஃப்ரிக்கா என்று கூறப்படு கிறது; மேற்கு இந்தியத் தீவு கள் என்றும் சிலர் கூறுவர். இதன் தண்டு காகிதம் செய்யப் பயன்படுகிறது.

வெண்டைக்காயில் ஏ, பீ, சி —வைட்டமின்கள் உண்டு.

| | |
|---|---|
| ப்ரோட்டின் | 2·20 |
| கொழுப்பு | 0·74 |
| மாச்சத்து | 7·74 |
| இரும்பு சத்து | 1·54 |

சத விகிதம் இருக்கின்றன.

## இசைவாணர் இழிநிலை

இந்த ஊழியர் வரிசையில் முதல் எண்ணிக்கையாக உள்ள பெரிய மேளச் சிப்பந்திகளை மட்டும் இன்று கவனிக்கலாம். இவர்களைப் பற்றி எழுதும் போது மனம் தளர்ந்து சோர்வு கொள்ளுகிறது! . எவ்வளவு பெரிய இசைப் புலவர்கள் இவர்கள்! எல்லோராலும் எளிதில் கற்றுக்கொள்ள இயலாத 'சங்கீத வித்தை'யை அரும்பாடு பட்டுப் பல நாள் தொடர்ந்து விடா முயற்சியோடு பயின்ருலன்றி இந்தக் கலையில் தேர்ச்சி பெற முடியாது! சிறப்புமிகுந்த நாத அறிவு பெற்ற இந்த வித்வான்கள் இன்று கோயிலில் இருக்கும் அவல நிலையை நினைந்தால் மனம் கசிவதில்வியப்பேது? பெரியமேளக்காரர் கோயிலின் மகாமண்டபத்தின் முன் தங்கள் தோல் கருவி, துளைக் கருவி முதலிய உபகரணங்களைக் குழந்தை போல மடியில் கிடத்தி, குருக்கள் பூசை மணி ஒலி உள்ளிருந்து கேட்கும் வரை கல் தூண்களில் சோர்ந்து சாய்ந்து தூங்கி ஆடியவாறு இருக்கும் காட்சியைக் கண்டால், யாருக்குத்தான் கழிவிரக்கம் எழாது?

அவர்கள் வாழ்வின் தொடக்கத்தில் இருந்த முகப்பொலிவு, மிடுக்கான நடை, துடுக்கான பேச்சு, முதலியவைகளெல்லாம், கோவில் உத்தியோகம் ஏற்றுக் கொண்ட நாளிலிருந்து படிப்படியாய்த் தேய்ந்து மறைந்து இன்று இருக்குமிடந்தெரியாமல் ஒளிந்து கொண்டனவே! காரணமென்ன? உலகம் முழுதும் தம் அருளால் நிரப்பி, அவ்வருளுக்குள் கலந்து நிற்கும் பரம்பொருளான ஆண்டவனின் திருச்சித்தம் இவர்கள் மட்டும், நுந்து கன்ருக இருக்கப் பணித்தது போலும், என்று மனம் தேர்வு கொள்வதும் தகுந்த விடையாகக் கொள்ள முடியவில்லையே!

## மற்றவர் உயர்நிலை

அதே கோயிலில் உள்துறை சிப்பந்திகளான ஏறக்குறைய எல்லோரும் வாழ்வின் முன்னேற்றம் கண்டு வாழ்கின்றனர். உதாரணமாக குருக்கள் சுவாமியின் குமாரர் மருத்துவக் கல்லூரியில் இடம்பிடித்து 'டாக்டர்' உத்தியோகத்திற்குப் பயிற்சி பெற்று வருகிருர். அர்ச்சகர் அய்யங்காரின் திருமகள் நடனக்கலை பயின்று அதனையே தொழிலாகக் கொண்டு பல படக்காட்சிகளில் தோன்றி ஆயிரக் கணக்காகப் பொருள் திரட்டிவருகிருர். கோயில் சுயம்பாகம் ஊழியர் சாம்பய்யர் கிரகத்தில் தரித்திரம் இன்னதென்றே தெரியாது. மந்திர புஷ்ப நாமாவளி ஊழிய அய்யர் பனை ஓலை ஏட்டுப் பிரதியில் உள்ள வடமொழிச் சுலோகங்களை அச்சுப் பிரதிகளாக மாற்றி அவைகளுக்குத் தமிழில் "பாஷ்யம்" எழுதிப் பொருளும் புகழும் குவித்து வருகிருர். உள்துறை சிப்பந்திகளுள் ஒருவருக்காவது சொந்த இரண்டு கட்டுடைய ஓட்டுவில்லை வீடு இல்லாதவர் இல்லை. ஆனல் நமது வெளித்துறை சிப்பந்திகளான பெரியமேள வித்வான்களுக்கு கோயில் இடத்தில் இடுப்பளவு மண் சுவரின்மேல், பனை ஓலை வேய்ந்த 'மாளிகை'' தான் சொந்த இல்லம்! கோயில் அதிகாரிகள் என்றைக்கு வேண்டுமானுலும் அங்கிருந்து இவர்களை அப்புறப்படுத்தலாம்!

இவர்களுடைய வறுமை நிலையை என்னென்று விவரிப்பது? தங்களுக்கு ஆதியில் 'மான்யமாக' அளித்த இனம் பூமிகள் பலவித வில்லங்கங்களுக்

குட்பட்டு பெரிய நிலப் பிரபுக்கள் கையில் இருப்பதால், அவர்களிட மிருந்து ஏதோ பிச்சை பெறுவது போல அற்பப் பணம் ஆண் டொன்றுக்குக் கிடைக்கும். அந்த வருவாய் யானைப் பசிக்கு சோளப் பொறி போட்ட கதை யாக முடிகிறது! இந்த நிலையில் அவர்கள் மனிதர்களாக உயிர் வாழ்வதெவ்வாறு?

ஒரு பக்கம் கிழிந்துபோன தன் தவுலுக்கு கந்தைத் துணியை உள்ளுக்குக் கொடுத்து தாமே நூலால் தைத்திருக்கிறார் தவில் வித்வான்!

நாதசுர வித்வான் தனது நாத சுரக் குழாயில் கண்ட சிறு வெடிப்புகளுக்கு சோற்றையும் அடுப்புக்கரிப் பொடியையும் பிசைந்து விரிசலில் தடவி, தாம் குழாய்க்குள் ஊதி அனுப்பும் ராகங்கள் தப்பித்து இடையில் வெளியில் ஓடிவிடாதபடி கண் காணித்து வருகிறார்! தம் கருவி களைச் செப்பனிடக் கூட காசு இல்லாத கொடுமையை என் னென்றுரைப்பது! பரமசிவ பக் தர்களான நீங்கள் மட்டும் ஏன் அவதியுறவேண்டும், என்ற என் கேள்விக்கு கைத்தாளம் ஊழிய ரான இளைஞர்,

உள்துறை-வெளித்துறை சிப் பந்திகளுக்குள் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்குப் பொருத்தமான கீழ்க்கண்ட காரணம் ஒன்று சொன்னார்:—

''சிவனுக்கு இரண்டு மனைவி கள் என்பது புராண வரலாறு அல்லவா? கோயில் உள்துறை பிராமண ஊழியர்கள் சிவபெரு மானின் இளைய மனைவியின் குழந்தைகள். வெளித்துறை சிப்பந்திகளான பிராமணரல் லாதாராகிய நாங்கள் மூத்த தாரத்தின் மக்கள்'' என்றார். சரிதானே!

இந்துமதம் வகுத்த சைவப் பிரிவும் வைணவப் பிரிவும் ஒன் றைத்தான் வற்புறுத்திப் பறை சாற்றுகின்றன; சாமான்ய மக்க ளுக்கு, பக்தி, கர்மம், ஞானம் முதலிய யோகங்கள் சாத்திய மற்றவை. மனித கோடிகள் உய்ய ''சர்வேசுவரனைச் சரணு கதி அடைவது ஒன்று தான் வழி'' என்று கவிதார்க்கிக கேசரி கள் ''நிர்தாரணம்'' செய்திருக்கி றார்களாம்! பகவத்கீதையில் கீதாசாரியன் உபதேசிப்பதும் இதுதானும்! இவைகளுக்கு எடுத்துக் காட்டாக ''கோயிலே புகலிடம் அங்கிருக்கும் ஆண்ட வனே கதி'' என்று கிடக்கும் கோயில் ஊழியர்களைவிட, சரணு கதிப் படலம் படிப்பவர் வேறு யாரும் இல்லை. அவர்கள் 'கதி' இந்தத் திருக்கோலத்தில் இருப் பானேன்?'' இவைகளையெல் லாம் பிறகு ஆராயலாம்.

---

''ஏராளமான புத்தகப் படிப்பின் பயனாக ஒரு மனிதனுக்கு அறிவு பிறக்கவில்லையென்றால் அப் படிப்பு அவனை வீணனாக வும் செறுக்குடையவனாகவும் ஆக்கிவிடுவது இயற்கை.''

—அடிசன்

டாக்டர் எம். ஜே. கே. தவராஜ், M. A., Ph. D.

# முதலாக்கம்

*[முதலீடும் உற்பத்தியும் பெருக்கும் முயற்சிபற்றியும், வெளி நாடுகளின் பொருளுதவியிலுள்ள சிக்கல்களைப்பற்றியும், அரசாங்கம் பொருளாதாரம், சமுதாயம், கலாச்சாரம்–ஆகிய மூன்று துறைகளிலும் மக்களை உயர்த்த வேண்டுமென்பது பற்றியும் தெளிவாகப் பிளந்து காட்டுகிறார், கட்டுரையாளர்.]*

பயிர் பச்சைகள் வளர வேண்டுமானால் பொருத்தமான நீர்வளம் நிலவளம் வேண்டும். வெப்ப தட்ப சூழ்நிலை ஏற்ற வகையில் அமைய வேண்டும். நன்றாக உழுது உரமிட வேண்டும். நல்ல வித்துக்களை உரிய காலத்தில் ஊன்ற வேண்டும். மேம்பட்ட செயல் முறைகளையும் கருவிகளையும் கையாள வேண்டும். களைகளைப் பிடுங்கிப் புல்லுருவிகளை வேரறுக்கவேண்டும். ஆடுமாடு புகுந்து பயிரை அழித்துவிடாமல் வேலியிட்டுத் தடுக்க வேண்டும். பூச்சி பொட்டு விழுந்து பயிரை நாசம் செய்யாமல் பாதுகாக்க வேண்டும். நிலம், மனிதன், கருவிகள் ஆகியவற்றிடையே உள்ள உறவு முறைகள் சீராக இருக்க வேண்டும். ஆக்கமாக உழைத்து மேனி காண வேண்டும் என்ற ஆர்வம் உழைப்பாளரை உந்த வேண்டும். வளர்ந்துவரும் விஞ்ஞான அறிவை ஆட்கொள்ளும் ஆசையும் அனுபவத்தால் அறிவைப் பெருக்கும் ஆற்றலும் வேண்டும். இன்ன பிற துறைகள் ஒருங்கே பொருந்துமானால் பயிர்வளம் கொழிக்கும் என்பதில் ஐயமில்லை. தாவரங்களின் வளர்ச்சியைப் போலவேதான் பொருளாதார வளர்ச்சியும் என்பது கண்கூடு. பொருளாதாரத்தில் விவசாயம் மட்டுமின்றி, தொழில், போக்குவரத்து, வாணிபம் அனைத்துமே அடங்கும். இப்பொருளாதார வளர்ச்சி இயற்கை வளம், உழைப்பு நல்கும் மக்களின் தரம், அவர்களது முயற்சிகளுக்குப் பக்க பலமாக நின்று உதவும் மூலதனம், தொழில் அறிவு, உற்பத்திச் சாதனங்களிடையே உள்ள உறவுமுறை ஆகியவற்றைப் பொருத்தது என்பது தெளிவு. இவற்றுள் எல்லாம் இருந்தும் போதிய முதல் இல்லாது போனால் பொருளாதார வளர்ச்சி தடைப்படும்.

## மூலதனம் என்றால் என்ன?

முதல் (மூலதனம்), முதலாக்கம் (முதலீடு), முதல் திரட்சி (மூலதனத் திரட்சி) போன்ற பல கலைச்சொற்கள் பொருளாதார நூல்களில் உலவி வருகின்றன. இச்சொற்களின் சரியான பொருளைப் புரிந்து கொள்ளுவது மிகமிக முக்கியம். நிலம் இயற்கையால் அமைந்ததோர் உற்பத்திச் சாதனம். மூலதனம் அப்படியல்ல; செயற்கையின்பாற் பட்டது. இயற்கையும் மனித உழைப்பும் இணைந்ததே மூலதன

மாக உருவெடுக்கிறது என்னலாம். கார்ல் மார்க்சின் மரபில் வந்தவர்கள் இயற்கை வழங்கும் செல்வங்களை அன்பளிப்பாகக் கொண்டனர். அதன்படி முன்னுள் உழைப்பின் திரட்சியே மூலதனம் என்று வலியுறுத்தினர்.

மூலதனம் என்பது வீடு, கார்... போன்ற நுகர்வுப் பொருட்களாகவும் வடிவெடுக்கலாம்; எந்திரங்களையும், ஏனைய கருவிகளையும் போன்ற முதற்கருவிப் பொருள் வடிவாகவும் அமையலாம். உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் முதலைக்கூட நிலையுறு முதல் என்றும் நடைமுதல் என்றும் பகுக்கலாம். கட்டடங்கள் எந்திரங்கள் போன்று மாறுமல் நிலைபெற்று நிற்பவற்றை நிலையுறு முதல் என்று அழைபபர். இவை தவிர, உற்பத்தி நிலையங்கள் எப்பொழுதும் ஓரளவு கச்சாப் பொருட்களை இருப்பாக வைத்திருப்பது வழக்கம். ஆலையுள் புகுந்த கச்சாப் பொருள் முழு வடிவம் பெறுமல் 'அரைகுறையான நிலையிலும் இருக்கலாம். முற்றுப் பெற்ற பொருள்களுங்கூட விற்பனையாகுமுன்னர் ஆலைகளிலும், வணிகரின் கிடங்குகளிலும் கடைகளிலும் தேங்கி நிற்கும். இவ்வாறு கச்சாப் பொருளாகவோ, முற்றுப் பெருத நிலையிலோ முற்றுப்பெற்ற வடிவிலோ தேங்கி நிற்கும் பொருள்களை நடைமுதல் என்று அழைப்பர்.

எந்நிலையில் இருந்தாலும் மூலதனத்தை இருப்புச் சரக்காகவே கொள்ளவேண்டும். ஒரு தனிப்பட்ட வணிகன் ஒரு ஆண்டின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் எவ்வளவு இருப்புச் சரக்கு இருக்கின்றது என்று கணிப்பது வழக்கம். அதைப் போலவே ஒரு முதலாளியும் ஒரு குறிப்பிட்ட நாளில் தனது முதலிருப்பு எவ்வளவு என்று கணக்கிட முடியும். தனியாரைப் போலவேதான் நாடும். ஒரு நாட்டின்கண் உள்ள மக்களும், நிலையங்களும் (ஸ்தாபனங்களும்) தங்களுக்குச் சொந்தமாகக் கொண்டிருக்கும் மூலதனத்தின் மொத்த மதிப்பே நாட்டு மூலதனமாகும். இவை உள்நாட்டிலும் இருக்கலாம். வெளிநாடுகளிலும் இருக்கலாம். எங்கிருந்தாலும் ஒரு நாட்டு மக்களுக்கோ அங்குள்ள பல்வேறு அமைப்புகளுக்கோ சொந்தமானுல் அம்முதல் அனைத்தும் நாட்டுமுதல் எனக் கணக்கிடப்படும்.

சாதாரணமாக, நாம் கூட்டுப் பங்கு அடமானப் பத்திரம், கடன் பத்திரம் போன்ற ஏடுகளையும் முதலினத்தில் சேர்த்துக் கணக்கிடுவது உண்டு. உண்மையில் இவை மூலதனங்களல்ல; மூலதனத்தின் நிழல்கள். ஆழ்ந்து நோக்கினுல் இத்தகைய நிழல்களுக்கு இணையாக ஆங்காங்கே மூலதனம் நிலையுறு முதலாகவோ நடை முதலாகவோ காட்சியளிப்பது தெரியவரும். ஒரு கூட்டுக் கம்பெனியில் ஒருவன் ஒரு சில பங்குகள் வாங்குகிருன் என்று வைத்துக்கொள்ளுவோம். இந்நடவடிக்கையில் அவன் பங்குகளின் மொத்த மதிப்பைப் பணமாகக் கொடுத்து அதற்குப் பதிலாகப் பங்குப் பத்திரங்களைப் பெறுகிருன். இவ்வாறு பங்குப் பத்திரங்களை விற்பதன் மூலம் திரட்டிய பணத்தைக் கொண்டு கம்பெனி நிருவாகிகள் கட்டடங்களை எழுப்பி எந்திரங்களை நிறுவுவர்; கச்சாப் பொருட்களையும் கனிப் பொருட்களையும் வாங்குவர். பங்குகளை வாங்கியவர்கள் இதுதான் எனது எந்திரம் அல்லது கட்டடம் 'என்று சொல்ல இயலாவிட்டாலும்

அவரவர் பங்குத் தொகைக்கு ஏற்ப அந்த ஆலையிலுள்ள நிலையுறு முதலிலும் நடைமுதலிலும் அதன் பயனுகக் கிடைக்கும் லாப நட்டத்திலும் உரிமை கொண்டாட முடியும். இப்பத்திரங்கள் பங்கு மார்க்கட்டில் கைமாறுமானுல் மூலதனத்தில் மாற்றம் ஏற்படுவதில்லை. ஆனுல் அதற்கு உடையவர்கள் மாறிவிடுவார்கள். தொழில் லாபகரமாக இருந்தால் அதற்கேற்ப பங்குகளின் மதிப்பும் உயரும். இக்கண்ணேட்டத்தில் பார்க்கும்போது பத்திரங்கள் மூலதனமல்ல; அவற்றின் நிழல்களே என்பது புலனுகும். எனவே கண்ணுடியின் முன் நிற்கும் அசல் உருவத்தையும் கண்ணுடியுள் தோன்றும் நிழலையும் சேர்த்துக் கணக்கிட்டால் எப்படி மொத்தம் இரண்டு உருவங்கள் என்று ஆகுமோ அதேபோல் பத்திர வடிவாக அமையும் உருவங்களையும் மூலதனம் என்று கணக்கிட்டால் மூலதனம் இரட்டிப்பாக மிகைப்படுத்திக் காட்டப்படும் என்பது கண்கூடு. இவ்வாறு தப்புக் கணக்குப் போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

## மதம்

''மதம் ஒரு பொழுதும் மக்களை இரக்க முள்ளவர்களாக்கியதில்லை. மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டதையும், கழுவேற்றப்பட்டதையும் மறந்துவிடாதீர்கள். மதம் எப்போதும் கலைகளுக்கும், ஆராய்ச்சிக்கும், அறிவுக்கும், எதிரியாகவே இருந்துவந்தது, வருகிறது. மதம் மனிதனை விடுதலை செய்ததேயில்லை; ஒழுக்கமும், சுறுசுறுப்பும், பக்குவமும், சக்தியும் உடையவனுகச் செய்ததும் இல்லை. மதமின்றி மக்கள் முன்னேற முடியாதா? மதத்தை சோதனை செய்தாகிவிட்டது. எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் மதத்தினுல் பயன் ஏற்படவில்லை.''

— இங்கர்சால்.

## முதலாக்கம்

உற்பத்திக் காரணிகளின் கூட்டுறவே பொருளாக்கமாக மலருகின்றது. இத்தகைய பொருளாக்கத்தைக் கணிக்கும் போது எப்போதும் ஒரு கால அளவையே அடிப்படையாகக் கொள்வது வழக்கம். அதாவது, ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் அல்லது ஒரு ஆண்டில் எவ்வளவு பொருளுற்பத்தி செய்யப்படுகிறது என்று கணக்கிடுவதே பொருத்தமானது. அப்படி ஆக்கப்பட்ட பொருளில் ஒரு பகுதியை மக்கள் தங்கள் நுகர்ச்சிக்கென ஒதுக்குவர். எஞ்சியதை (சேமிப்பை) மேலும் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையில் ஈடுபடுத்துவர். இதைத்தான் முதலீடு அல்லது முதலாக்கம் என்பர்.

## முதல் திரட்சி

இம்முதலீட்டில் ஒரு பகுதியைக்கொண்டு ஏற்கனவே உருவாக்கப்பட்ட மூலதனப் பொருட்களில் ஏற்படும் தேய்வு, சேதாரம், மதிப்பிழப்பு ஆகியவற்றை ஈடுசெய்ய வேண்டியது அவசியமாகும். மொத்த முதலீட்டிலிருந்து இத்தகைய தேய்மானத்தைக் கழித்தால் நிகர முதலீடு அல்லது நிகர முதலாக்கம் இன்னதென்று காணலாம். ஆண்டுதோறும் நிகர முதலீடு ஏற்பட்டு வருமானுல் மூலதனம் மேன்மேலும் பெருகும். இதையே முதல்திரட்சி என்று அழைப்பர்

## முதலாக்கப் பிரச்னை

பொருளாக்கத்துக்கு இன்றியமையாதது முதல் திரட்சி. பொருளாதார அமைப்பும் உற்பத்தி உறவுகளும் ஒழுங்காக அமைந்தால் கணிசமான முதல் திரட்சிக்கான சூழ்நிலை உருவாகும் என்பது உண்மை. அதே சமயத்தில் எல்லா வளமும், தொழிலறிவும் ஏற்றதோர் பொருளாதார அமைப்பும் உற்பத்தி உறவும் இருந்தாலுங் கூடப் போதிய மூலதனம் இல்லாவிட்டால் பொருளாதார வளர்ச்சி தயக்கமுறும்.

தொடக்க நிலையிலேயே ஒரு குறைந்தபட்ச மூலதனம் இல்லாமல் பொருளாதாரம் வளர்ச்சியுறும் என்று பொதுவாக எதிர்பார்க்க இயலாது. ஆனால் இத்தகைய ஆதித் திரட்சி ஆண்டுதோறும் நிகழும் புத்தம்புது நிகர முதலாக்கத்தின் மூலம் மேன்மேலும் கொழுக்குமாயின் நாளடைவில் வளர்ச்சி வேகம் உந்தப்படும். வேறுவிதமாகக் கூறவேண்டுமாயின், பொருளாதார வளர்ச்சியின் வேகம் ஆதித் திரட்சியின் அளவையும் நிகழ் காலத்தில் உருவாகும் நிகர முதலாக்கத்தையும் பொறுத்து மாறுபடும். இத்தகைய நிகர முதலீடு நிகழ்கால உற்பத்தியின் அளவையும் அந்த உற்பத்தியில் முதலீட்டுக்கென ஒதுக்கப்படும் பகுதியையுமே பெரும்பாலும் பொருத்தது.

ஆக்கப்படும் பொருளில் பெரும் பகுதியை நுகர்ச்சிக்கென செலவிட்டால் சேமிப்பும் அதைச் சார்ந்து நிகர முதலாக்கமும் சிறுத்துப் போகும். முதல் திரட்சி கணிசமாக இருக்காது. எனவே பொருளாதார வளர்ச்சி தயக்கமுறும். மாறாக, மக்கள் தங்கள் அன்றாட நுகர்ச்சிச் செலவைச் சுருக்கி, சேமிப்பைப் பெருக்கி அவற்றை ஆக்கமுள்ள துறைகளில் முதலீடு செய்யத் தலைப்பட்டால் முதல் திரளும். பொருளாதாரத்தின் வேகத்திலும் விறுவிறுப்புத் தோன்றும்.

பொதுவாகப் பின்தங்கிய பொருளாதாரங்களில் பொருள் உற்பத்தி குறைவாக இருக்கும். அதைப் போலவே நாட்டு வருவாயும் தனிநபர் வருவாயும் சிறுத்திருக்கும். வருவாயில் பெரும்பகுதி நுகர்ச்சிக்கென செலவிடப்படும். எஞ்சியது கொஞ்சமாக இருப்பதால் முதலாக்கம் நலியும். முதலும் எளிதில் திரளாது. முதலின்றி ஆக்க சக்தியைப் பெருக்குவதெப்படி?

எனவே ஆக்க சக்தி தேக்கமுறும். பொருளுற்பத்தியும் விளக்கமுறாது. பொருளாதாரம் தேக்கமுற்றுப் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வாடும். இந்நிலையில் மக்கள் தொகை மட்டும் வளர்ந்து வருமாயின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்குப் பதிலாகத் தேயத் தொடங்கும். பெரும்பாலான மக்கள் பசி, பட்டினி, நோய் ஆகியவற்றுக்கு இலக்காகிச் சோர்வுற்று மாக்களிலும் கேடான இழிநிலையில் வாழவேண்டி வரும். எனவே வருவாய் குறைவால் முதல் திரளுவதில்லை; முதல் இல்லாமையால் வருவாய் வளருவதில்லை. இத்தகைய இக்கட்டான நிலையில் இருந்து வாடிவந்த பொருளாதாரங்களைக் கொண்ட சமுதாயங்களுக்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் வரலாற்றின் ஏட்டிலே பொதிந்து கிடக்கின்றன. ஏன்? இன்று ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களினின்று விடுபட்டுப் பொருளாதார வளர்ச்சி வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டுத் துடிதுடித்து நிற்

சூழ் நாடுகளில் பல இந்த ரகத்தைச் சார்ந்தவைகள் தாம்.

## காலனிப் பொருளாதாரம்

காலனி ஆட்சிக் காலத்தில் பெரும்பாலும் இந்நாடுகளிலுள்ள மக்கள் நிலத்தை நம்பியே வாழ்ந்து வந்தனர். பழமை வாய்ந்த விவசாயக் கருவிகளையும் உற்பத்தி முறைகளையும் கையாண்டு வந்தனர். சமூக அமைப்பும் மக்களது மனோபாவமும் பிற்போக்குத்தன்மை வாய்ந்ததாக இருந்தது. உற்பத்தி உறவிலும் கடுமையான கோளாறுகள் காணப்பட்டன. சிலவற்றில் பண்ணையடிமைமுறை பலம் பெற்று விளங்கியது பலவற்றில் நிலப் பிரபுத்துவம் ஆழமாக வேரூன்றியது. சில நாடுகளில் செழுமை மிக்க நிலங்களில் அந்நியர் குடியேறி சொந்த நாட்டவரை அடிமைகொண்டு அடக்கி ஒடுக்கினர். உழைப்பவருக்குப் போதிய ஊதியம் கிடைக்கவில்லை. உற்பத்தியில் பெரும் பகுதி உழைக்காத உலுத்தரின் கையில் குவிந்தது. தொழில் வளர்ச்சி தேய்ந்து நின்றது. அதுவும் பெரும்பாலும் தேயிலை, காப்பி போன்ற தோட்ட விவசாயம், சுரங்கத் தொழில், பக்குவப்படுத்தும் தொழில்கள் ஆகியவற்றோடு ஒடுங்கிக் கிடந்தன. சுளுவான தொழில்களில் பஞ்சாலைகள் போன்ற ஒரு சில, ஆங்காங்கே தலை காட்டின. ஆனால் கனரகத் தொழில்களை மருந்துக்கும் காண்பதரிது. தொழில்கள் பெரும்பாலும் அயல் நாட்டு மூலதனத்தையே நம்பியிருந்தன. ஆக்கிய பண்டங்களும் ஏகாதிபத்தியப் பொருளாதாரங்களிலுள்ள ஆலைகளுக்கு ஊட்டம் அளிப்பதற்காகவே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. இந்நிலையில்காலனிப்பொருளாதாரம் ஏகாதிபத்தியப் பொருளாதாரங்களின் திட்டுகளாகவே திகழ்ந்தன. காலனிகளில் உற்பத்தியான பொருட்களை நாடுகடத்தவும், தங்கள் நாட்டில் உற்பத்தியான பொறிசெய் பொருட்களைக் காலனிகளில் கொண்டுவந்து திணிக்கவும் துணை செய்யக்கூடிய போக்குவரத்துச் சாதனங்களையும், பாங்கு–இன்சூரன்ஸ் போன்ற நிலையங்களையும் ஆங்காங்கே தோற்றுவித்தனர். அச்சாதனங்களால் பயன்பெற்ற தொழில்கள் அடித்த இலாபம் பெயரளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது. அயல்நாட்டு வாணிபம் கடற்கடவு யாவும் அந்நியரின் பிடிப்பில் இருந்தன. ஏற்றுமதியான ஒரு சில பண்டங்களைக் கொண்டு இறக்குமதியான பொறிவழி ஆக்கப் பொருட்களை ஈடு செய்ய இயலாத நிலையில் அயல்நாட்டுச் செலாவணிக்கென காலனி அரசாங்கமும் தொழில் துறைகளும் ஏகாதிபத்திய நாடுகளிடம் கடன்பட்டிருந்தன. காலனி அரசாங்கமும்

### வழுக்கைத் தலை

மனித சமுதாயம் வரவர வழுக்கைத் தலையாகப் போய்க் கொண்டிருக்கிறது என்றும், இன்னும் நூறு ஆண்டுகளில் ஆண்–பெண் இருபாலாருக்குமே தலையில் முடி இருக்காதென்றும், அமெரிக்க தோல் ஆராய்ச்சி வல்லுநரான டாக்டர் ஜேம்ஸ் பர்க்ஸ் என்பவர் கருதுகிறார். "தலையிலுள்ள மயிரினால் பயன் எதுவுமில்லை; வெறும் அழகுக்காகவே இருக்கிறது; ஆகவே அது ஒழிந்தே போய்விடும்," என்கிறார். வழுக்கைத் தலை என்பது பரம்பரையாக ஏற்படுவது என்றும் தெரிவிக்கிறார்.

ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பாதுகாப்பதிலேயே கண்ணு யிருந்தது. அமைதி, ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் தலையாய கடனு கக் கருதப்பட்டது. காலனி நாடு களின் வருவாயில் கணிசமான பகுதி, முதலுக்கு இலாபம், கட னுக்கு வட்டி, அரசாட்சி, பாது காப்பு என்ற கணக்கில் வெளி யேறியது. வளங்கள் வற்றின. இந்நிலையில் பொருளாதாரம் வளருவதெங்கே ? மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவ தெங்கே ?

## பின்தங்கிய பொருளாதாரம்

இரண்டாம் உலகப்போரின் போது ஏகாதிபத்தியங்களின் கை முறிந்தது. சமதர்ம சக்தி களின் கை ஓங்கியது. காலனி நாடுகள் அனைத்தும் ஏகாதிபத்தி யங்களுக்கு எதிராகப் புரட்சிக் கொடியை உயர்த்தின. இதைக் கண்டு நடுக்கமுற்ற ஏகாதிபத்தி யங்கள் காலனிகளை ஒவ்வொன் ருகக் கை நழுவவிட்டன. பல ஆசிய-ஆஃப்ரிக்க நாடுகள் விடு தலை பெற்றன. அதையொட்டி இந்நாடுகள் தங்களுக்கென தனித்தனி அரசியல் அமைப்பு களை வகுக்கலாயின. சிலவற் றுள் ஜனநாயகத் தேர்தல்களும் நடைபெற்றன. அதன் அடிப் படையில் அரசியல் அதிகாரம் சொந்த நாட்டவரின் கைக்கு மாறியது. ஆனால் பொருளா தார-சமூக அடிப்படையில் புரட் சிகரமான மாறுதல் எதுவும் ஏற் படவில்லை. ஒரு சில நாடுகள் நிலப்பிரபுத்துவ முறையை ஒழிக் கத் தலைப்பட்டன. இருந்தும் உற்பத்தி உறவுகள் சீராக அமைந்தன என்று சொல்ல இயலாது. "உழுபவனுக்கே நிலம்" என்ற நிலை ஏற்பட வில்லை. உற்பத்தி முறைகளும் கருவிகளும் குறிப்பிடத்தக்க வகையில் மாறவில்லை. நிலத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளும் அத னடியாகப் பிறக்கும் அதிகார ஆதிக்கங்களும் கணிசமாகக் குறையவில்லை.

கல்வி அறிவு ஓரளவு பெரு கி வருகிறது. ஆயினும் போதனு மொழி, கல்வி முறை ஆகியவை பழைய போக்கி லேயே உள்ளன. விஞ்ஞானத் தின் அடிப்படையில் மக்களி டையே அறிவுப் புரட்சியை உண் டாக்குவதாக இல்லை. சமூகச் சீர்திருத்தங்கள் சிக்கலின் ஓரத் தைக்கூடத் தொடக்காணும். இச்சூழ்நிலையில் மக்களது மனப் போக்கிலும் செயல்முறையிலும் விரும்பத்தக்க மாற்றங்கள் எதுவு மில்லை. நோய் நொடியினின்று பாதுகாப்பதற்கான வைத்திய-சுகாதார வசதிகள் ஓரளவு வளர்ந்துள்ளன; ஆயின், பெருகிவரும் மக்கட் தொகைக் குப் போதிய உணவளிக்கக் கூடியவகையில் உழவுத்தொழில் மேம்படவில்லை. தனியாரின் முயற்சியால் தோன்றும் தொழில் கள் பல அரசாங்கத்தின் ஆதர வின் கீழ் ஓங்கி வருகின்றன. பொதுத் துறையிலும் பிரமாண்ட மான தொழில்கள் பல தோன்றி வருகின்றன. ஆனால் மொத்தத் தில் தொழில் வளர்ச்சி அவ் வளவு துரிதமாக இருப்பதாகச் சொல்ல இயலாது. துணிவுமிக்க தொழில் அதிபர்களையும் திறமை கொண்ட தொழில் நிர்வாகிகளை யும் விரல்விட்டு எண்ணிவிட லாம். தொழில் அறிவு பெருக வில்லை. தொழில் முறைகளும் மாறவில்லை. உழைப்புக் கேற்ற சூழ்நிலையும் மனப்போக்கும் உரு வாகவில்லை. உற்பத்தி உறவு களும் சீராக அமையவில்லை. இவற்றுடன் மூலதனப் பஞ்சமும்

ஒன்றுகூடவே தொழில் வளர்ச்சி தயங்கி நிற்கிறது.

அயல்நாட்டுச் செலவாணியைத் திரட்டுவதும் பெரும் சிக்கலாக உள்ளது. ஏற்றுமதியைக் கொண்டு இறக்குமதியை ஈடு செய்யலாம் என்றால் அயல் நாட்டவர் விரும்பி வாங்கக்கூடிய ஏற்றுமதிப் பொருட்கள் போதிய அளவில் கிடைப்பதில்லை. வாணிப மாற்று விகிதமும் விவசாய நாடுகளுக்குக் கேடாகவே உள்ளது. எனவே அயல் நாட்டுச் செலாவணி எளிதில் கிடைப்பதில்லை. கடன் கேட்கப்போனால் வட்டியோடு போவதில்லை; அரசியலில் அயல் நாட்டவருக்கு வால் பிடிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது அயல்நாட்டு முதலாளிகளைத் தங்கு தடையின்றி உள்ளே விட்டால் பொருளாதாரத்தின் உயிர் நிலைகளைக் கைப்பற்றிப் பொருளாதாரம் முழுவதையுமே ஆட்டிவைத்து விடுவார்களோ என்ற அச்சம் பரவி நிற்கின்றது. ஐக்கிய நாடுகளும் பெயரளவில் பொருளுதவி செய்யக்கூடிய நிலையில் இல்லை. வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமே என்ற கவலை ஒருபுறம் வாட்டி வருகிறது. எனவே, முதல் பஞ்சமும், அயல் நாட்டுச் செலாவணித் தட்டுப்பாடும் பின் தங்கிய பொருளாதாரங்களின் வளர்ச்சிப் பாதையிலுள்ள மாபெரும் முட்டுக்கட்டைகள் என்பதில் ஐயமில்லை.

## முதலாக்கமும் வளர்ச்சியும்

நாட்டின் நிகர உற்பத்தியையும் அதில் முதலாக்கத்துக்கென ஒதுக்கப்படும் விகிதத்தையும் பொறுத்தே அப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகத்தை நிர்ணயிக்க இயலும் என்று கண்டோம். பொருளாதார வளர்ச்சிகளின் முன்னணியில் நிற்கும் பொருளாதாரங்களில் மொத்த மூலதனத்துக்கும் பொருளுற்பத்திக்கும் உள்ள விகிதம் கிட்டத்தட்ட 3 : 1 என்று கணக்கிட்டிருக்கின்றனர் அதாவது ஒரு ரூபாய் பெறுமதியான பொருளை உற்பத்தி செய்வதற்கு மூன்று ரூபாய் பெறுமதியான மூலதனம் வேண்டும் என்பது பொருள். இவ்விகிதம் மின்சாரம், இரசாயனம், கனரகத் தொழில் ஆகியவற்றில் அதிகமாகவும், பஞ்சாலைத் தொழில், பக்குவப் படுத்தும் தொழில்கள் போன்ற இலகு தொழில்களில் குறைவாகவும் இருக்கும். இவற்றுள் எத்தகைய தொழில்கள் பொருளாதாரத்தில் மிகுந்து காணப்படுகின்றனவோ அதைப் பொறுத்தே அதன் சராசரி மூலதன—உற்பத்தி விகிதம் கூடவோ குறையவோ செய்யும். அதுமட்டுமின்றி, வளமிக்க கன்னி நிலங்களையும் அளவற்ற கனிச் செல்வங்களையும் ஒருங்கே சொரிந்து நிற்கும் பொருளாதாரங்களில் இவ்விகிதம் குறைந்துபடுவதும்; வரண்டு, வளமற்ற பாலைகளைக் கொண்ட பொருளாதாரங்களில் உயர்ந்து படுவதும் உணரத்தக்கது.

எனவே, உற்பத்தி பெருக வேண்டுமானால் மூலதனம் திரள வேண்டும். அதற்கு முதலீடு அவசியம். ஆதலின் உற்பத்தியில் முதலீட்டின் பங்கு உயர வேண்டும். இது ஒரு குறுகிய கண்ணோட்டமே என்பது உண்மை. ஏனெனில் பின்தங்கிய பொருளாதாரங்களின் சமூக, பொருளாதார, கலாச்சார அடிப்படை, அரசாங்க நிர்வாக அமைப்பு ஆகியவற்றை ஆக்கமான முறையில் மாற்றியமைத்தால் தான் உற்பத்தி பெருக முடியும். ஆயின், சமூக-பொருளாதார—கலாச்சார அடிப்படைகளை மாற்றாத நிலையில் உற்பத்

தியைப் பெருக்க வேண்டுமானுல் மூலதனப் பெருக்கமும் தொழில் அறிவுமே முக்கியமான ஊன்று கோல்களாக அமையும். மூல தனம் திரண்டு தொழில்கள் வேகமாக வளரத் தொடங்கினுல் அத்துடன் தொழில் அறிவும் பெருகும். ஏன்? சமூக—கலாச் சார அடிப்படையே அசைந்து கொடுக்கும். இருப்பினும் எல்லா முனைகளிலும் ஒருங்கே போர் தொடுத்து வெற்றி காண்பதே வேகமான வளர்ச்சிக்கு உகந்தது என்பது சொல்லாமலே விளங் கும்.

## வரிவிதிப்பு

உற்பத்தி பெருகாத நிலையில் முதலீட்டை அதிகரிப்பது எப்படி என்பதே அடிப்படையான கேள்வி. முதலீட்டைப் பெருக்க முயலும் அதே சமயத்தில் உற் பத்தியும் உயர்ந்து வருமானுல் கூடிய உற்பத்தியில் கணிசமான பகுதியை முதலீட்டுக்கென ஒதுக்கி, முதல் திரட்சியின் வேகத்தைத் தூண்டமுடியும். அவ்வாறு உற்பத்தி பெருகாவிட் டால் ஒன்று வயிற்றை ஒடுக்கி நுகர்ச்சியைக் குறைத்தாக வேண்டும். அல்லது, அயல் நாட்டு உதவியை நாட வேண்டும். வயிற்றை மக்கள் தாங்களாக இறுக்கி, சேமிப்பை அதிகப்படுத்தி, ஆக்கத் துறை களில் ஈடுபடுத்தி முன்னேற்றம் காணவேண்டும் என்ற உறுதி யுடன் உழைக்க முன்வரலாம். அல்லது வளர்ச்சியில் ஆர்வங் கொண்ட அரசாங்கம் நுகர்ச் சியைக் கட்டுப்படுத்தக் கூடிய வரிகளை விதிப்பதன் மூலம் அர சாங்க வருவாயைப் பெருக்கி அதன் மூலம் அரசாங்கச் சேமிப்பையும் முதலீட்டையும் அதிகரிக்கலாம். தனியாரின் முதலீடு குன்ருத நிலையில் பொதுத்துறையில் ஈடுபடுத்தப் படும் இத்தகைய முதலீடு பொரு ளாதாரத்தில் ஏற்படும் மொத்த முதலாக்கத்தைப் பெருக்கும் என் பது வெள்ளிடைமலே.

## அயல்நாட்டு மூலதனம்

இவ்வாறு துணிந்து செயலாற் றக்கூடிய அரசாங்கம் அமைய வில்லையானுல் இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு அயல்நாட்டவரின் அனுதாபமும் கிடைப்பதரிது. ஆயினும் கொள்கை பற்றியோ அல்லது அரசியல் காரணங்களை முன் னிட்டோ அயல்நாட்டவர் பின் தங்கிய பொருளாதாரங்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டு வதுண்டு. ஐக்கிய நாடுகளின் நிலையங்களும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின் றன. அதன் பயனுக அரசாங்க மும் தனிப்பட்டவர்களும் அயல் நாட்டுக் கடனைப் பெற முடியும். தனியார் துறையிலும் அயல் நாட்டு மூலதனம் புகுவதற்கு வாய்ப்புகள் பிறக்கும். இப்படி அயல்நாட்டு மூலதனம் பேரள வில் வந்து குவியுமானுல் உள் நாட்டவரின் முயற்சியின்றியே பொருளாதார வளர்ச்சி தூண் டப்படலாம். ஆனுல், அயல் நாட்டு மூலதனத்தைத் தகுந்த கட்டுப்பாட்டுக்குள் வைத்திரா விட்டால் அது கண்ட இடமெல் லாம் புரையோடும். எல்லைமீறி உள்நாட்டு அரசியல் விவகாரங் களில் தலையிட்டு நாட்டின் விடு தலைக்கே உலைவைத்துவிடும்.

## பற்றுக்குறை நிதியாக்கம்

சேமிப்பு, அயல்நாட்டு உதவி ஆகியவற்றுடன் பற்ருக்குறை நிதியாக்க முறையின் மூலமாக வும் முதலாக்கத்தைப் பெருக்க முடியும். பின்தங்கிய பொருளா தாரங்கள் பலவற்றில் பொரு

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

**இலக்கியப் பகுதி :**

# பரணியில் ஓர் பாடல்

[மு. குழந்தைவேலன், பீ. ஏ.]

*[தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்கது கலிங்கத்துப் பரணி. போர்க்கள வர்ணனையில் கம்பனையும் தாண்டி உயரச் செல்கிருர் ஜெயங்கொண்டார். பல பாடல்கள் உரக்கப்படித்துத் தாளம் போட்டுச் சுவைக்கத் தக்கவை. படைவீரர்கள் இடம்—வலம் (Left-Right) போட்டு வீரநடை மிடுக்குடன் செல்வதுபோல இருக்கும், சில பாடல்கள். தேனினும் இனிய பரணிப் பலாப்பழத்தில் ஒரே ஒரு சுளையை மட்டும் நம் வாயில் போடுகிருர், கட்டுரையாளர். கட்டுரை படிப்பவர் கலிங்கத்துப் பரணியைப் பலமுறை படித்தே தீர்வர்.]*

வட கலிங்கரை வென்று வாகை சூடிவந்த விசயதரனதுவெற்றியின் சிறப்பைப் புகழ்ந்து போற்றிய சயங்கொண்டான், வென்று வந்த சோழன் மீது பரணி புனைந்து, பரணியால் புகழடைந்து "பரணிக்கோர் சயங்கொண்டான்" எனும் தரணி போற்றும் உயர் பட்டம் பெற்ருன். அரங்கேற்றும் போது அரசன் உடனிருந்து நயம் கேட்டு இன்பம் பெற்று, இன்பத்தின் எடுத்துக்காட்டாக ஒவ்வொரு தாழிசையின் இறுதியிலும் ஒவ்வொரு பொன் தேங்காய் பரிசிலாக உருட்டிக் கவிஞனை உற்சாகமூட்டி வாழவைத்துச் சாகாமல் வாழ்ந்திருந்தான்.

பரணி முழுதும் குறிப்புப் பொருளும், இறைச்சிப் பொருளும், உள்ளுரை உவமங்களும் ஆங்காங்கே மாமணிபோல் சிதறிக் கிடக்கின்றன. வீரமும், வெகுளியும்; அவலமும், அச்சமும்; காமமும் சுவை குன்ருமல் நிரவி வருகின்றன. எதுகையும்,

---

( முன் பக்கத் தொடர்ச்சி )

ளுக்குப் பஞ்சமேயன்றி மக்களுக்குப் பஞ்சமில்லை! அளவுக்கு மிஞ்சியே இருந்து வருகின்றனர்! எண்ணிறந்த மக்கள் போதுமான வேலையின்றி நிலத்தைச் சுரண்டி வயிறுவளர்க்க முயலுகின்றனர். நகரங்களிலே வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகின்றது. இவ்வாறு மிஞ்சி நிற்கும் மனித சக்தியை ஆக்கவேலைகளில் பயன்படுத்து [illegible]

வதற்குப் பற்ருக்குறை நிதியாக்க முறை ஓரளவு உதவ முடியும் என்பது ஒரு சிலரின் துணிபு. எனினும் இம்முறை எத்துணை பொருத்தமானது என்று அறிந்து கொள்வதற்கு வரிவிதிப்பு, அயல்நாட்டு உதவி, பற்ருக்குறை நிதியாக்கம், ஆகியவற்றின் பலாபலன்களைத் திருவி ஆராய்வது அவசியமாகும். [illegible]

ஆற்றல் பெற்ற பெரும் புலவரைப் பார்த்திருக்கிறோம்.

"'எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்"

என்ற ஒரு சில வரிகள் பனையளவு வளர்ந்த தம் உள்ளத்தை, மொழி, நாடு, பெற்றோர் மேல் கொண்ட பாசத்தைத்திண்மையாகக் களங்கமின்றிப் படம்பிடித்துக் காட்டும் புரட்சிக் கவிஞர்களைச் சந்திக்கிறோம்.

நாட்டுச் சிறப்புரைக்க எண்ணிய புலவர், அங்கே தென்னையும், கமுகும், தீஞ்சுவைப் பலாவும், தேமாங்கனி தரும் மாவும், இன்சுவை வாழையும் இருந்தன எனக் கூறினால் அது சிறப்பாகாது; பல பாடல்கள் பாட வேண்டி நேரிடலாம் என்றஞ்சி, ஒரே பாடலில் உட்பொருளாக அங்கே அத்தனை மரங்களும், நெருங்கி அடர்ந்து, பூத்துக் காய்த்துக் கனிகுலுங்கி நின்றன என்பதை, முற்றிய தேங்காய் நெற்று இயற்கை நெறிப்படி மரத்திலிருந்து விழ. அந்நெற்று அடுத்து நின்ற கமுகின் இலையைக் கீறி, பழுத்திருந்த பலாப் பழத்தைப் பிளந்து, வாழையின் குலையிலே கனிந்திருந்த பழங்களைச் சிதறித் தரையை அடைந்தது என்பதை,—

"'காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கத மென்றிசையால் திசை போயதுண்டே"

எனும் பாடல் மூலம் சிறப்பை உணர்த்திய திருத்தக்கத் தேவருடன் உரையாடி யிருக்கிறோம்.

ஓரிரு சொற்களில் உயர்ந்த கருத்துச் சொல்லும் அவ்வையுடன் பேசி மகிழ்ந்துள்ளோம். ஆனால் ஒரு பாடல் மூலம் நாட்டில் நிலவிய எண்ணம்; பெண்டிர் இயல்பு; ஆடவர் தன்மை; இன்ன பிறவற்றை உயர்வாக விளக்கிக்காட்டிச் சிறப்புப் பெற்ற சயங்கொண்டார்களை அடிக்கடி சந்திக்கவில்லை.

நாட்டின் நடைமுறைக் கேற்ப இலக்கியம் மாறும். பழக்க வழக்கத்துக் கேற்ப கோட்பாடு வேறுபடும். அன்பிலே, கடமையிலே, ஆண்டவனைக் கண்ட நாளுண்டு. இயற்கையின் படைப்பிலே இறைவனைக் கண்டேற்றிய இணையிலா நாட்களுண்டு. ஏழைகளுக்கு அன்பு செய்வதிலே இறைவனுக்குத் தொண்டு செய்த பெருமை உணர்ந்த நேரமுண்டு. அடுத்தவர் வருகையால் எண்ணம்மாற, இறைவன்மாற; நரகமும், மோட்சமும் புது விளக்கம் பெற்று பாவ புண்ணியப் பட்டாளங்கள் படையுடன் வந்த காலமும் உண்டு. இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி. அவை கூறும் பழக்க வழக்கங்களைக் கொண்டுதான் அவை உருவான காலத்தை உணர்கிறோம்.

களவும், கற்பும் போற்றிய இல் அறத்தை நல் அறமாக, ஏற்றமுள்ள அன்பறமாக நடத்திய தமிழர் நெறியில்,

"மாமுது பார்ப்பான்
மறைவழி காட்டிட
தீவலம் செய்து"

மோனையும் நயம் விளங்க இனிமை குறையாமல் திறம்பட எடுத்தாளப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் முதலிய முத்தனைய பத்து நயமும் தன்னகத்தே கொண்டு சத்தான தமிழன்னையின் புகழைத் தரணியில் நிலை நாட்டும் ஆற்றல் பெற்றது பரணி. இல்பொருள் உவமைகள் ஏராளம்.

காளியும், கூளியும்; பேயும், பிசாசும் ஆங்காங்கே நடந்து வரச் செய்கிறார், ஆசிரியர். கம்பனைத் தூற்றியவர்கள், கலிங்கத்தைப் போற்றுகிறார்கள். பரணியில் 'பேய்' வந்தாலும் மூடக் கொள்கை எனக்கூற முடியாது. பரணிக்குரிய தன்மை அது. கலிங்கத்துப் பரணி கடவுள் காதையல்ல. போர்க்கள வர்ணனையை ஆசிரியர் காளிமூலம், கூளிமூலம், விளக்குகிறார். கம்பராமாயணம் போல் அது தேவ காதையல்ல. படிப்பவர் சொர்க்கத்துக்குப் போவர் என்ற உடன்பாடு அங்கில்லை. காப்பியத் தலைவன் கடவுளின் திரு அவதாரமல்ல; பத்து அவதாரத்தில் ஒரு அவதாரமல்ல. ஓரினத்தை அடிமைப்படுத்த, ஓரினத்தை இழிவாகக் காட்ட, சித்தரிக்கப்பட்ட நூலல்ல. அங்கே நடந்த சண்டை 'இனப் போராட்டம்' என்று எந்தப் பெரிய மனிதரும் கூறவில்லை; எழுதவும் இல்லை.

பேய்க் கதைகளுக்கும், பிசாசு கதைகளுக்கும், சிந்திக்கும் ஆற்றல் பெற்ற மேனாட்டறிஞர் கொடுக்கும் மதிப்பைத்தான் நம் பரணியில் வரும் காளிக்கும், பேய்க்கும் கொடுக்கிறோம். ஆனால் அதில் வரும் வீர வரிகளுக்கும், வரலாற்றுக் குறிப்புக்களுக்கும்', இலக்கிய எழிலுக்கும், கற்பனைச் செறிவுக்கும் கண்டிப்பாக மதிப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம், நாம் கற்றவர் என்ற முறையில்.

ஒரு கருத்தை விளக்கப் பல பாடல்களை எழுதிய புலவர்களைக் கண்டிருக்கிறோம். ஒன்றே முக்கால் வரியில் உலகத்துக்குப் பொதுவான சிறந்த கருத்தைச் சீரியமுறையில் விரித்துரைக்கும்

## காதல்

"காதல் என்பது உடல் இன்பத்தின் தேவையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டதல்ல; ஆண்களும் பெண்களும் தங்களது வாழ்க்கையின் பெரும்பகுதியில் வேதனைப்படுகின்ற தனிமையிலிருந்து தப்புவதற்கு காதல் வாழ்க்கை ஒன்றே தான் வழியாக இருந்து வருகிறது. பலர் அன்புசெலுத்த ஆவலாயிருக்கின்றனர்; ஆனால் ஆண்களிடமுள்ள ஒரு விதமான முரட்டுத்தனமும் பிடிவாதமும் அதை மறைத்துவிடுகிறது; பெண்களிடமுள்ள குறும்புத்தனமும் வசையும் அந்த அன்பு ஆசையை மறைத்துவிடுகின்றது. ஒருவருக்கொருவர் ஆழமாகவும் உண்மையாகவும் அன்பு செலுத்தினால் இந்த உணர்ச்சி மறைந்துவிடும்; 'தான்' என்ற செறுக்குணர்ச்சித் தடையை உடைத்துவிடும்: ஈருயிர் ஓருடல் என்ற புது உயிர் பிறக்கும். மனிதர்கள் தனித்து நின்று வாழுமாறு இயற்கை உருவாக்கவில்லை. ஆதலால் நாகரீகமான மக்கள் காதல் வாழ்க்கையில்லாமல் உடலுணர்ச்சியை நிறைசெய்ய முடியாது."

பர்ட்ரண்டு ரஸ்ஸல்.

("திருமணமும் ஒழுக்கமும்'' பக்கம் 99

கண்ணகியை மணந்த கோவலனையும் காண்கிறோம். கால வேறுபாடு. இதுபோன்றே அறிவுக் கொள்கையிலும் மூடக்கொள்கை தன் முடைநாற்றத்தைப் புகுத்திச் சிலர் புகழுரையால், சிலர் பல்லாண்டு பாடியதால்; கட்டியம் கூறியதால்—கொஞ்ச நாள் அரசோச்சிய நிலை பெற்றதையும் காண்கிறோம். காலம் செய்த கோலமே அன்றி வேறு எதையும் குறை கூற இயலாது.

## தமிழ் மகளிர்

கலிங்கத்துப்பரணியில் மேலுலகம், கீழுலகம் எனும் பல்வேறுபட்ட உலகங்களைக்கொண்ட கருத்தைக் காண்கிறோம். அங்கே வாழும் மக்கள், அவர்கள் ஒழுக்கம் இவை பற்றிய செய்திகள் அறிய வாய்ப்புப் பெறுகிறோம். மேலுலகிலே அரம்பையர்வாழ்வு, அவர்கள் கீழுலகில் வீரமரணம் எய்தியவர் வருகைக்காகப் போட்டியிட்டு வழிமேல் விழி வைத்து ஏங்கும் கற்பற்ற கையறு நிலை — இவை அனைத்தையும் ஒருங்கே காண்கிறோம், பரணியில் ஒரேஒரு பாடலிலிருந்து.

ஈன்று புறம் தரும் தாயும், மாற்றான் தன் நாட்டின்மேல் கால்வைத்த காரணத்தால் பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தையையும் வேல் கொடுத்து, "நம் எல்லையிலே கால் வைத்த ஈனக் குணம் உடையானைக் கொன்று, வென்றுவரப் போடா, மகனே! போர்முனை நோக்கி," என்றனுப்பிய வீரத்தாயும் புறத்திலே வந்தார்கள். பரணிமட்டும் விதிவிலக்கா?

அக்காலத் தமிழர், 'தாயைப் போலப் பிள்ளை' என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்தனர். வீர்த்தாய் தான் வீர மகனைப் பெற்றுத்தரமுடியும். வீரத்தேள பதி தான் எல்லை காக்க முடியும். கோழை ஓடிவந்து நின்று கொண்டு 'நான் இன்னும் எல்லையைத் தான் காக்கிறேன்,' என்பான்" என எண்ணினார்கள். தமிழ்ப் பெண்கள் முதுகில் புண் பட்டவரை மதிப்பதில்லை. தங்கள் கணவன்—மகன் இவர்கள் மாண்ட நிலைபற்றி அறிய போர்க்களம் செல்வது தமிழ்ப் பெண்கள் வழக்கம். முகத்தில்—மார்பில்-காயம் தாங்கி மாண்டால் ஈன்ற பொழுதினும் பெருமகிழ்வு கொள்வதும்; புறப்புண் பட்டால் ஈடிலாத் துயர்கொள்வதும் அக்கால வழக்கம்.

வாழ்விலே பிரிவு விரும்பாத தமிழ்ப் பெண், இறந்து, பின் பிறக்கும் பிறவியிலும் நம்பிக்கை வைத்திருந்தாள். வாழ்வின் போதும் தன் கணவனை வேறொருத்தி உடைமையாகக்கொள்ளக் கூடாதே என்று விழிப்போடிருந்து காத்து வந்த பெண், மறு உலகிலும் தன் கணவனைவிட்டுப் பிரிந்துவிடக் கூடாதே, தன் கணவனை விண்ணாட்டு அரமகளிர் கூடிவிடக் கூடாதே என்று தன் கணவன் உயிர் நீக்குமுன் பாகத் தன் ஆவிபோக்கி மேலுலகில் கணவன் உயிர் வருகைக்காகக் காத்திருந்தாள் எனும் நிலையை விளக்கும் பகுதி கலிங்கத்துப் பரணியில் எழிலோடு, ஏற்றத்தோடு, சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் அனைத்தையும் கொண்டுள்ளது ஒரே ஒரு பாடல்.

முரசொலி கேட்கிறது. வீரன் போர்ப் பறையை உணர்கிறான். மனைவி நாடு காக்கத் தன் கணவனிடம் வேல்கொடுத்து 'நாடு காத்து வாருங்கள்,' என்று விழியில் புனல்சோர அனுப்புகிறாள், போர்முனைக்குப் போர்முனையிலே

வாளொடு வாள், வேலொடு வேல், அலையோடு அலை மோதியது போல்; குதிரையோடு குதிரை, மலையோடு மலை மோதுவதுபோல்; யானையோடு யானை, மேகத்தோடு மேகம் மோதுவது போல் இரதத்தோடு இரதம் மோதுகின்றன. எங்கும் ஆரவாரமும், கூக்குரலும்

கை அறுபட்ட வீரர்கள். கால் இழந்த வீரர்கள். கைவேறு, கால்வேறு, தலை வேருகத் துண்டிக்கப்பட்டுக்கிடக்கும் உடல்கள், ஆயுதம் இன்றி கால்கள் வெட்டப்பட்டுக் கிடக்கும் வீரன். மாற்ருனின் யானையைத் தாக்கத் தனது கால்களையே தூக்கி வீசும் வீர நிகழ்ச்சி. அம்புகள் இல்லாத காரணத்தால் தன் மார்பில் பாய்ந்திருக்கும் வேலெடுத்து மாற்ருன் மேல் வீசும் மறக் காட்சி. வயிற்றிலே எதிரி வேல்பாய்ந்து குடல்சரிய, அதையும் பொருட்படுத்தாது தன் எதிரியைக் கொல்லப் போகிருன் வீரன். அவன் குடல் அவன் கால்களைப் பின்னத் தளர் நடையோடும் தள்ளாடும் காட்சி.

யானையின் துதிக்கைகளை வெட்டித் தன் தோளின்மேல் போட்டு நீர்விடும் துருத்தியாளர் போல் வரும் வீரர் ஒரு பக்கம்! சாய்ந்து வரும் கடக்களிற்றின் உடனே சாய்ந்து தடங்குருதி மிசைப்படியும் மறவர் ஒரு பக்கம். தலையற்ற குறையுடல்கள் துள்ளிக் குதிக்கும் சோக நிகழ்ச்சி ஒரு புறம். ரணச்சேற்றிலே கால்கள் மாட்டிக்கொண்டதால் வெளியே வரமுடியாமல் தவிக்கும் குதிரைகள் மற்ருெருபுறம். வீரர்கள் உடல் முழுதும் தைத்த வேலால், அவர்கள் உயிர் பிரிந்தும் தரையில் விழாமல் நிற்கும் காட்சி ஒரு பக்கம். வாயிலே புகுந்த வேலை வலக்கையால் பற்றி நிலத்தில் மெல்லவே சாயும்வீரர் எக்காளம் ஊதுவோர் போல் காட்சி தந்தனர்.

## கற்பனை ஊற்று

ஆருக ஓடிற்று குருதி. அணையாக ஆயிற்று யானை உடல். மலைபோல் குவிந்தன வீரர் தலைகள். வீரர் ரணத்திலே மூழ்கிய காகம் வெள்ளை நிறமாகக் காட்சி தந்தது.

“விருந்தினரும் வறியவரும்
நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகம் மலரும்
மேலோர் போலப்
பருந்தினமும், கழுகினமும்”
தன்னை உண்பதைப்

பார்த்து மகிழ்ச்சியோடு இருக்கிருர்கள், குற்றுயிரும் குறை உயிருமாகக் கிடக்கும் சில வீரர்கள் ஓரிடத்தில்.

மற்ருேரிடத்தில் சாமளவும் பிறர்க்குதவாதவரை நச்சிச்

“சாருநர் போல் வீரருடல்
தரிக்கும் ஆவிப்
போமளவும் அவரருகே
இருந்து விட்டு”

உயிர் போகாததால் தனக்கு உணவில்லையே என்று வருந்தித் தளர் நடையோடு, சோகத்தோடு வேறிடம் செல்லும் நரிகள் கூட்டம்.

இந்தச் சூழ்நிலையில் ஒரு வீரனின் மனைவி தன் கணவனைத் தேடி வருகிருள். எங்கும் காணவில்லை.

“பொருதடக்கை வாள் எங்கே,
மணிமார்பெங்கே,
போர் முகத்தில் எவர் வரினும்
புறம்கொடாத
பருவயிரத்தோள் எங்கே......
எங்கே!”

என்று கேட்டு வருகிருள் மற்ருெரு பெண்.

"வாய் மடித்துக் கிடந்த
தலைமகனை நோக்கி
மணி அதரத்து ஏதேனும்
வடு உண்டாமோ
நீ மடித்துக் கிடந்த தெனப்
புலவி கூர்ந்து"

நின்றுவி சோர்கின்றுள் மற்ருெரு மங்கை நல்லாள்.

"தம்கணவருடன் தாமும்
போக வென்றே
சாதகரைக் கேட்பாரே
தடவிப் பார்ப்பார்
எங்கணவர் கிடந்த இடம்
எங்கே எங்கே"

என்று கேட்டு, மணியிழந்த நாக மாக சுற்றித் தேடித் திரியும் பெண் ஒரு பக்கம்.

இதுபோல் தம் கணவரை, மகனைத் தேடும் பெண்களைக் கடந்து வருகிருள் நாம் குறிப் பிட்ட வீரன் மனைவி.

அங்கே தன் கணவன் மார் பிலே மாற்றுன் வேல்கள் பல பாய்ந்து குருதி வழிந்தோடி கீழேவிழும் நிலையிலே நிற்கிருன். கண்டாள் இக்கொடிய கோரக் காட்சியினை. வீரம் செறிந்து, விவேகம் மிகுந்திருந்த அவள் உள்ளத்திலே நாடுகாக்கத் தன் குடும்பத்தையே துறக்கும் துற வுள்ளம் கொண்ட அவள் தூய மனதில்—தமிழ் உள்ளத்தில்—காதல் மிகுந்தது. பாசம் வளர்ந் தது. சூழ்நிலையால் பின்னப்பட்ட கருத்தால் அவள் மனதில் குடிபுகுந்து கருத்து ஆளத் தொடங்கியது. கீழேவிழ இருந்த தன் கணவனைத் தன் உடலால் தாங்கித் தன்னுடலோடு அணைத் துக்கொண்டாள். தன் கணவன் தரையில் சாய்ந்தால், தரை மகளையும் பெண் என்று கூறு கிருர்களே, அதனுல் தன் கண வன் தரைமகளைக் கூடிய தாகுமோ, அதற்கு இடம்கொடுக் கலாமா? தன் உள்ளம் நிறைந்து தன் மார்பிலே தங்கிய அத்திரு உருவம் தரைமகள் மார் பில் தங்குவதா, என்று எண்ணி ஞள். தன் பொருளைப் பிறர் பால் விட்டுவிடக் கூடாதே என்று நிச்சயித்தாள். தன் உட லால் தாங்கிக்கொண்டாள், தன் விலை மதிப்பற்ற, கிடைத்தற்கரும் பொருளைப் பிறரிடமிருந்து மீட்டி யவர் கொள்ளும் பெருமகிழ்வு அவளுக்கு.

காதலையும், வீரத்தையும் காட் டும் கண்களைப் பார்த்தாள். தன் கணவன் முகம் கண்டாள். மலர் போன்ற முகத்தில் மாற்றுனின் வாள்பட்டுக் கீரல். உடலிலே யிருந்து இரத்தம் வழிந்தோடி விட்ட காரணத்தால் வீரனின் உயிர் ஊசலாடும் நிலையிலே

## சுந்தரம் பிள்ளை

1855–1897. திருவிதாங்கூரைச் சேர்ந்த ஆலப்புழையில் பிறந்தவர். 1876ல் திருவனந்த புரம் அரசர் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றுர். பிறகு அதே கல்லூரிக்குத் தத்துவப் பேரா சிரியராகஆனுர். 1880ல்எம்.ஏ. பட்டம் பெற்றுர். தமிழ் இலக்கி யத்திலும் தேர்ச்சிபெற்றுர். The Secret Way (மறைவழி) என்ற இங்கிலீஷ் கவிதையைப் பின் பற்றி மனோன்மணீயம் என்ற தமிழ் நாடக நூலைச் செய்யுளி லேயே இயற்றினுர் (1891). பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை இங்கிலீஷில் எழுதினுர். இவ் ரது திறமைக்காக, F. R. H. S; M. R. H. S. ஆகிய வெளி நாட்டுப்பட்டங்கள் அளிக்கப் பட்டன. சென்னைப் பல்கலைக் கழகத்தார் F. M. U. என்ற பட்டமளித்தனர். அரசாங்கம், "ராய்பகதூர்" என்ற பட்ட மளித்தது.

ஓடிக்கொண்டிருந்தது. தன் கணவன் இனிப் பிழைத்தல் அரிதென்று கண்டு கொண்டாள். அச்சோகச் சூழ்நிலையிலும் தன் கணவனையே சுற்றிச் சுற்றி ஓடிற்று அவள் நல் உள்ளம்.

''நம் கணவனே நாடு காக்கப் போராடி, மானத்துக்காகப் பொருது வீரமரணம் எய்தும் நிலையிலிருக்கிறார். மேலுலகிலோ, ''தேவரனையர் கயவர்'' என்ற காரணத்தால் மக்களில் வீரமரணம் எய்துவோரை விரும்பி ஏற்க விண்ணாட்டு அரமகளிர் ஆவலோடு வழிமேல் விழிவைத்து வாசலிலே காத்திருப்பர். நம் கணவனோ மணிமார்பன்; பருவயிரத் தோளன். அழகன். தன்மான உணர்ச்சியுள்ள வீரன். இவரை விரும்பாத பெண்கள் அங்கே இருக்கவே மாட்டார்கள். அதனால் நம் கணவனை அடைய அங்கு நிச்சயம் போட்டி யிருக்கும். கணவனின் உயிர்போன பின்பு நம் உயிரை விட்டால், நம் உயிர் மேலுலகம் அடையும் முன்பு, கணவனை அரமகளிர் அடைந்து உரிமையாக்கிக்கொள்வர். அதனால் கணவன் ஆவி நீங்கு முன்பு நம் உயிரைப் போக்கி, விண்ணாட்டில் கணவன் உயிர் வருகைக்காகக் காத்திருந்து அவரைப் பெற்று இன்பத்தோடு வாழவேண்டும்,'' என்று எண்ணுகிறாள். அதனால் தன் மார்பிலே சாய்ந்திருந்த மணாளனின் ஈடில்லா உயிர் நீங்கும் முன்பாக அவள் தன் உயிரைப் போக்கிவிட்டாள்.

இத்தனை நிகழ்ச்சியையும் மிகவும் அழகாக, நயம்பட விரித்துரைக்கிறார் புலவர் சயங்கொண்டார்.

''தரைமகள் தன் கொழுநன்
தன் உடலம் தன்னைத்
தாங்காமல் தன்னுடலால்
தாங்கி—விண்ணாட்டு
அரமகளிர் அவ்வுயிரைப்
புணரா முன்னம்
ஆவி ஒக்கவிடுவாளைக்
காண்மின் காண்மின்''

என்ற ஒரே ஒரு பாடல் மூலம்.

பாட்டு மிகவும் எளிமையானது. ஆனால் இனிமையானது. இந்த ஒரே ஒரு பாடலில் இருந்து அக்காலத் தமிழ் மங்கை போர்க்களம் சென்று, போர்க் காட்சி காணும் நிலையிருந்தது என்பதும், பெண்கள் தம் கணவர் பிற பெண்களைக் கூடுதலைக் கனவிலும் விரும்பவில்லை என்பதும்; வீரசொர்க்கத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர் என்பதும்; மறுபிறவியில் கூடத் தன் கணவரோடே வாழ வேண்டுமென்ற பாசத்தால் பிணைக்கப்பட்ட பிணைப்பு அவர்கள் வாழ்வில் இருந்தது என்பதும்; மக்கள் வாழும் உலகைக் காட்டிலும் தேவருலகம் இழிந்தது என்பது அக்கால மக்கள் உணர்ந்தது என்பதும் விளக்கப்படுகிறது.

இப்பாடலின் உண்மை விளக்கம், வீரம் செறிந்த தமிழ் மண்ணில் பிறந்த வீரப்பெண் சாவும் நிலையிலும், கணவனும், மனைவியும் ஒன்றாகச் சாவதையே விரும்பினாள் என்பதே ஆகும். காலத்துக் கேற்ப, நிலவிய கருத்துக் கேற்ப, இவ்வினிய நிகழ்ச்சியைச் சுற்றி விண்ணாடு முதலிய நாடுகளைப் புகுத்திப் புனைந்து, கற்பனை நயத்தோடு தெவிட்டாத இன்பமூட்டித் தருகிறார், தேன் தமிழில் கலிங்கத்துப் பரணியில், சயங்கொண்டார்.

கோ. இராமச்சந்திரன், எம்.ஏ.,

# தெலுங்கு மொழியில் தமிழ்ச் சொற்கள்

*[தெலுங்கிலுள்ள தமிழ்ச்சொற்களை ஆராய்ந்தும், தமிழுக்குப் பிறகே தெலுங்கு பிறந்தது என்பதைக் கண்டும், தமிழின் கிளை மொழியே தெலுங்கு என்பதை மொழி ஆராய்ச்சி வல்லுநர் பலர் முடிவு கட்டியுள்ளனர். அதைப் பற்றிய ஆதாரக் கட்டுரை இது.]*

இந்திய மொழிகளிலே பழமைமிக்கதும் பிறமொழிகளின் வளர்ச்சிக்குக் காரணமாயிருப்பதும் ஆகிய தமிழ்மொழி தென்னிந்திய மொழிகளின் தோற்றத்திற்குரிய நிலைக்களமாய் அமைந்தது என்பதை மொழிநூல் வல்லார் ஒப்புக் கொள்கின்றனர். மேலைநாட்டுச் சான்றோர்களில் சிலர்—சிறப்பாகக் கால்டுவெல் போன்றவர்கள் — இந்த உண்மையைத் தெளிவுபடச் சென்ற நூற்றாண்டிலேயே தெரிவித்துவிட்டுச் சென்றனர். தெலுங்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட சான்றோர்களுள் சிலரும் (குறிப்பாக ஆசிரியர்கள்) இந்த முடிவையே தயங்காமல் தெரிவிக்கின்றனர். காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் சுந்தரம் பிள்ளை அவர்கள், பிற தென்னிந்திய மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்கும் சிறப்பினைப் பெற்ற மொழியாகத் திகழ்வது தமிழே ஆகும் என்பதை—ஒப்பற்ற உண்மையை—மனோன்மணீயம் என்னும் நூலின் வாயிலாக அழகுபடத் தெரிவித்துள்ளார். ஆசிரியர் தமிழ்த் தெய்வ வணக்கத்தைக் கூறுகையில்,

"பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு
அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
செயன்மறந்து வாழ்த்துதுமே"

என உண்மையை வலியுறுத்துகின்றார்.

தமிழ் மொழியினின்றும் காலப் போக்கில் பிரிந்து சென்ற ஒரு மொழியே தெலுங்குமொழி ஆகும் என்னும் உண்மையை நேராகவோ, அன்றிக் குறிப்பாகவோ, வலியுறுத்துவதற்காகவே சான்றோர்கள் பலர் தக்க காரணங்களுடனும் சான்றுகளுடனும் நூல்கள் வாயிலாகப் பல விளக்கங்களைத் தெரிவித்துள்ளனர். அவை வருமாறு:

(1) "தமிழ் மொழியில் சொற்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறிய விரும்புபவர்க்கு அதனோடு தொடர்புமிக்க மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு முதலிய மொழிகளை வேண்டு

மளவு நோக்குதல் இன்றியமை யாததாகும்"

பக்-6; "தமிழ்ச் சொல்லமைபு"

—வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

(2) "இவ்வாறு தமிழ்ப் பாஷையின் வழிமொழிகளாகித் தனித் தனி இயங்கப் புகுந்தனவற்றுள் தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் ஆகிய நான்கும் தலை நின்றனவாம்."

(பக்கம்—25)

"மொழிநூற் புலமையும் வடநூற் புலமையும் ஒருங்கே நடாத்திக் காலஞ்சென்ற சேஷகிரி சாஸ்திரியார் அவர்களும் தாமெழுதிய 'ஆந்திர சப்ததத்துவம்' என்ற நூலின்கண்ணே தெலுங்கிற்குத் தாய் தமிழென்றே கூறி அமைக்குமாற்றையுங்காண்க."

பக்-26; "தமிழ்மொழியின் வரலாறு"

—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

(3) "கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் முதலிய மொழிகள் தமிழினின்றும் பிறந்தவை என்பது ஆராய்ச்சியாளரால் முடிவுகட்டப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய மொழிகள் சகோதர மொழிகளென்றும், தெலுங்கு முதலிய மொழிகளுக்குத் தாய், தமிழ் அன்று என்றும் இப்பொழுது தெலுங்கு மக்களுட் சிலர் கூறுகின்றனர். இக்கருத்துத் தவறுடையதென் பதை மொழி ஆராய்ச்சி வல்ல அறிஞர் பல ஆண்டுகளின் முன்னரேயே கண்டித்துள்ளார்கள். வெவ்வேறு மக்கள் கலப்பதால் புதிய சாதியினர் தோன்றுவது போல மொழிகள் கலப்பதாலும் புதிய மொழிகள் தோன்றுகின்றன."

(பக்கம்-3-முன்னுரை)

"திராவிட மொழிகளும் இந்தியும்"

—ந. சி. கந்தையா பிள்ளை.

(4) "ஆந்திரர் நெடுங்காலமாக ஒரு தனி மன்பதையராக இருந்து வந்திருக்கின்றனர் எனினும், அவரது மொழி கடைக் கழகக் காலம் வரையில் கொடுந் தமிழாயும், கிளைமொழியாயுமிருந்து அதன்பின்னரே வடமொழிக் கலப்பால் இனமொழியாய்ப் பிரிந்துவிட்டது. கடைக் கழகக் காலத்தில் வேங்கட வெல்லையில் தெலுங்கு இருந்ததில்லை. அன்று வேங்கடமலை புல்லி என்னும் தமிழ் வள்ளலுக்குரியதாய் இருந்தது."

'புல்லிய—வேங்கட விறல் வரைப்பட்ட' (புறநானூறு-385)

பக்-83; "திராவிடத்தாய்"

—ஞா. தேவநேயன்.

தமிழ்மொழிச் சொற்களில் பல இன்றும் தெலுங்கு மொழியில் சிதைவு பெருமலும், சில சிதைவுற்றும், வேறு சில முழுமையாக

**யு. எஸ். உணவு உதவி**

அமெரிக்கா 1200 கோடி டாலருக்கு மேல் மதிப்புள்ள உணவுப் பண்டங்களை பிறநாடுகளுக்குக் கொடுத்திருக்கிறது. இந்தியாவுக்கு மட்டும் 3 கோடி டாலர் மதிப்புள்ள உணவுப் பண்டங்கள் கிடைத்துள்ளன. நாள்தோறும் 30,000 டன் உணவுப் பொருள்கள் அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன; இதில் 10,000 டன் இந்தியாவுக்கு வருகிறது.

மாற்றுருவம் பெற்றும் காணப்படுகின்றன. இருமொழிகளிலுமுள்ள ஒப்புமையுடைய சொற்கள் பலவும் மேற்கூறிய உண்மையையே-முடிவையே-வலியுறுத்துகின்றன. தெலுங்கு மொழியில் காணப்பெறும் (இடம் பெற்றுள்ள,—கலந்துள்ள) தமிழ்ச் சொற்களில் சில இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவை யாவன;

| தமிழ் | தெலுங்கு |
|---|---|
| மரம் | மானு |
| பெரு, பெரிய | பெத்த |
| செய் | செய்யு |
| கழுதை | காடிதெ |
| யான் | நேனு |
| உலக்கை | ரோகலி |
| கஞ்சி | கஞ்ஜி, கெஞ்ஜி |
| பள்ளி (சிற்றூர்) | பள்ளியா, பல்லி |
| முரசு | மொரயு |
| புட்டில் | புடி, புட்டி |
| உடுக்கை | உடுக |
| மதில் | மதுரு |
| கூழ் (கூழு) | கூடு |
| கோழி | கோடி |
| நீழல் | நீட |
| ஊழியம் | ஊடிகமு |
| கழை | கட |
| கீழ் | கிந்த (கிர்ந்த) |
| முழுகு | முனுகு |
| நாணம் | நான |
| கண் | கன்னு |
| மண் | மன்னு (மட்டி) |
| வெண்ணெய் | வென்னெ |
| குளன் | கொலன் |
| தேள் | தேலு |
| முள்(ளு) | முல்(லு) |
| பற்று | பட்டு |
| சுற்றம் | சுட்டமு |
| புற்று | புட்ட |
| உறி | உட்டி |
| குன்று | கொண்ட |
| தலை | தல |
| மலை | மல |
| பகை | பக |
| நீ, நின், நுன், ஐ, இ, ஆய், ஓய், நான், யான், ஏன், என் | நீவு, ஈவு, நீ, நின், வு, வி, நேனு, நே, ஏனு, ஏ, நா, நு, நி |
| நெல்லூர் (நெல்+ஊர்) | நெல்லூரு |
| ஒன்று (ஒரு) | ஒகடி, ஒண்டு, ஒக |
| இரண்டு (ஈர்) | ரெண்டு (இத்தரு) |
| மூன்று (மூ) | மூடு (முக்குரு) |
| நான்கு (நாலு, நால்) | நாலுகு |
| ஐந்து (அஞ்சு, ஐ) | ஐது (ஏனு) |
| ஆறு | ஆரு |
| ஏழு (எழு) | ஏடு (ஏள்) |
| எட்டு (எண்) | எனிமிதி (என்மிதி) |
| ஒன்பது (ஒன்பான், ஒன்பத்து, தொண்டு) | தொம்மிதி (தொம்மண்டு) |
| பத்து (பதின்) | பதி (பத) |
| நூறு | நூரு |

இன்றும் தெலுங்கு மொழியில் வழங்கப்பெறும் கதைகளும் கதைப் பகுதிகளிற் காணப்படும் பல சொற்களும் தொடர்களும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தெரிவித்த உண்மையையே வலியுறுத்துவனவாய் அமைந்திருக்கின்றன என்பதைக் கீழ்க்காணும் விளக்கங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. சான்றுகளாகக் காட்டப்பெறும் கதைப் பகுதிகள் தெளிவுற அமைய வேண்டும் என்ற காரணத்தை முன்னிட்டுத் தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் தரப்படுகின்றன. தமிழினின்றும் பிரிந்து சென்ற தெலுங்கு, வட

மொழிக் கலப்பால் இன்று பெருமளவிற்கு மாறுபட்டிருந்தாலுங் கூட முழுவதுமாக மாறுபட்டு விடவில்லை. (மாற்றப்பட முடியவில்லை) என்பதையே கதைப் பகுதிகளுந் தெளிவாகக் காட்டுகின்றன. அவை வருமாறு:

### ஒரு கதை

தமிழில்—ஒரு கதை (பார்ப்பனியும் கீரிப்பிள்ளையும்)

"ஓர் ஊரிலே ஒரு பார்ப்பனன் இருந்தான். அவனிடம் ஒரு மூங்கா (கீரி) இருந்தது. அவன் அதை மிக விருப்பாய் வளர்த்திருந்தான். ஒருநாள் அவனுக்கு ஓர் ஊருக்குப் போகவேண்டிய பணி (வேலை) வந்தது. ஆகையால் அம்மூங்காவைத் தன் மனைவியிடம் ஒப்புவித்துப் போயினன். மறுநாள் அவள் தன் பிள்ளையைத் தொட்டிலிலே தூங்க வைத்து, அம்மூங்காவைத் தொட்டிற் பக்கம் காவல் வைத்து நீர் (தண்ணீர்) இறைத்துக் கொண்டு வருவதற்குப்போனாள். அதற்குள், பிள்ளை தூங்கிக் கொண்டிருந்த போது தொட்டிற் பக்கம் ஒரு பாம்பு வந்தது. அம் மூங்கா அப்பாம்பைப் பற்றி (பிடித்து)த் துண்டஞ் செய்து போட்டுவிட்டு நடந்த செய்தியைத் தாய்க்குத் தெரியப் படுத்துவதற்கு அவளிடம் போனது. அப்போது, அவள் மூங்காவின் மூஞ்சியில் ஒட்டிக் கொண்டிருந்த நெய்த்தோரை (அரத்தத்தை)ப் பார்த்து, அது தன் பிள்ளையைக் கடித்துக் கொன்றுவிட்டது என்று நினைத்துக்கொண்டு, அம்மூங்காவை அடித்துக் கொன்றுவிட்டாள். பிறகு இல்லத்திற்குள் போய்த் தொட்டிலிலே நலமாய்த் தூங்கிக் கொண்டிருந்த பிள்ளையையும், தொட்டிற்பக்கம் மூங்கா பற்றிக் கொன்ற பாம்பையும் பார்த்துச் சாலவும் வருந்தினாள்." (உஞ்சு—உண்டு என்பதன் பிறவினை. உன்ன = உள்ள)

பக்கம்—97 "திராவிடத்தாய்"
—ஞா. தேவநேயன், எம். ஏ.

தெலுங்கில்—இக்கதைப் பகுதி:- (தமிழில் முன்னர்க் கூறியதே)

"ஒக்க ஊரிலோ ஒக்க ப்ராஹ்மணுடு கலடு. அதனிவத்த ஒக்க முங்கி உண்டெனு அதடு தான்னி பஹுஜாக்ரதகா பெஞ்சுதூ உண்டெனு. ஒக்க நாடு அதனிகி ஒக்க ஊரிகி போவலசின பனி வச்சினதி. கனுக, ஆ முங்கினி தன பார்யக்கு ஒப்ப

> **உணவுக் குறிப்பு**
>
> இந்தியாவில் பயன்படும் பல வகைத் தானியங்களிலும் கேழ்வரகு மிகச் சிறந்த சத்துடையது. அதில் அரிசியை விடக் கூடுதலாக 30 மடங்கு கால்சியமும், 5 மடங்கு இரும்புச் சத்தும் உள்ளன. பச்சை வேர்க்கடலை, பட்டாணி, அவரை, மக்காச் சோளம் முதலியன புரோட்டீன் சத்தை வளர்க்கும். முருங்கை, அகத்தி, கொத்துமல்லி, முதலிய எல்லா விதக் கீரைகளிலும்–பாலுக்கும் முட்டைக்கும் அடுத்தபடியாக–எல்லாவித வைட்டமின்களும் உலோகச் சத்துக்களும் நிறைந்துள்ளன. அன்றாட உணவில் கீரையைச் சேர்த்துக்கொள்ள வேண்டியது மிகமிகத் தேவை. உளுத்தம்பருப்பு, பச்சைப் பயறு, துவரம்பருப்பு ஆகிய பருப்பு வகைகளிலும், மீன், முட்டை, ஆட்டிறைச்சி, பன்றி இறைச்சி முதலியவற்றிலும், வாதுமை (பாதாம்), முந்திரி வேர்க்கடலை முதலியவற்றிலும் நிறைய புரோட்டீன் சத்து இருக்கிறது.

கிஞ்சி போயெனு. மரு நாடு ஆமெ தன பிட்டனு தொட்லலோ நித்ரபுச்சி, ஆ முங்கினி தொட்ல தக்கிர காவலி உஞ்சி, நீள்லு தோடுகொனி ராவடானக்கு வெள்ளினதி. அந்தலோ, பிட்ட நித்ரிஸ்தூ உண்டே தொட்லவத்திக்கி ஒக்க பாமு வச்செனு. ஆ முங்கி ஆ பாமுனு பட்டி துண்டெமுலு சேசி பாரவேசி, ஜரிகின சங்கதி தல்லிக்கி தெலியச்சேயடானக்கு ஆமெவத்திக்கி வெள்ளினதி. அப்புடு, ஆமெ முங்கி மூத்திக்கி அண்டுக்கொனி உன்ன நெத்துரு சூச்சி, அதி தன பிட்டனு கரிச்சி சம்பினதி அனி தலஞ்சுக்கொனி, ஆ முங்கினி கொட்டி சம்பெனு. தருவாத்த இண்டிக்கி போயி, தொட்லலோ சுகமுகா நித்ரபோத்தூ உன்ன பிட்டனுன்னு சூச்சி, சாலா துக்கப்படெனு.''

(பக்கம்-96)

''திராவிடத் தாய்''

—ஞா. தேவநேயன் எம். ஏ.,

## பிற ஆதாரங்கள்

கதைப் பகுதிகள் மாத்திரமன்றி ஆந்திர நாட்டில் வழங்கப்படும் ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களுங் கூடத் தமிழ்ப் பெயர்களாகவே இருக்கின்றன. இன்றுள்ள ஆந்திரநாடு ஒரு காலத்திலே—முற்காலத்திலே—தமிழ்நாடாக விளங்கியது என்பதையே பெயர்கள் வலியுறுத்துகின்றன. தமிழ் மொழியின் ஆற்றலை ஆந்திரர்களால் முழுவதும் அழிக்க முடியவில்லை என்பதையும், தெலுங்கு தமிழினின்றும் பிரிந்து சென்றதே ஆகும் என்பதையும் அவை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆந்திர மாநிலத்து ஊர்ப் பெயர்கள் பலவும் தமிழ்ப் பெயர்களாய்த் திகழ்வதை அழகுபடத் தொகுத்துக் காட்டியுள்ளார் திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள். விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள நிலப்பரப்பு முழுவதும் ஒரு காலத்தில் தமிழ் மொழி வழங்கப்பட்ட (வழக்கிற் குட்பட்ட) நாடாக விளங்கியதாதல் வேண்டும் என்பதையே ஊர்ப் பெயர்கள் இன்றும் வலியுறுத்திக் காட்டுகின்றன. ஊர்ப் பெயர்கள் பற்றிய விளக்கம் :

''தெலுங்கர் தமிழ் நாட்டிற் குடியேறவே, தனித் தமிழ் நிலையங்களாயிருந்த திரு வேங்கடம், திருக் காளத்தி, திருத்தணிகை, முதலிய வடபாற் சிவநகரங்கள் இரு—மொழி நிலையங்களாக மாறி விட்டன. தெலுங்கு நாட்டையடுத்த தமிழரும் தெலுங்கைக் கற்று தெலுங்கராக மாறிவருகின்றனர்.

தெலுங்கு தற்போது மிகுந்த வடமொழிக் கலப்புள்ளதாயிருந்தாலும், ஒரு காலத்தில் வடமொழிமணமேயில்லாத கொடுந்தமிழ் வகையாயிருந்ததே. இன்றும் தெலுங்கு நாட்டூர்ப் பெயர்கள் பல; ஊர் (பாலூரு), புரம் (அனந்தபுரம்), மலை (அனிமல), குடி (தேவ குடி), கோடு (முனுகோடு), கோட்டை (கண்டிகோட்ட). பேட்டை (நேக்குணம்பேட்ட), பள்ளி (கொத்த பல்லி), குன்றம் (பெல்லம் கொண்ட), கல் (மின்னக் கல்லு), பாலம் (நாயனிப் பாலம்), கூடம் (நடிகூடெம்), குளம் (ஸ்ரீகாகுளம்), வீடு (பட்ல வீடு), மந்தை (எல்லமந்த), புரி (நெமலி புரி), சாலை (கண்ட்ட சால), பட்டினம் (விசாகப் பட்ணம்), பாடு (தாவிப்பாடு), தலை (குர்னூதல) எனத் தனித் தமிழ் ஈற்றனவாயே யுள்ளன.''

(பக்கம்—87)

''திராவிடத் தாய்''

—ஞா. தேவநேயன் எம். ஏ.

தெலுங்கு மொழிப் பற்றும் பிற மொழி வெறுப்பும் உடையோருள் சிலர், தெலுங்கு தமிழுக்குக் கடன்பட்ட மொழி என்னும் உண்மையைக் கூறிவிட்டால் தெலுங்கு மொழியின் சிறப்பே மறைந்து போய்விடுகின்றது எனக் கருதிப் பொருந்தாத விளக்கங்களையும் கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றனர். வடமொழியாளர்களைப் பார்த்துத் தெலுங்கர்களில் சிலர் இப்பொழுது புரட்டுச் செய்ய—சூடு போட்டுக் கொள்ள—ஆரம்பித்திருக்கின்றனர் என்ச் சொல்லுவதைத் தவிர அத்தகையோரைப் பற்றி வேறொன்றும் நாம் கூறுவதற்கில்லை. அவ்வாறு பேசுவோரைப் பார்த்து எள்ளி நகைக்கும் முறையில்தான், தமிழ்மொழிப் பற்றுக்கொண்டவராய் அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு மறைந்த பெரியார் J. லாசரஸ் (J. Lazarus) அவர்கள் அரிய ஒரு விளக்கத்தை—உலக வழக்கொடுபட்ட உண்மையை—தெரிவித்துள்ளார். காலஞ்சென்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களும் பிறரும், சிலர் கூறும் தவறான வாதங்களுக்கு விடையளிப்பார் போன்றே பல அரிய விளக்கங்களைத் தந்துள்ளனர். விளக்கங்கள்:—

(a) "கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் தமிழினின்றும் பிறந்தவை என்பது ஆராய்ச்சியாளரால் முடிவு கட்டப்பட்டுள்ளது. தெலுங்கு மக்களுட் சிலர், தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய மொழிகள் சகோதர மொழிகளென்றும், தெலுங்கு முதலிய மொழிகளுக்குத் தாய் தமிழ் அன்று என்றும் இப்பொழுது தெலுங்கு மக்களுட் சிலர் கூறுகின்றனர். இவ்வாறு கூறுவது, வளர்ந்த பிள்ளைகளில் சிலர் தங்களுக்கும் பெற்றோருக்கும் (அதாவது மரபிற்கும்) எத்துணைய உறவும் இல்லை (தொடர்பில்லை) என மறுத்துக் கூறும் பழம் பல்லவியைப் போன்றதேயாகும். (South Indian Research-Vol. I-Rev. J. Lazarus, B. A., D. D.:—This is the old song of grown up Children turning proud and disowning all relationship to their ancestry)."

(b) "வடமொழி தமிழொடு மருவுமுன்னே, அம்மொழியினின்றும் பாகத பாஷைகள் பல கிளைத்துத் தனித்தனி பிரிந்தன. இதற்கிடையிலேதான் தமிழ் மொழியினின்று தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவமென்னும் வழிமொழிகள் கிளைத்தன.

இவ்வழிமொழிகளிலே தெலுங்குதான் வடமொழியொடு மிகவும் கலந்து விசேடமான திருத்தப்பாடடைந்தது; தனது நெடுங்கணக்கையே திருத்தி விரித்துக் கொண்டது; பல்லாயிரஞ் சொற்களையும் மேற்கொண்டது; வடசொல் இலக்கணத்தையும் மிகத் தழுவிக்கொண்டது. தெலுங்கு இலக்கணமெல்லாம் தமிழ்ப் போக்கில் இயங்க வேண்டியிருக்க, அதைவிடுத்து வடமொழிப் போக்கை அனுசரிக்கப் புகுந்தன. புகுதலும் வடமொழியிலே தெலுங்கிலக்கணம் அமைவதாயிற்று. இஃது இடைக்காலத்திலிருந்த நன்னயபட்டர் ஆதிய பிராமண வையாகரணர்கள் செய்த தவறு. இத்தவறு காரணமாகத் தெலுங்கு தமிழின் வழிமொழியன்றென்பது அசங்கதமாம்."

(பக்-30-31)

"'தமிழ் மொழியின் வரலாறு''

—வி. கோ. சூ.

(c) "It is evident that the people now known as Tamils were together once with the Telugus in potentia."

(p-57)

"The Origin and the Glorious Past of the Andhras".

By. Rev. J.M. Anthos.

என்பனவாகும்.

தெலுங்கு தமிழினின்று பிரிந்து வளர்ச்சியடைந்தது என்பதை அறிந்திருந்தும், தமிழையும் பிறமொழிகளையும், சிறப்புடைய மொழிகளெனத் தெலுங்கர் சொல்லத் தயங்குகின்றனர். ("இனி, தெலுங்கர் தமது மொழியைக் குறித்து, 'உச்சாரணம் சரியில்லாமல், அர்த்தம் தெளிவாயில்லாமல், தெரிந்தும் தெரியாமல் செவிக்குத் துன்புறுத்துகின்ற பாஷைகள் மஞ்ஞேஹரமான சொற்களால் முத்தம் ஒழுகுகின்ற தெலுங்குக்குச் சரியாகுமா?' என்று உரைத்திருக்கின்றனர்."

(பக்-55);

"தென்மொழிகள்"

—வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

காலப்போக்கில் சமஸ்கிருதத்தின்பால் (வட மொழி) கொண்ட காதல் காரணமாகப் பிறமொழிகளைப் பற்றித் தெலுங்கர் குறைபடக் கூறினர் என்பதை வலியுறுத்துவதற்கான சான்றுகள் நிரம்ப உண்டு. தெலுங்கு மொழியில் தமிழிலுள்ளவாறே "ழ" கரம் ஒரு காலத்தில் வழக்கிலிருந்தது என்பதைக் கல்வெட்டுச் செய்தி ஒன்றின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. தெலுங்கு, தமிழினின்று பிரிந்து சென்று, அதனையே முதன்மையாகக்கொண்டு (எழுத்துக்களையும் சொற்களையும் இரவலாகப் பெற்று) வளர்ச்சி யடைந்தது என்பதற்கு இதனைக் காட்டிலும் சான்று வேறு காட்டத் தேவையில்லை. காலப்போக்கில் "ழ" கரம் எவ்வாறு திரிந்து, பின்னர் மறைந்தது என்பதனையும் கல்வெட்டுச் செய்தி தெளிவாகவே தெரிவிக்கின்றது. செய்தி வருமாறு:

'தெலுங்கில் பண்டு "ழ" கரம் வழங்கி வந்துள்ளது யுத்த மல்லனுடைய (898) பெஜவாட சாசனத்தில் "அழிபுட," 'ழஸ்ஸி" என்னும் சொற்கள் "ழ" கார லிபியில் எழுதப்பட்டுள. இரண்டாங் குலோத்துங்க சோழனுடைய பொந்துவக்ராமத்துச் சாசனத்திலும் (1134) "கழ்க," "நழுமு," "ஆட்ட மொழிநி குண்ட்ட" — முதலிய சொற்களில் "ழ" காரம் எழுதப்பட்டுள்ளது. இதனால் சாசனத்தில், கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலும் தொல்வழக்கின்படி "ழ" காரம் எழுதப்பட்டுள்ளது என்று அறியலாகும். ஆயினும், 11-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே "ழ" கரம் வழக்கில் "ட" கரமாயும், "ர" கரம் "ன" கரம் முதலியனவாயும் திரிந்துவிட்டதாகலின், இலக்கியங்களில் "ழ" கரம் காணப்படவில்லை. அதனால் இலக்கணவாசிரியர் கூறிற்றிலர்.'

(பக்-61);

"தென்மொழிகள்"

—வே. வேங்கட ராஜுலு ரெட்டியார்.

---

ப. நா. பாலசுப்பிரமணியன், B. Sc. D.H.M.P.

# காற்றுப் பதனக்கம்
## (AIR - CONDITIONING)

[காற்றுப்பதனக்க முறைக் கருவி இன்று பெருஞ் செல்வர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வருகின்றது. மின்சார விளக்கைப் போல, சைகிளைப் போல, பிற வாழ்க்கை வசதிகளைப் போல, இக் கருவியும் பெருவாரியான மக்களுக்குப் பயன்படும் நாள் வரவேண்டும். இக்கட்டுரையாளர் காற்றுப் பதனக்க முறையை சுருங்கக் கூறி விளங்க வைக்கிறார்.]

மனிதனின் உடல் நலன் பெரிதும் அவனைச் சூழ்ந்துள்ள காற்றின் இயல்பைப் பொறுத்துள்ளது. நாம் உள்ளிழுக்கும் மூச்சுக் காற்றில் தூசி, ஈரப்பசை ஆகியவை உண்டு. தூய்மையற்ற காற்றினை உள் இழுப்பதால் பலவித நோய்களுக்கு இலக்காக நேருகின்றது. குறிப்பாக, குழந்தைகளின் நுரையீரல் தூய்மையற்ற காற்றினைக் கொள்வதால் செவ்வனே செயலாற்ற வியலாது இடர்ப்பட நேருகின்றது. இதன் பயனாக குழந்தைகளுக்கு நுரையீரல் சம்பந்தமான நோய்கள் தோன்றுகின்றன. இரத்தம் தூய்மையாக்கப்படுவதில் இடர்ப்பாடு ஏற்படுவதால் நோய்களைத் தடுக்கும் திறன் குறைகின்றது.

குறிப்பிட்ட வெப்ப நிலையில், குறிப்பிட்ட ஈரப்பசையுள்ள காற்றினையே ஏற்றுக்கொள்ளும் இயற்கையது மனித உடல். பதனக்கம் செய்யப்பட்ட காற்றினைக் கொள்வதாலும் அக்காற்று உடல்மீது படுவதாலும் ஏற்படும் நன்மைகள் ஏராளம். பதனக்கம் செய்யப்பட்ட காற்று நாம் நலமாக வாழ்வதற்கேற்ற தட்ப வெப்ப நிலையைத் தருகின்றது.

நெசவாலைகளில் நெசவு நன்கு நடைபெற காற்றில் குறிப்பிட்ட அளவு ஈரப்பசை இருத்தல் வேண்டும். இல்லையேல் நூலிழைகள் காய்ந்து அறுந்துவிடும் எனவே இதனைத் தடுக்கும் பொருட்டு செயற்கை முறைகளில் நெசவாலைகளில் காற்றில் போதிய ஈரப்பசை ஏற்படுத்தினார்கள். காற்றுப் பதனக்கத்தின் பிறப்பிடமே நெசவாலைதான்.

காற்றுப் பதனக்கம் செல்வச் செருக்கின் அறிகுறி யென்பது சிலரது வாதம். ஆனால் ஆலைகளில் பதனக்கம் செய்யப்பட்ட காற்றின் சூழ்நிலையில் பணிபுரியும் தொழிலாளர்களது வேலைத் திறன் சிறப்புற அமைவதாக ஆராய்ச்சி அறிவிக்கின்றது. அச்சகங்களில், தாளில் அச்சேறிய மை சடுதியில் உலர, காற்றில் குறிப்பிட்ட ஈரப் பசைதான் இருக்கவேண்டும். எனவே பதனக்கம் செய்யப்பட்ட காற்றின் துணைகொண்டு விரைவில் அச்சடிக்க முடிகின்றது. எனவே, காற்றுப் பதனக்கம் தேவையானதெனத் தெளியலாம்.

நாம் இழுக்கும் காற்று மூக்கு வழியாக மூச்சுப்பைகளுக்குச்

செல்லுகின்றது. மூக்கிலுள்ள மயிர்கள் காற்றிலுள்ள தூசியைத் தடுக்கின்றன. இங்ஙனம் தூசி நீக்கப்பட்ட காற்று நுரையீரலை அடைகின்றது. இதனால் நமது மூக்கு ஓர் இயற்கைப்பதனுக்கியென இயம்பலாம்.

காற்றுப்பதனுக்கம் எனின் தூய்மையாக்கப்பட்ட குளிர்ச்சியான காற்றுள்ள சூழ்நிலை என்பது பலரது எண்ணமாயுள்ளது. ஆயின், வெப்ப நாட்களில் குளிர்ச்சிதரவும், குளிர் நாட்களில் சூடான சூழ்நிலை உண்டாக்கவும் காற்றுப்பதனுக்கிகள் பயன்படுகின்றன.

காற்றின் தூய்மையைக் கட்டுப்படுத்தல், ஈரப்பசையின் அளவினை ஏற்றவாறு செய்தல், வெப்ப நிலையைக் கட்டுப்படுத்தல், உடலின் இயல்புக் கேற்ற வண்ணம் காற்றின் இயக்கத்தினைக் கட்டுப்படுத்தல் ஆகிய செயல்களனைத்தும் அடங்கியதே காற்றுப்பதனுக்கம். உடல் நலத்திற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்குவதே காற்றுப் பதனுக்கமெனப்படும்.

## பதனுக்க வகைகள்

காற்றினைப் பதப்படுத்த, மத்திய நிலைய முறை, (Central Station Type), குழாய் முறை (Conduit System), பெட்டி முறை (Unit Installation) போன்ற முறைகள் கையாளப்படுகின்றன.

பதனுக்கம் செய்யப்பட வேண்டிய காற்று பெரும்பாலும் அறையிலிருந்தே எடுத்துக்கொள்ளப்படுகின்றது. சில சமயங்களில் சிறிதளவு வெளிக்காற்றை எடுத்துக்கொண்டு உள்ளிருக்கும் காற்றுடன் உரிய முறைகளில் கலந்து பதனுக்கம் செய்வதும் உண்டு. பதனுக்கப்பட வேண்டிய காற்றினை உள்ளிழுப்பதற்கு தனியான விசிறிகள் உள்ளன. எளிய காற்றுப் பதனுக்கியொன்றின் அமைப்பையும் இயங்கும் விதத்தையும் இங்கு காண்போம்.

தனி விசிறிகளால் இழுக்கப்பட்ட பதனுக்கம் செய்யப்பட வேண்டிய காற்று கருவியின் முதலில் உள்ள வடிகட்டியின் வழியாகப் பாய்கின்றது. இக்காற்று வடிகட்டிகள் (Air Filters) தாவர நார்களால் ஆக்கப்பட்டவை. வடிகட்டிகளின் வழியாகச் செல்லும் காற்றிலுள்ள தூசி நீக்கப்படுகின்றது. வடிகட்டியிலிருந்து வெளிவரும் காற்றிலுள்ள நுண்ணிய தூசிப்பொருட்கள் அடுத்துள்ள நீரருவியில் கழுவப்படுகின்றன. வடிகட்டப்பட்ட காற்றில் உடல் நலத்திற்கு ஊறு விளைக்கும் நுண்ணுயிர்கள் இருக்கக்கூடும். அத்தகைய நுண்ணுயிர்களை பாதரச ஆவி விளக்குகளிலிருந்து வெளிவரும் புற ஊதாக் கதிர்கள் அழித்துவிடுகின்றன. புற ஊதாக் கதிர்கள் நுண்ணுயிர்களைக் கொல்லும் திறம்படைத்தவை. தூய்மையாக்கப்பட்ட காற்று குழாய்ச் சுருள் வழியாகப் பாயும்போது தேவைக்குத் தகுந்தபடி சூடாகவோ அன்றிக் குளிர்ச்சி

---

### தமிழ்நாடு

வறுமையிலாழ்ந்துள்ள 62,000 முதியவர்களுக்கு நம் அரசாங்கம் பென்ஷன் கொடுத்துவருகிறது. ஆரம்பப் பள்ளிகளிலுள்ள குழந்தைகளில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு இலவச நடுப்பகல் உணவு தரப்பட்டு வருகிறது.

(“சென்னைச் செய்தி”)

யாகவோ ஆக்கப்படுகின்றது. வெளிவரும் காற்றினைப் பின்னும் சூடாக்கவோ அன்றி உடலுக்கேற்ற ஈரப்பசையுடையதாகச் செய்யவோ ஒரு சிறிய பாத்திரத்தில் சுடு நீர் அல்லது ஈரம் உறிஞ்சும் இரசாயனப் பொருள் வைக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பதனுக்கம் செய்யப்பட்ட காற்றினைத் தேவையான இடத்தில் வீசச் செய்ய பக்கலிலுள்ள விசிறி பயன்படுகின்றது.

காற்றுப் பதனுக்கத்தால் மனித குலம் அடையும் பயன்கள் எண்ணிலடங்கா. இப்பதனுக்க முறையைக் கண்டறிந்த அறிவியலறிஞர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

---

*"ஒருவன் ஒன்றை உண்மை என்று ஆராய்ந்து உறுதி செய்துவிட்டால், அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் அவனிடம் உண்டு."*

—கதே.

* * *

*"நான் மேலும் சிறிது அதிக அன்பு காட்டவேண்டும்; என்னைச் சுற்றியுள்ளவர்களின் குறைகளை இன்னும் சிறிது மிகுதியாகப் பொறுத்துக்கொள்ள வேண்டும்; இன்னும் சிறிது கூடுதலாகப் புகழுரை கூறவேண்டும்."*

—Edgar Albert Guest.

* * *

*"பெரும்புயல் வீசினாலும் கெடிகாரம் டிக்-டிக் என்று ஒரே மாதிரித்தான் அடித்துக் கொண்டிருக்கும்; நல்லது-கெட்டது எது நடந்தாலும், அமைதி கொண்ட மக்கள் திகைப்போ, அச்சமோ இல்லாமல் எப்போதும் போல் பொறுமையாகவே நடந்து கொள்வர்."*

—ராபர்ட் லூயி ஸ்டீவன்சன்.

* * *

*"முயற்சி உடையவனே உயிர் உள்ளவன்; முயற்சியில்லாதவன் சோம்பேறியாகத் திரிவான்; அல்லது உறங்குவான். அவ்வால் எத்தகைய செயலும் நடக்காது; எனவே மரத்துக்கு ஒப்பாவான். உயிரை வைத்துக்கொண்டு எந்தத் தொழிலும் செய்யாதவன் சவம்; முயற்சியற்றவனும் சவமே."*

—தாமஸ் கார்லைல்.

நா. வரதராஜுலு நாயுடு

# 'கங்கை என்னும் திருநதி'

*[பெருநதி, விரிகடல், உயர்மலை, அடர்காடு—போன்ற இயற்கைக் காட்சிகளைக் காணும்போது மனிதன் இயற்கையின் இணையற்ற தோற்றங்களில் ஆழ்ந்து சொக்கிவிடுகிறான்; ஆனால் சொல்லால் கூறி மகிழவும் மகிழ்விக்கவும் ஆற்றலற்றவனாகிறான். எனினும் கவிஞர்களும் புலவர்களும் சிறு அளவேனும் சொல்வடிவம் கொடுக்க முயல்கின்றனர். கற்பனைக் கதையான இராமாயணத்தில் வால்மீகி கங்கை ஆற்றை எவ்வாறு வர்ணிக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார், இராமாயண இலக்கியத்தில் மூழ்கித் திளைக்கும் இக் கட்டுரையாளர்]*

கம்பன் காவியத்தில் விசுவாமித்திரன் இராம லக்குவரை 'மிதிலையர் கோமான் புரியும் வேள்வியைக் காண்தும் நாம்' என அழைத்துச் செல்லும் வழியில் 'பொன்னியைப் பொருவும் கங்கை என்னும் அக்கரை பொரு திரு நதி கண்டார்' என்பதனோடு கங்கையைக் குறித்த பேச்சை கவிஞர் நிறுத்தி விடுகிறார்.

அயோத்தியா காண்டத்தில் இராம-லக்குவர் சீதையுடன் வனம்புகு முன் 'விரிதிரைப் புனல் கங்கையை மேவினார்'. மேவி, முனிவரால் உபசரிக்கப்பட்டு, 'மங்கையர்க்கு விளக்கன்ன மானைச் செங்கைபற்றி (இராமன்) கங்கையின் ஆடினான்'. 'மந்தாகினி சீதை தனிமையை உன்னுவாள் திரைக்கை நீட்டிச் செவிலியின் ஆட்டினாள்'.

இராமனைத் தொடர்ந்துவந்த பரதன் 'காவிரி நாடன்ன கழனி நாடு ஒரீஇ—கங்கை எய்தினான்'

இவ் இடங்களில் கங்கையைப் பற்றிக் கம்பன் வேறெதுவும் கூறவில்லை.

வான்மீகி முனிவர் கங்கைக் கரையில் வாழ்ந்தவர். அந்நதியைப் பல பருவங்களிலும் பல இடங்களிலும், பல தோற்றங்களிலும் பார்த்தவர். கங்கையிடம் அளவிலாத அன்பு உடையவர். காவேரியைத் தமிழ்ப்புலவர்கள் போற்றியுள்ளதைப் போல அவர் கங்கையைப் போற்றியுள்ளார். பாலகாண்டத்தில் கங்கையின் வரலாற்றிற்காகப் பல சருக்கங்களை ஒதுக்கியுள்ளார்.

ஆறுகள் கடலின் மனைவியர் என்பது கவிஞர் கற்பனை கங்கையோ சாகரத்தின் முக்கிய மனைவி, 'மகிஷி', என்பர்.

கவிநயம் மிளிரும் அவர் சொற்கள். கங்கையின் நீர்ப் போக்குக்கேற்ப, சுலோகங்களும் ஓடும், வீழும், புரளும், சுழிக்கும், குதிக்கும், அறையும், நிற்கும்,

பாயும் பொருளோடு புணர்ந்த ஓசை. அந்த சுலோகங்கள் சில வற்றின் தமிழ் ஆக்கம் ஈண்டு தருகிறேன், ஓசைக்கு எங்கு போவேன்?

பாலகாண்டம் 43-ம் சருக்கம்:

வெள்ளிப் பனி மலையின் மீது இலந்தினி, பாவனி, நளினி என்னும் மூன்று ஆறுகள் பனி கரைந்ததால் தெளிந்த நீருள்ளன, கிழக்கு நோக்கிப் பாய்ந்தன. சுசட்சு (அழகிய விழி)-இப்போது ஸட்லஜ் என்பது—சீதா, சிந்து என்னும் மூன்று ஆறுகள் மேற்கு நோக்கிப் பாய்ந்தன.

பாகீரதி என்னும் ஏழாவது ஆறு வெண் நிறத்ததாய் ஒளி விஞ்சி பகீரதனைத் தொடர்ந்தது.

கங்கை மலைகளினூடே நெளிந்து வரும்போது, நெடும் தொலைவில் உள்ளவரும் ஆற்றைக் காணும் முன்பே அதன் இரைச்சலைக் கேட்டனர். மீன்களும், ஆமைகளும், சிம்சுமாரங்களும் நீரில் விளையாடின மலை உச்சிகளில் இருந்து கங்கை சமதரையை நோக்கிச் செல்வதைக் கண்டவர் மன எழுச்சி கொண்டனர். 'நிலம் எத்துணை அழகியது; இந்நீர் நிலத்தை வளம்படுத்தி மக்களுக்கு உணவு தரும், உள்ள எழுச்சி தரும், வாழ்வு தரும்' என வியந்தனர்.

கங்கை நீர்வீழ்ச்சிகள் மின்னலைப் போலக் கண்ணைப் பறித்தன. நீர்வீழ்ச்சியினின்று எழும் நுரைத்திவலைகளால் வானவில் உண்டாகியது நீராவி வெண்ணிற மேகங்கள் போலவும், பறக்கும் அன்னங்கள் போலவும் காட்சி அளித்தது.

பூமியில் விழுந்த கங்கை வளைந்து வளைந்து வேகமாக ஓடியது. பணிந்து ஒரு சமயம் போகும்-உடனே நிமிரும். மெல்ல, மெல்ல நகரும்-உடனே விழுந்தடித்து ஓடும். ஆறுகள் பள்ளத்தாக்குகளில் வரும்போது நீர் நீரோடு மோதும். பலவாகப் பிரியும்; பிரிந்த ஆறுகள் மீண்டும் கூடும். மேலே எழும்—கீழே விழும்.

அழுக்கற்ற, வெண் நிறமுள்ள நீர் கதிரவன் ஒளியில் மிளிர்ந்தது.

கங்கையைக் கண்ட மக்கள் மனத்திலும் முகத்திலும் புத்தொளி தோன்றியது. இருள் அகன்றது. குடி உயர்ந்தது.

அயோத்தியா காண்டம், 50-ம் சருக்கம்:

நெடுந்தூரம் தரையில் படர்ந்து வருவதால் நீர் தெளிந்தும், உறைபனி உருகி வருவதால் தண்மை நிறைந்தும், உள்ள கங்கைத் திருநதியை இராமன் கண்டான். தவஞ் செய்வோர் குடில்கள் கங்கைக் கரையை அழகு செய்தன அக்குடில்களுக்கு இடையே கங்கையின் நீர் நிறைந்த சிறு குளங்கள் இருந்தன தேவரும், தானவரும், கந்திருவரும், நாகரும் கங்கையை நாடினர்: பாடினர்; ஆடினர், கங்கைக்கும் குடில்களுக்கும் அழகு தந்தனர்.

நீரோட்டம் அட்டகாசம் நிறைந்திருந்தது; பாறைகளில் அடிக்கும்போது சினம் நிறைந்திருந்தது. நுரைகள் அழுக்கற்று ஆறு சிரிப்பதுபோல இருந்தது. ஆற்றுப்போக்கு திசை மாறும் போது மந்தாகினியின் அவிழ்ந்துவிட்ட கூந்தல் பின் படர்வதுபோல இருந்தது.

சில இடங்களில் நீர்ச்சுழிகள் நிறைந்திருந்தது. ஒரு இடத்தில் ஆறு அகன்றிருக்கும்; மற்

ஒருரு இடத்தில் குறுகி இருக்கும்.

ஒரு இடத்தில் வனப்புடன் கருணை கலந்திருக்கும். ஒரு இடத்தில் வனப்புடன் சோகம் கலந்திருக்கும். ஒரு இடத்தில் அமைதியுடன் கம்பீரம்; மற்றோர் இடத்தில் அமைதியின்றி சலனம். ஒரு இடத்தில் அச்சம்தரும் நீர்ப் போக்கு; மற்றோர் இடத்தில் நம்மை ஆதரத்துடன் வர அழைக்கும் நீர்ப் போக்கு.

ஒரு இடத்தில் இருபக்கமும் வெண்மணற் பரப்பு. மற்றோர் இடத்தில் பாறைகள்; வேறு இடத்தில் அகன்ற கரைகள்.

ஆற்றில் அன்னங்கள் மிதந்தன நாரைகள் நின்றன. சக்கரவாகப் புட்கள் ஆணோடு பெண்குலாவின. பல பறவைகள் ஒலி எழுப்பி விளையாடின.

ஆற்றங்கரை மரங்கள் நிறைந்து சோலையுடன் விளங்கியது. சில இடங்களில் மடுக்கள் பலவகை மலர்களால் மூடப்பட்டிருந்தது. ஆற்றின் படுகைகள் தாமரைவனமாகத் தோன்றியது. பூக்களின் மீது தண்ணீர் ஓடியது; தண்ணீர் மீது பூக்கள் மிதந்தன.

பூக்கள் நிறைந்த மரங்களாலும், இளந்தளிர்களோடு கொடிகளாலும், நீர்ப்பூக்களாலும் அவ் ஆறு அணிகலன்களோடு, பெருமித நடைபோடும் தன் அழகு உணர்ந்த இளம்பெண் போலத் தோன்றியது.

'வையை என்னும்
பொய்யாக்குலக்கொடி
புண்ணிய நறுமலர் ஆடை
போர்த்து
'புனல் யாறு அன்று: இதுபூம்
புனல் யாறு' என
அரும் துறை இயங்கும்
பெருந்துறை
—என்பது சிலப்பதிகாரம்.

* * *

● கங்கை யாறு ஏறத்தாழ 1500 மைல் ஓடுகிறது. பனி தோய்ந்த, கடல் மட்டத்துக்கு 20–25,000 அடி உயரமுள்ள இமயமலைச் சாரலில் தோன்றி குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்களின் வழியாக ஓடி, 10-15 கோடி மக்களுக்கு உணவு தந்து 'மகவாய் வளர்க்கும் தாய்' ஆகி இன்றைக்கும் இருண்ட சுந்தர வனக் காட்டிடையே பல சிற்றாறுகளாய்ச் சிதைந்து, கடலுள் விழுகிறது. இவ் ஆற்றின் நீர்த்தேக்கம் (Watershed), மழை நீர் (Catchment area) உலகிலேயே பெரிய தொன்று. இதில் வந்து சேரும் ஆறுகள் எண்ணிறந்தன. இவ் ஆறு பல இடங்களில் பல வேறு தோற்றம் அளிப்பதும் பல கவிஞருக்குப் பல கற்பனை ஊற்றாக இருப்பதும் வியப்பல்ல.

அடியேன் இவ் ஆற்றைப் பல முறை பல இடங்களில், பல உருவங்களில் கண்டது வான்மீகியின் கருத்தை ஈர்க்கும் கவிதையில் ஈடுபடச் செய்தது.

---

**இரட்டை எழுத்துக்கள்**

பல ருஷ்ய சொற்களிலுள்ள இரட்டை எழுத்துக்களை அகற்றுவதில் ருஷ்ய அரசாங்கம் முனைந்துள்ளது. இதனால் புத்தகங்களில் பல பக்கங்கள் குறைகின்றனவாம். ருஷ்ய அகராதியில் 1200 சொற்கள் இரட்டை எழுத்துக்களைக் கொண்டுள்ளன; இவற்றில் 'Russia'' போன்ற இடப் பெயர்ச் சொற்களான 12-ஐ மட்டும் வைத்துக் கொண்டு மீதிச் சொற்களைத் திருத்த முடிவு செய்துள்ளனர்.

# மீண்டும் ஒருமுறை தலை குனிவோம்

—( சாலை இளந்திரையன், எம்.ஏ., எம்.லிட். )—

*[இன்றைய இந்தியப் பத்திரிகை உலகம்-சிறப்பாக செந்தமிழ் நாட்டு (இன்பத் தேன் வந்து பாயும்!)ப் பத்திரிகை உலகம் எவ்வளவு கீழ்த்தரமாக உள்ளது என்பதை அறியாதார் இல்லை! பத்திரிகை முதலாளிகளின் பொறுப்பற்ற, பண்பற்ற, உயர் நோக்கமற்ற மனப் போக்கைக் குண்டூசியால் குத்திக் காட்டுகிறார் கட்டுரையாளர்!]*

எங்கிருந்து எப்புதுமை வந்தாலும் அதை நமது குணக்கேட்டில் புரட்டி எடுத்து மாசுபடுத்தி விடுவதில் இந்தியர்களாகிய நாம் வல்லவர்கள்! நமது சமூகத்தைப் பிடித்துள்ள நோய்கள் நாட்பட்டவை; அவை மருந்தையும் சீரணித்துஏப்பமிடக்கூடியவை என்பதை எங்கும், எதிலும், எப்போதும் கண்டுகண்டு தலைகுனிகிறோம்.

சாதி உயர்வு தாழ்வும், அந்தஸ்து ஏற்றத்தாழ்வும் நமது உடன்குடியிருப்பு நோய்கள். இஸ்லாமும் சேசுமதமும் வந்தன; சாதி நுகத்தடியில் நசுங்கிக் கிடந்த நமது மக்களிலே பலர் ஆசையோடு அவைகளைச் சரணடைந்தார்கள். ஆனால் சாதித் தொழுநோய் அவர்களை விட்டதா என்றால், அவர்க்கு இங்குள்ள "மூதேவி அங்கும் முளைத்தனள்" என்பதுதான் எதார்த்த நிலை. துறைதோறும் துறைதோறும் இதுவே நிலை.

அறிவையும், அழகையும் பல் வகைச் சுவைகளையும் எல்லார்க்கும் வாரிவழங்க இருகைவீசிவந்தாள் "பத்திரிகை" என்னும் புத்திளைய செல்வி. ஆனால் மடமைகளை விதைக்கவும், மாண்புகளை மறைக்கவும், கீழ்மைகளை எழுப்பவுமே நம்மனோர் அந்த நற்செல்வியைப் பயன்படுத்தி வருகின்றார்கள். பத்திரிகை வந்துவிட்டது. பாமரரும் உலக அறிவுகளை எளிதில் பெறுவார்கள் என்று நம்பியவர்கள் ஏமாந்தார்கள். வெறிகளை எழுப்பும் சின்னச் செய்திகளையே தேடி வெளியிட ஒரு பத்திரிகை; பயனுள்ள புதுமைகளையெல்லாம் பத்திரமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு, அரைத்த மாவையே, யார் மனமும் நோகாமல் அரைக்க ஒரு பண்புள்ள பத்திரிகை; இவைகளுக்கு நாட்டிலே கொட்டுமேளப் பாராட்டு. நாலுபேர் கூடினால், ஐந்தாமவரைப் பழிப்பதும், பயனே இல்லாத செய்திகளை மணிக்கணக்கில் சளசளப்பதும், நமது பழக்க நோய்கள். இந்த நோயை மாற்றி, நல்லதை எடுத்தளிக்க நம்மூர்க்கு வந்த பத்திரிகையையும் நமது இந்த நோய் பிடித்துக் கொண்டது; ஆசைப் புதுமதம் புகுந்தாரையும் விடாது பற்றிக் கொண்ட நமது சாதி போல!.. நமது பத்திரிகைகளை வெளிநாட்டுப் பத்திரிகைகளோடு ஒப்பிட்டுப் பார்க்குந்

தோறும் வெட்கித் தலைகுனிந்து குனிந்து நமது பிடறி புண்ணாகிப் போய்விட்டது. அண்மையில் புதுடில்லியில் நடந்த அனைத்துலகக் கீழ்த்திசை இயல் அறிஞர்களின் 26 ஆவது மாநாட்டின் (XXVI International Congress of the Orientalists) போது, பத்திரிகைகள் காட்டிய பழமந்தப் போக்குக்கண்டு நமது தலை மீண்டும் ஒருமுறை தானாகவே குனிந்தது.

இந்த மாநாடு (4-1-64 முதல் 10-1-64 முடிய) ஒரு வார காலம் நடைபெற்றது. அநேகமாக உலகின் எல்லா நாடுகளிலுமுள்ள இத்துறை அறிஞர்கள் (சுமார் 1400 பேர்) இதில் கலந்து கொண்டார்கள். கீழ்த்திசை நாடுகளின் மொழிகள், இலக்கியங்கள், கலைகள், வரலாறுகள், சமயங்கள், நாகரிகங்கள் முதலிய பல துறைகளைப் பற்றியும் ஆராய்ச்சி உரைகளை நிகழ்த்தி ஆராய்ச்சி விவாதங்களும் நடத்தினார்கள். புதுப் புதிய செய்திகளையும் எதிர்கால மக்களுக்கு உள்ளமும் உயர்வும் உருவாக்கித் தரும் அரும்பெருஞ் செய்திகளையும் ஆராய்ந்து கண்டு எடுத்தெடுத்து வழங்கினார்கள்.

மாநாட்டிற்குச் சில மாதங்களுக்கு முன்பே மாநாட்டைப் பற்றிய விவரங்களை இந்திய அரசாங்கம் எல்லாத்தரப்பினருக்கும் வழங்கியிருந்தது. இருந்தும், இம் மாபெரும் நிகழ்ச்சியை மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டி, இத்துறைகளில் என்னதான் நடக்கிறது என்பதை எல்லோருக்கும் தெரியப்படுத்தியிருக்க வேண்டிய நமது நாட்டுப் பத்திரிகைகள், கொஞ்சங் கூட இதில் அக்கறை காட்டவில்லை. இந்த இருட்டடிப்புத் திருப்பணியில் இந்த நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகளும் தமிழ்ப்பத்திரிகைகளும் ஒன்றுபட்டு நின்றது குறிப்பிடத்தக்கது.

## கடைத்தரம்

தமிழ்நாட்டின் பெரும் பத்திரிகையாளர்கள் கூட தகுதி வாய்ந்த நிருபர்களை அனுப்பி அந்த மாநாட்டு நிகழ்ச்சிகளையும், அதில் வெளியிடப்பட்ட கருத்துக்களையும் மக்களுக்கு எடுத்து வழங்க முயலவில்லை. சில (ஆங்கிலப்) பத்திரிகைகளின் நிருபர்கள், கூட்டம் நடக்கும் இடத்துக்கு வெளியே நின்று கொண்டு வருவார் போவாரிடம் கருத்துக் கடன் கேட்கிறார்கள். (கடன்பட்டார் நெஞ்சம் கலங்கவே இல்லை; ஆனால் கடன் கொடுத்தோர்தான் அவர்களுக்காகக் கலங்கவேண்டியுள்ளது) பாவம் அவர்கள்தான் என்ன செய்வார்கள்? மாநாட்டில் ஆராயப்படும் துறைகளிலே ஒன்றில் கூட அவர்களுக்கு அடிப்படைத் தகுதி கிடையாது. கரையோரத்தில் நின்று தூண்டில் போடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி ஏது? "மாமியாரைத் துடைப்பத்தால் அடித்த மருமகள்" கதையைச் சொல்லோவியம் செய்யும் இவர்களை, அறிஞர்களின் மாநாட்டுக்குச் செய்தியாளர்களாக அனுப்பியிருக்கிறார்கள், பத்திரிகை உரிமையாளர்கள்!

நெடுகவே நமது பத்திரிகைத் துறையில் இருந்துவரும் பெருங்குறை இது. பெரும்பெரும் ஆராய்ச்சி அறிஞர்கள் கலந்து கொள்ளும் இலக்கிய மாநாடு நடக்கும்; யாராவது ஒரு மந்திரி அதைத் தொடங்கி வைத்திருப்பார். அடுத்த நாள் காலையில் செய்தித் தாளைப் புரட்டினால், "எழுத்தாளர்கள் சிறந்த இலக்கியம் படைக்கவேண்டும்!" "எழுத்தாளர்களுக்கு அமைச்சர் திரு....

சின்னமனம் படைத்தவர்களும் அவர்களுக்கு "ஜே" போடுகின்றவர்களும் உணரும்படிச் செய்ய வேண்டியது நமது பத்திரிகைகளின் கடமை யல்லவா?

ஒரு நல்ல வாய்ப்பைத் தவறவிட்டதோடு, தங்கள் நாட்டு மக்களுக்கு ஓர் பேரெழுச்சியை ஊட்டியிருக்க வேண்டிய கடமையையும் ஏனோ, பத்திரிகையாளர்கள், குறிப்பாகத் தமிழ்ப்பத்திரிகையாளர்கள் - மறந்து விட்டார்கள். ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி பெற்ற நிருபர்கள் சிலரை ஒவ்வொரு பத்திரிகையும் இம்மா நாட்டுக்கு அனுப்பியிருந்தால், எத்தனை எத்தனை சுவையான, பயனுள்ள செய்திகளை மக்களுக்கு வழங்கியிருக்கலாம்! மக்கள் அனைவரையும் ஒருவார காலம் வேறோர் உலகிலேயே குடியேற்றியிருக்கலாமே! பழைய வறண்ட முறையில், உப்புச் சப்பற்ற—உயிரற்ற செய்திகளை வழங்கும் போக்கில் ஒரு புதிய திருப்பத்தையே ஏற்படுத்தி யிருக்கலாமே!

கண்ணாடி அறைக்குள் உட்கார்ந்துகொண்டு மக்களின் ரசனையைப் பற்றித் தவறான கணக்குப் போடும் பத்திரிகை ஆசிரியர்களே, முதலாளிகளே, எவ்வளவு பெரிய வாய்ப்பை நழுவவிட்டு விட்டீர்கள்! மக்களுக்கும் நாட்டுக்கும் ஆற்ற வேண்டிய எவ்வளவு முக்கியமான பணியைப் புறக்கணித்து விட்டீர்கள்! நின்று நிதானித்துச் சிந்தியுங்கள்; உங்கள் கடமை தவறிய போக்குக்காக மீண்டும் ஒருமுறை தலை குனியுங்கள்!...

---

*''அடுத்த தடவை நமக்கு அதிர்ச்சியான ஏதாவது ஒரு சிக்கல் நேரிடுமானால் அதைப்பற்றிச் சொல்லிக் கொள்வதற்கு 'யாராவது ஒருவரை ஏன் தேடிப்பார்க்கக் கூடாது? கண்டவரிடமெல்லாம் நம் துயரங்களைக் கொட்டி அவர்களை நச்சரிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. நாம் நம்பக் கூடிய ஒருவரை நாம் சந்திக்க வேண்டும். அவர் சுற்றமாயிருக்கலாம்; டாக்டராயிருக்கலாம்; வழக்கறிஞராயிருக்கலாம்; மதத் தலைவ்ராயிருக்கலாம்; அவரிடம் பின் வருமாறு கூறவேண்டும்:—*

*'எனக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் அறிவுரை வேண்டும். நான் என் சிக்கலைப் பற்றிக் கூறுகிறேன்; அதைக் கேட்ட பிறகு அறிவுரை கூற முடிந்தால் கூறுங்கள். கூறமுடியாது போனால் நான் சொல்லி முடிக்கும் வரையில் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாலும் போதும். அதுவே எனக்கு மாபெரும் உதவியாயிருக்கும்.''*

—டேல் கார்னீஜி.

....வேண்டுகோள்!!" என்று செய்தி வெளிவந்திருக்கும். அறிஞர்கள் ஆய்ந்தெடுத்து அழகுற வழங்கிய புத்தம்புதிய கருத்து ஒன்றும் அங்கே இராது. ஏன், கலந்துகொண்ட அறிஞர்களின் பெயர்களைக் கூடக் காணமுடியாது "என்ன, அய்யா, இப்படி?" என்று கேட்டால், "மக்கள் ரசனை அப்படி" என்று பதில் சொல்லுவார்கள். அப்படியே இருந்தாலும், "ஊர்ப்பெருமை காப்பவர்கள்" ஆகிய இவர்கள் அந்த ரசனைத் தரத்தை உயர்த்த வேண்டாமா?

இதே போலத்தான் இந்த மாநாட்டையும் பத்திரிகையாளர்கள் புறக்கணித்துத் தங்கள் கடமையிலிருந்து அடியோடு வழுவி விட்டார்கள். இந்த மாநாடுகளின் வரிசையில் இந்தியாவில் முதல்முதலாக நடந்தது இந்த 26,வது மாநாடே. இதில் ஆராயப்பட்ட துறைகளோ நமக்கு மிகவும் முக்கியமான (கீழ்த்திசை இயல்) துறைகள். கிரிக்கெட் ஆட்டத்தை விட எத்தனையோ ஆயிரம் மடங்கு முக்கியமான மாநாடு இது. ஆனாலும் அந்த மட்டைப் பந்தைப்பற்றி ஒரேயடியாக மட்டையடிக்கும் இவர்கள், ஏனோ, தகுந்த செய்தியாளர்களை அனுப்பி மாநாட்டின் செய்திகளை மக்களுக்கு வழங்கவில்லை?

பழங்காலத்தில் "சர்வரோக நிவாரணி" என்று ஒரு மருந்தை நமது வைத்தியர்கள் வைத்திருந்ததாகச் சொல்லுவார்கள். அது போல நமது பத்திரிகையாளர்கள், நமது நாட்டின் தலைநகரில் கூட அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் (எது பற்றியும் தெளிவாக ஒன்றும் தெரியாத) ஒரு நிருபரை வைத்திருக்கிறார்கள். நிருபர்களைப் பற்றிக் குறை சொல்ல முடியாது. அவர்கள் விரும்பும் நிகழ்ச்சிகளுக்குத்தான் அவர்கள் போவார்கள்; அவர்களுக்கு அரைகுறையாகவாவது தெரிந்ததைப் பற்றித்தான் அவர்கள் எழுதுவார்கள். அவர்களைச் சர்வகலைச் செய்தியாளர்களாக நியமிக்கும் பத்திரிகையாளர்களுக்குத்தான் "பள்ளி எழுச்சி" பாட வேண்டும்...

உலகம் விரிந்து பரந்து பல துறைகளிலும் புதுநடை போடுகிறது. அவைகளை எல்லாம் மக்களுக்கு விளக்கி உரைக்க வேண்டியது பத்திரிகைகளின் கடமை. உலகப் பெரு நிகழ்ச்சிகளை அறியாதவர்களாக, நமது மக்களை வயிற்று மக்களாக மட்டும் வளர்த்து என்ன பயன்? மக்களின் காசிலேயே வளர்கின்ற பத்திரிகைகள், மக்களின் காலத்துக்கேற்ற வளர்ச்சிக்குத் துணை நிற்க வேண்டாமா? இந்திய நாட்டிலும் சிறந்த காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை,

### உறக்கமின்மை

இது மனக் கவலையாலும் அதிர்ச்சியினாலும் ஏற்படுவது. உறக்கம் வரவில்லையானால் அதைப்பற்றியே நினைத்துக் கொண்டு படுத்துப் புரள்வதை விட்டு, மனதுக்குப் பிடித்த வேலையில், அல்லது படிப்பில் ஈடுபடுவது சிறப்பாகும். குறிப்பிட்ட நேரத்தில் உறங்கத் தொடங்கி, குறிப்பிட்ட நேரத்தில் விழித்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சாதாரணமாக 7 அல்லது 8 மணி நேரம் நாள்தோறும் உறங்க வேண்டும்; சிலருக்கு 6 மணி நேரங்கூடப் போதுமானதாயிருக்கலாம். காஃபி குடிப்பதனாலும் உறக்கமின்மை ஏற்படலாம்.

—"ரீடர்ஸ் டைஜஸ்ட்"

போட்டிக் கட்டுரை:

# சாதிகளை ஒழிக்க வழி

—புலவர் வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.—

*[இப்போட்டிக்கு 34 கட்டுரைகளே வந்தன. அவைகளில் முதற்பரிசு பெறத்தக்கது என்று தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டது இது. இரண்டாம் பரிசுக்குரிய கட்டுரை அடுத்த இதழில் வரும். பாராட்டத்தக்க பிற இரண்டு கட்டுரைகள் பின்னர் தொடர்ந்து வரும். கட்டுரையாளர்களில் பலர் ஆழ்ந்த கருத்தோ, ஆக்க வேலைக்கான ஆலோசனைகளோ இல்லாது மனம்போனபடி எழுதியுள்ளனர்.—ஆசிரியர்.]*

## முன்னுரை

சாதிகளை ஒழிக்க முடியும்; 'முடியாது' என்பதற்கு இடமேயில்லை. "ஞாலங்கருதினும் கைகூடும், காலங் கருதி யிடத்தாற் செயின்," என்பது பைந்தமிழ்ப் பாவலர் வள்ளுவனாரின் வன் மொழியன்றோ? " 'முடியாது', என்ற சொல் முட்டாள்களின் அகரமுதலியில் காணப்பெறுவது" என்றார், உலகையே நடுங்க வைத்த உயர்தனி வீரன் நெப்போலியன் போனபார்ட். 'முயன்றால் உலகில் முடியாததில்லை' என்று கூறினார் முதுபெரும் புலவரொருவர். உயர்ந்தோர் பலர் உரைகளைக்கொண்டு பார்க்கின் முயலவேண்டிய முறைப்படி முயன்று செயலாற்றின் முடியாதென்று சொல்லக்கூடிய தொன்றுமில்லை. அதுவும், இந்த வானவெளி ஆய்வு மிக்க இவ்வணுவூழியில் எதுவும் இயலும் என்ற நிலையை எய்திவிட்டோம்.

மேலும், சாதிகள் யாவும் இடைக்காலத்தில் ஏற்பட்டவையே; அவை இடைக்காலத்தில் இறக்கவேண்டியவையே. சாதிகள் மட்டுமென்ன? சாதிகட்கு அடிப்படையான மதங்களும் அத்தகையனவே. இவைகளும் ஒருசேர ஒழிக்கப்படவேண்டியவையே.

சாதிகளால் மாந்தரிடையே நிகழும் சண்டைகள் பல. அவற்றால் தீராத பகைமை நிலவுகிறது; கொலைக் கொடுமைகள் பல நிகழ்கின்றன. மதவெறி, இனவெறி, சாதி வெறி ஆகியவற்றிற்கு ஆளாகி அழிவெய்தியோர் பலர். உலகத்தின் உத்தமர்கள் என்று இன்று பாராட்டப்பெறுகின்றவர் பலர் அத்தகைய வெறியர்களால் கொல்லப்பெற்றவர்களே! காந்தியார், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் சான் கென்னடி முதலியோர் இந்த இருபதாம் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்கவராவர். இதற்கு

முன்னர் எத்தனையோ பேர்! எழுதின் ஏடு இடந்தரா.

தெருச் சண்டைகள், ஊர்ச் சண்டைகள், பெரும்பாலும் சாதிகளால் ஏற்படுபவையே. மதத்தாலும் சாதியாலும் உண்டான சண்டைகள் எனது வாழ்நாட்களில் நேரில் கண்டவை பலவாகும். இந்து–முசிலிம் கலகம்; அகமுடையர்—அம்பலக்காரர் சண்டை; தேவர்–ஆதித் தமிழர் சண்டை; மறவர் - கிறித்தவர் சண்டை; முதலியார் - பிள்ளைமார் சண்டை; மேல்சாதி-கீழ் சாதிச் சண்டை; பள்ளர்–பறையர் சண்டை; வடகலை-தென்கலை சண்டை முதலியன குறிப்பிடத்தக்க சிலவாகும்.

## பிற நாடுகளில் உண்டா?

இந்தியாவைத் தவிர்த்து வேறு எந்த நாட்டிலும் இந்தச் சாதிப்பாகுபாடுகள் இல்லை. ஆனால், ஆஃப்ரிக்கா, அமெரிக்கா முதலான சில நாடுகளில் வெள்ளையர் கறுப்பர் என்ற நிற வேறுபாடு உண்டு. நீக்ரோக்கட்கும், வெள்ளையர்கட்கும் அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன; நிகழ்கின்றன. இவ்வினவெறியே கென்னடியைப் பலிகொண்ட தென்பர்.

எந்தத் தொழில் செய்பவராயினும் பொது இடங்களில் சமத்துவமாகவே நடத்தப்பெறுவர். மனிதனை மனிதன் தீண்டக்கூடாது என்ற இழிநிலை வேறு எந்த நாட்டிலும் இல்லை. சாதிப் பிரிவைக் குறிக்கும் "Caste", என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அகரமுதலி (Dictionary) யில் "Classes or Sections of people in India", என்று எழுதப்பெற்றுள்ளது. அதாவது, இந்தியாவிலுள்ள மக்களது பிரிவுகள் அல்லது வகுப்புகள், என்பதே அதன் பொருள். இதினின்றும் நாகரிகம் பெற்ற நாடுகளில், இந்தியாவிலுள்ள சாதிகள் இல்லை யென்றே இயம்பலாம்.

முதன் முதல் அவரவர் செய்த தொழில் காரணமாகப் பிரிவுகள் உண்டாயிருக்கலாம். நாளடைவில் அவை சாதி (ஜாதி) களாக்கப்பட்டு வேறுபாட்டுணர்ச்சியையும் ஒருவர்க் கொருவர் வெறுப்புணர்ச்சியையும் கிளப்பிவிட்டன.

## ஏன் ஒழிக்க வேண்டும்?

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இச்சாதிப் பிரிவுகள் பண்டைக் காலத்தில் இல்லவேயில்லை. அயலார் குடியேறியதால் உண்டான அலங்கோலமே. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குள் ஏற்பட்டவையே. "யாதும் ஊரே யாவரும் கேளிர்", என்ற ஒருமைப்பாட்டுடன் பண்டு தொட்டு வாழ்ந்தவர் தமிழரே. அருமறை கண்ட அந்தணர் வள்ளுவனார் கூட இந்தச் சாதிப் பிரிவினையைச் சாடியுள்ளார்.

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்

என்ற குறட்பாவால் இஃது வலியுறும்.

'சாதி' என்ற சொல் கழக (சங்க கால)த் தமிழ் நூல்களில் காணப்படாதது. பிற்காலத்தில் வாழ்ந்த அவ்வையார் என்ற புலவர்,

'சாதி' இரண்டொழிய வேறில்லை
சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—
மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி,"

என்ற வெண்பாவால் சாதிக்கு விளக்கம் கூறியுள்ளார்.

" 'சாதி யென்பதேதடா' சமய மென்பதேதடா"? என்றூர் சிவ வாக்கியர் என்ற சித்தர்.

"ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்றூர் திருமூலர் என்ற பெரியார்.

"குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே,
பிறப்பும் ஒன்றே, இறப்பும் ஒன்றே,
வழிபடு தெய்வமும் ஒன்றே,"

என்றூர் கபிலர் என்ற புலவர் பெருமகன்.

இவற்றையெல்லாங் கொண்டு நோக்குங்கால் தமிழ் நாட்டிற் குச் 'சாதி' புதிது என்பது போத ரும். ஆகலின், புலவர் யாவரும் அதனைப் போக்கவே விழைந்த னர்; விரும்பியேற்றூரில்லை எனப் புலனுகின்றதன்றே?

அன்றும் இன்றும் பல்லாற்ரு னும் தொல்லை தருகின்ற 'சாதி கள்' ஒழிய வேண்டும்; ஒழிக்கப் படவேண்டும். பிறநாடுகளில் இல்லாதவை; பெருங் கேடு தருபவை.

கொலைகள், கொடுமைகள், சண்டைகள், பகைமை இவற் றிற்குக் காரணமாயுள்ள இச்சாதி களை ஒழிக்க வேண்டுமென்று பேசாத தலைவர்களோ எழுதாத எழுத்தாளர்களோ, எடுத்துக் கூருத ஏடுகளோ இல்லை. எல் லோரும் ஒரே முகமாகச் சாதியை எதிர்க்கிருர்கள். ஆனுல், அவர் கள் மேற்கொள்ளும் முறைகள், நடவடிக்கைகள் சரியானவை யல்ல. ஆயின், சரியான வழி முறைகள் யாவை?

### "குடியர் நாடு?"

"அய்ரோப்பாவில் போலண்டு நாட்டைப் போன்ற குடியர் பெருத்த வேறு நாடே இல்லை. மொத்த மக்கள் எண் ணிக்கை மூன்று கோடி; இவர் களில் 15 லட்சம் பேர் மிதமிஞ் சிக் குடிக்கிருர்கள். லட்சக் கணக்கான தொழிலாளர்கள் இதன் காரணமாக அடிக்கடி வேலைக்குச் செல்வதில்லை. எனவே இந்நாட்டிலுள்ள கம்யூ னிஸ்ட் அரசாங்கம் கடுமை யான நடவடிக்கை எடுத்து மிதமிஞ்சிய குடியைத் தடுப்ப தற்கு முயன்று வருகிறது."

—"டைம்"

## சாதிகளை ஒழிக்கச் செய்ய வேண்டுவன:

### 1. கலப்புமணம்

மதம் விட்டு மதம், சாதி விட்டுச் சாதி, மண உறவு ஏற்படுத்த வேண்டும். அரசு இதனை வலி யுறுத்துவதுடன், கலப்புத் திரு மணம் செய்து கொள்பவர்க்கே அரசாங்க அலுவல்கள் அளிக்கப் பெறுமென்று அனைவர்க்கும் அறி வித்தல் வேண்டும். இப்போது சிலர் காதல் மணம், கலப்புமணம் செய்து கொள்கின்றனர். ஆனுல், அவர்கள் அல்லலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். சில கலப்பு மணங்கள் இடையில் முறிவெய்தி விடுகின்றன. ஆத லால், அரசாங்க உதவியும், இசைவும் இன்றியமையாது வேண்டப்படுவனவே. சாதியும் மதமும் மறைய முதல் வழி இதுவே.

ஒரே தெருவில் பல
ாதியினர்

''பார்ப்பனரும் பறையரும்'' ஒரே தெருவில் அடுத்தடுத்து வசிக்கச் செய்ய வேண்டும். பள்ளர்-பறையர் என்பவர்களைத் தனித்தனி இடங்களில்,-வயல் கரை, வாய்க்கால்கரை, ஊருக்கு வெளியில்,-ஒதுக்கி வைத்தல் கூடாது. எல்லாச் சாதியினரும், மதத்தினரும் ஒரே தெருவில்வாழ வழி செய்ய வேண்டும். சாதிப் பெயர்களைத்தெருக்களுக்கு இடக் கூடாது. சாதிக்குச் சாதி தனித் தெரு கூடாது ஒருஊரில் இந்து, முசிலிம், கிறித்தவர், சமணர், சைனர், பௌத்தர் முதலியோர் இருந்தால் அவர்கள் தனித்தனி தெருக்களில் வசிக்காமல் எல்லாத் தெருக்களிலும் எல்லாரும் கலந்தே வாழச் செய்யவேண்டும். ஒருவர்க்கொருவர் பயின்று, பழகி, நெருங்கி வாழுங்கால் வேற்றுமையுணர்வு விரைந்து நீங்கும். பார்ப்பனர் சேரி, பறைச்சேரி வேண்டா.

## 3. ஒரே இறை வழிபாடு

கடவுள் வழிபாடு என்பது ஒவ்வொரு மதத்தினர்க்கும் ஒவ்வொன்ருகவும், சிலர்க்கு உருவ வழிபாடும், சிலர்க்கு உருவற்ற வழிபாடும், இன்று உளது. இஃது ஒருவற்கொருவர் முரண்பாட்டையே உண்டாக்கும். ஆதலால், இறையிலி (நாத்திகக்) கொள்கையே ஏற்ற முடைத்தாகும். ஆனுல் பித்தர் பலர் மனம் புழுங்குவர்; நாத்திகம் பெருத்துப் போச்சென்று புரட்சி செய்வர். ஆகவே, எல்லா மதத்தினர்க்கும் பொருத்தமான ஒரு வழிபாட்டிடம் ஊருக்கு ஒன்று இருத்தல் சாலும். அஃது அவ்வூரார் கூடுவதற்கேற்ற இடமுள்ளதாகக் கட்டப் பெறல் வேண்டும். விருப்பமுள்ளோர் அங்கு சென்று தங்கட்கு விருப்பமான இறையை வழிபடலாம் என்று செய்தல் வேண்டும். அங்குப் போக இயலாதோர், அல்லது விரும்பாதோர் தங்கள் இல்லிலிருந்தே இறை வழிபாடு செய்யலாம். மாந்தர்க்கும் மற்றைய உயிர்கட்கும் காட்டும் அன்பே இறைவழிபாடு. சாதி வேறுபாடு, மத வேறுபாடு இதனுல் மறைய வாய்ப்பு உண்டு.

## 4. பெயர்கட்குப் பின் வாலொட்டல்:

ஒவ்வொருவரும் தங்கள் பெயர்கட்குப் பின்னுல் அய்யர், அய்யங்கார், ஆச்சாரி, சர்மா, சாத்திரி, பிள்ளை, முதலியார், செட்டியார், தேவர், நாடார், இராவ், இராயர், கவுண்டர், நாயுடு, நாயர், படையாட்சி முதலிய சாதிகளைக் குறிக்கும் பட்டங்களைப் போடாது ஒழிக்க வேண்டும். ஆவணங்கள், முறிகள் எழுதும் போதும் சாதி, மதங்களைக் குறிப்பிடக் கூடாது. அவ்வாறு எழுதாத ஆவணங்களை அரசியலார் பதிவு செய்ய ஏற்கக் கூடாது. திருமண அழைப்பிதழ் முதலியவற்றிலும் எந்தப் பின்னெட்டுச் சாதிப் பட்டமும் எழுதுதல் கூடாது. யாராவது பெயருக்குப் பின் சாதிப்பட்டம் எழுதினுல் அதனை எல்லோரும் இழிவு படுத்திப் பேச வேண்டும்; அகற்றச் செய்ய வேண்டும். அரசியல், அனைத்திலும் சாதிப் பிரிவுகளைக் குறிக்கக்கூடாது.

## 5. மதக்குறிகள் அணிதல்:

நெற்றியில் நீறுபூசுதல், நாமம் போடுதல், சந்தனம், குங்குமப் பொட்டுவைத்தல் முதலிய அடையாளங்களெல்லாம் போடக் கூடாது. மதவேறுபாடு, சாதி வேறுபாட்டை அவை நினைவு படுத்தும் சின்னங்களாகக் காட்சி

தரும். வேறுபாட்டுணர்ச்சியை வளர்க்கும். பார்க்கும் போதெல்லாம், இவர் சைவர், இவர் வைணவர் என்ற வேற்றுமையுணர்வே நிலைபெறும். எனவே எந்தக் குறியீடும் வேண்டா.

## 6. மதச்சின்னங்களணிதல்:

பூணூலணிதல், சிலுவையணிதல், இலிங்கமணிதல் உருத்திராக்கமணிதல், துளசி மாலையணிதல் முதலியனவும் கைவிடப்படல் வேண்டும். இவற்றால் உயர்வு தாழ்வு மனப்பான்மை மக்களிடையே மலரும். இவையெல்லாம் இல்லாதிருந்தால் வேறுபாடோ, வெறுப்போ ஒருவர்க்கொருவர் ஏற்பட வழியிரா. இவை அணிவதால் பிற மதத்தினர், சாதியினர் இவர்களைப் பார்க்குங்கால் மனத்தில் வேற்றுமையுணர்ச்சி அரும்பாதிராது. ஆகவே, இவை வேற்றுமையை வளர்க்கும் வேண்டாச் சின்னங்களே.

## 7. கோவில்களில் பூசை:

இன்று கோவில்களில் பூசை ஒரு குறிப்பிட்ட இனத்தாரோ, சாதியாரோ செய்து வருகிறார்கள். வழிவழியாக அவர்கட்கே உரிமையாகிவிட்டது. அவ்வாறின்றி, பல சாதியினரும் அதில் பணிபுரிய அமர்த்தப் பெறவேண்டும். ஒரு பார்ப்பனர், ஒரு பறையர், ஒரு பள்ளர், ஒரு முதலியார், ஒரு வேளாளர் என இம்முறையில், அமர்த்த வேண்டும். ஒரு மாதத்திற்கு ஒரு சாதியினர் பூசை செய்ய அமைத்தல் வேண்டும். இதன் மூலம் உயர்வு-தாழ்வு ஒழியும். பிறகு சாதிவேறுபாடு தானே மறையும். சாதிப்பற்றும், மதப்பற்றும் நீங்கும்; அல்லது கரையும்.

## 8. உண்டிச்சாலைகள்:

உண்டிவிடுதிகள், உண்டிச்சாலைகளில் சமைக்கிறவர்கள், பரிமாறுகிறவர் யாவரும் பலசாதியினராக இருத்தல் வேண்டும். ஒரு பள்ளர், ஒரு பறையர், ஒரு நாவிதர், ஒரு வண்ணார், ஒரு படையாட்சி, ஒரு பார்ப்பனர், ஒரு வேளாளர், ஒரு முதலியார் என்றிவ்வாறு இருக்கவேண்டும். ஒரே இனத்தார் அவ்வினப்

### இரட்சண்ய சேனை

'சால்வேஷன் ஆர்மி' (Salvation Army) என்பது கிருஸ்துவ பிரசார இயக்கம். 1865-ல் 'கிருஸ்துவ மிஷன்' என்ற பெயரால், மெதடிஸ்ட் பாதிரியாரான வில்லியம் பூத் என்பவரால் இங்கிலாந்தில் துவக்கப்பட்டது. 1878-ல் "சால்வேஷன் ஆர்மி" என்ற பெயர் பெற்றது. சேனை (படை) என்ற பெயர் காரணமாக இதன் தலைவர்களை 'ஜெனரல்' என்றும், கூடும் இடத்தைப் படை வீடு (barracks) என்றும் கூறுவர். பாமர மக்களின் உள்ளத்தை ஈர்க்கும் பொருட்டு இவர்கள் போர் வீரர்களைப் போல் உடையணிந்து, கொடி, பாண்டு வாத்தியத்துடன் உலா வருவர். இந்த அமைப்பு 89 நாடுகளில் இருக்கிறது; 81 மொழிகளில் 123 பத்திரிகைகளை வெளியிடுகிறது. இந்தியாவில் 1882ல் டக்கர் என்பவர் தலைமையில் முதன் முதல், ஏற்பட்டது. இவர்கள் இங்கு 22 மருத்துவ நிலையங்களையும் பள்ளிகளையும் நிறுவியுள்ளனர். இவர்களுடைய பத்திரிகையின் பெயர், "போர்க்குரல்" (War Cry) என்பதாகும்.

பெயரால் நடத்தும் விடுதிகட்கு அரசு இசைவு தரக்கூடாது. பெயர்ப்பலகைகளில் இறைச்சி உணவுச்சாலை என்றோ, மரக்கறி உணவுச்சாலை என்றோதான் எழுதுதல் வேண்டும். வேறு எந்தச் சாதிப் பெயரும் குறிப்பிடக் கூடாது. சாதிப் பெயரால், குறிப்பிட்ட ஒரு இனத்தாரால் மட்டும் நடத்தப்படும் உண்டிச் சாலைகளை ஒழிக்க வேண்டும். அவற்றைச் சட்டத்திற்குப் புறம்பானதாக்க வேண்டும்.

9. திருமணம், பிற சடங்கு முறைகள் :

திருமணங்கள், பிற சிறப்புகள் நடத்தப் "புரோகிதர்" என்று எவரையும் வைக்கக்கூடாது. அவற்றிற்கு மந்திரங்களும் தேவையில்லை. எந்தச் சாதியினரும் எந்தச் சாதியார் வீட்டிற்கும் சென்று எந்த மொழியிலும் அவற்றை நிகழ்த்த உரிமையளித்தல் வேண்டும். இந்தச் சடங்குகள் செய்யாதவர்களும் சமமாகவே கருதப்பெறல் வேண்டும். மனித உரிமைகள் யாவர்க்கும் சமமாகவே அளிக்கப் பெறல் வேண்டும். 'உலக மக்கள் உரிமை நாள்' ஒற்றுமை நாடுகள் கழகத்தில் இவ்வாண்டு கொண்டாடப் பெற்று உலகமுழுவதும் கொண்டாட அறிக்கை வந்ததையும் நினைவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். உலக ஒற்றுமைக்கு முயலும் நாம் நமக்குள்ள வேற்றுமைகளைக் களைய வேண்டாவா?

10. பள்ளிகள், கல்லூரிகள் முதலியன :

கல்விக்கூடங்களில் தலைமையாசிரியர்களாயும், கல்லூரி முதல்வர்களாயும் தாழ்த்தப்பட்ட மக்களைச் சார்ந்தோரையே அமர்த்தல் வேண்டும். பல சாதியினர்க்கும் மக்கள் தொகைக்கேற்ப அலுவல்கள் வழங்கல் வேண்டும். அரசியல் பணிமனைகளில் உயர் அலுவலர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தோராயும் மற்றையோர் உயர்த்தப்பட்ட வகுப்பினராயும் இருத்தல்வேண்டும். எல்லாச் சாதியார்க்கும் சம வாய்ப்பு அளித்தல் வேண்டும். தீண்டாமையையொழிக்க அரசாங்கம் எவ்வளவு முயன்றும் இன்னும் முடியவில்லை. பெயரளவில்தான், விளம்பரங்களின் மூலந்தான் தீண்டாமை ஒழிந்திருக்கிறதேயன்றி செயலளவில் ஒன்றுமேயில்லை. எத்தனையோ சிற்றூர்களில் தீண்டாமை தாண்டவமாடிக் கொண்டுதான் இருக்கிறது. சான்றுகள் பல தரமுடியும். ஆனால், இதில் இடமின்றி இன ஒற்றுமை பற்றி ஈண்டு இதனைக் குறிப்பிட்டேன்.

11. எல்லோர்க்கும் உழைப்பு:

நிலமுடையவர் யாவரும் தங்கள் நிலத்தின் சில பகுதிகளையாவது தாங்களே பண்படுத்தல் வேண்டும். பார்ப்பனர் முதல் யாவரும் வயல்கட்குச் சென்று தங்கள் நிலங்களை உழுது பயிரிடல் வேண்டும். உழைப்பவர் ஒரு சிலர்; உழைக்காமல் இருந்து உண்பவர் வேறு சிலர், என்ற நிலை மாறல் வேண்டும். ஏன், அந்த நிலையை 'மாற்றல்' வேண்டும். பெண்களும் ஆண்களும் எல்லாச் சாதியினரும் தோளோடு தோள் சேர நின்று வயல்களில் வேலை செய்தல் வேண்டும். உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி ஒழிய இதுவும் ஒரு வழியாகும். ஏன், ஒப்பற்ற வழியாகும் என்று கூடக் கூறலாம்.

பார்ப்பனப் பெண்களும், பள்ளர், பறைக்குலப் பெண்களும், பிற சாதிப் பெண்களும் சேர்ந்து

நடவு நட்டல், களைபிடுங்குதல் சமத்துவத்தை நிலைநாட்டிச் சாதித்திமிரைத் தகர்க்கும் என்பதில் ஐயமில்லை. "போனகம் என்பது தானுழந்துண்டல்;" "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை," என்பன எவருமறிந்தவை. உழைக்காமல் உண்பது தான் இழிவேயன்றி, உழைப்பது யாவர்க்கும் இனிதே என்பதும் யாவரும் ஒப்பும் ஒன்றே. செயல் படுத்தல் வேண்டும்.

## முடிப்புரை:

சாதிகளை ஒழிக்க யான் மேலே கூறிய வழிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவே. ஒரு வழியைப் பின்பற்றினல் மற்ருென்று தானே போய்விடும். ஏன் எல்லாவற்றையும் எடுத்துரைத்தேனெனின் ஒன்றில்லாவிட்டாலும் வேருென்றையேனும் கடைப்பிடிக்கலாம் என்பதற்காகவே. சாதியை ஒழிப்போம், மதத்தை மதியோம் என்று மேடையேறிப் பேசுவதாலும், ஏடுகளிலே எழுதுவதாலும் நிலையான பயன் ஏற்படாது. பேசிப் பேசித்தான் பொழுதைப் போக்குகின்ருேம்; எழுதி எழுதித்தான் ஏட்டை அனுப்புகின்ருேம். என்ன பலனைக்கண்டோம்? சாதிகள் எந்த அளவு ஒழிந்துள? எள்ளளவுமில்லை. இன்றுள்ள அரசியல் தலைவர்களிலோ, கட்சித் தலைவர்களிலோ "சாதி"ப்பற்று இல்லாதவர் எவர் இருக்கிருர்?

எனவே, யான் நவின்ற மேற்கண்ட முறைகளை அடியொற்றிச் செயல் படுத்தினல் சாதிகள் அடியோடு ஒழிந்து போம் என்பது உறுதி.

---

*"திருமணத்துக்கு முன்னர் உங்கள் கண்களை விரிவாகத் திறந்துவைத்துக் கொள்ளுங்கள்; அதற்குப் பிறகு அரைவாசி மூடிக்கொள்ளுங்கள்!"*

*—பெஞ்சமின் ஃப்ராங்க்லின்.*

* * *

*"மதக்கோட்பாடு என்பது அதைப்பற்றித் தெரியாதவர்கள் அதை விளக்க முயல்கின்ற செய்கையாகும். இவர்கள் எண்ணம் உண்மையைக் கூறுவதல்ல; கேள்வி கேட்பவனைத் திருப்திப் படுத்துவதாகும்."*

*—எல்பர்ட் ஹப்பர்டு*

* * *

*"அற்ப அறிவு உடையவனிடம் அதிகாரத்தைக் கொடுத்தால், நேர்மையானவர்களை யெல்லாம் விரட்டியடித்துவிடுவான்; செருப்பைக் கடிக்கின்ற நாய்க்கு, செங்கரும்பின் இனிப்பைச் சுவைக்கத் தெரியுமா?"*

*—வேமண்ணு.*

டாக்டர். பா. நடராஜன், M.A., D. Litt., M.L.A.

# சோஷலிச பட்ஜட்

I

*[இந்திய நிதியமைச்சரின் புது ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை (பட்ஜெட்) ஆராய்வது இக்கட்டுரை. இத்திட்டம் ஜனநாயக சோஷலிசப் பாதையில் செல்கிறதா, அல்லவா? செல்கிறது என்றால் நத்தை வேகத்திலா, அல்லது குதிரை வேகத்திலா? பொருளாதார நிபுணர் ஆராய்கிறார், எவரும் எளிதில் படித்துணரும் வகையில்.]*

புவனேசுவரத்தில் கூடிய காங்கிரசு மகாசபையில், இனிமேல் நாடு ஜனநாயக சோசலிசம் என்னும் இலட்சியத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அடுத்து வந்துள்ள மத்திய நிதி நிலைக் கணக்கில் ஜனநாயக சோசலிசம் என்ற அந்த இலட்சியம் நோக்கி நாம் செல்கின்றோமா? செல்வதானால், என்ன விரைவில்? என்று காண்பதே இந்தக் கட்டுரையின் கருத்தாகும்.

சோசலிசம் என்பதில் இரண்டு முக்கிய பொருளாதாரக் கொள்கைகள் பொதிந்து கிடக்கின்றன. ஒன்று, உற்பத்தியைப் பெருக்குவது; மற்றொன்று, சமூக நீதியை வழங்கி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது.

உற்பத்திப் பெருக்கம் நோக்கி விரையும் போது சமூக நீதி பாதிக்கப்படலாம்; பொருளாதார வேற்றுமை மிகுதியாகலாம். சமூக நீதியை நோக்கி விரைகின்றபொழுது, உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்படலாம். ஆகவே இரண்டையும் இயன்றவரை சமன் செய்து கொண்டு போவதே சோசலிச பட்ஜட்டின் போக்காக இருக்கவேண்டும்.

ஜனநாயக சோசலிசப் பாதையில் சென்று கொண்டிருக்கும் பிரிட்டன், ஸ்வீடன், நார்வே, டென்மார்க் போன்ற பல ஐரோப்பிய நாடுகளெல்லாம் சமூக நீதியை வழங்க வரிவிதிக்கும் முறையைக் கருவியாகக் கொண்டுள்ளன. பொதுவாக, வருமானத்தின் மீது போடும் வரியை நேர்முக வரியென்றும் (Direct Tax) நுகரும் பண்டங்கள் மீது போடும் வரியை மறைமுக வரியென்றும் (Indirect Tax) கூறுவர்!

வருமானம், இலாபம், சொத்து, செலவு, செல்வம் இவற்றின்மீது போடும் நேர்முக வரி பெரும்பாலான பொது மக்களைப் பாதிப்பதில்லை. நுகரும் பண்டங்கள் மீது போடும் மறைமுகவரி ஏழைகளையே மிக வருத்துகின்றன. ஆகையால், ஜனநாயக நாடுகளெல்லாம் சமூக நீதியைப்பெற நேர்முகவரியைப் பயன்படுத்துகின்றன. இது ஜனநாயக சோசலிச நாடுகளுக்குமட்டுமல்ல; ஜனநாயகம் என்பதொன்றையே அடிப்படையாகக்

கொண்ட முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, ஜர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளுக்குக் கூடப் பொருந்துகின்றது. எவ்வளவு முதலாளித்துவ முறை மிகுந்திருந்தாலும், சமூக நீதி வழங்கப்படா விட்டால், மக்களாட்சி (ஜனநாயகம்) நிலையாக நிற்காது.

சமூக நீதியை வழங்க, நேர்முக வரியே சிறந்த கருவியாக ஜனநாயகத்துக்கு அமைந்துள்ளது. எவ்வாறென்றால், நேர்முக வரியில் முற்போக்கு முறையை (Progression) கையாள வாய்ப்பிருக்கின்றது. ஐயாயிரம் ரூபாய் வருமானம் உடையவருக்கு ரூபாயில் 4 அணு வரி என்று விதித்தால், பதினாயிரம் ரூபாய் வருமான முடையவருக்கும் ரூபாயில் 4 அணு வரி என்ற அளவிலிருப்பது முற்போக்கு வரி முறையாகாது. மேற்பார்வைக்கு அது சமூக நீதிபோல் தோன்றும். சற்று சிந்தித்துப் பார்த்தால், ஐயாயிரம் வருமானம் வருகிறவரைவிட, பதினாயிரம் வருமானம் வருகிறவருக்கு வரிகொடுக்கும் ஆற்றல் மிகுதி. எனவே முன்னவருக்கு ரூபாயில் 4 அணு வரியானால், பின்னவருக்கு ரூபாயில் 6 அணுவோ, 8 அணுவோ வரி விதிப்பது தான் சமூக நீதியாகும்; முற்போக்கு வரிமுறையாகும்; ஆற்றலுக்கு ஏற்ப அமையும் வரி முறையாகும். அது 6 அணுவாக இருத்தல் வேண்டுமா, 8 அணுவாக இருத்தல் வேண்டுமா, அல்லது வேறு அளவில் இருத்தல் வேண்டுமா என்பதெல்லாம் எந்த விகிதத்தைப் போட்டால் உற்பத்தியும், ஊக்கமும் குறையாது, சமநீதி பிறக்கும் என்பதை எண்ணி கணக்கிட வேண்டியது. ஆனால், ஐயாயிரத்துக்கும் 4 அணு, பதினாயிரத்துக்கும் 4 அணு என்பது மட்டும் சமூக நீதியாகாது. பதினாயிரம் ரூபாய் வருமானத்தின் மேல் போடும் வரி விகிதம் ஐயாயிரம் ரூபாய் வருமானத்தின் மேல் போடும் வரி விகிதத்தைவிட மிகுதியாகவே இருத்தல் வேண்டும். வருமானம் ஏற ஏற வரி விகிதமும் ஏறவேண்டும். இந்த முற்போக்கு முறை விற்பனை வரி, கலால் வரி போன்ற வரி இனங்களில் பெறமுடியாது.

10 ரூபாய்க்குத் துணி வாங்குகிறவர்களுக்கும் 100 ரூபாய்க்குத் துணி வாங்குகிறவர்களுக்கும், விற்பனை வரி விகிதம் ஒன்று தான். 10 ரூபாய்க்குத் துணி வாங்குகிறவனுக்கு 100 ரூபாய்க்கு வாங்குகிறவனைவிட பொருளாதார நிலை தாழ்ந்திருக்கிறதே என்று மறைமுக வரியில் பார்ப்பதற்கில்லை. நேர்முக வரியில் அது முடியும். ஆகவே தான் சமூக நீதியை ஜனநாயகச் சூழ்நிலையில் வழங்க, நேர்முக வரி உகந்த கருவியாக அமைந்துள்ளது.

## உழைப்பு வருமானம்

இதில் மற்றொரு சிறப்புமுண்டு. உழைப்பினால் வரும் வருமானம் ஒருவகை; சொத்தினால் வரும் வருமானம் மற்றொரு வகை. உழைப்பினால் சம்பாதிப்பவனுக்கு போதிய ஊக்கம் தர வேண்டும். அவனுக்கு பெண்டாட்டி, பிள்ளை, குடும்பம் என்றெல்லாமுண்டு. நிலம், வீடு, பங்குப் பத்திரங்களுக்கு அவையொன்றுமில்லை. உழைத்து சம்பாதிக்கிறவனுக்கு நோயுண்டு, விபத்துண்டு. வேலையில்லாமல் போய்விடும் நிலையுண்டு, ஓய்வு பெறவேண்டும் காலமுமுண்டு. சொத்து சுகங்களுக்கு இவையெல்லாமுண்டா? எனவே, உழைப்பினால் வரும் வருமானத்துக்குக் குறைவான வரி விகித

மும், சொத்து சுகங்களால் வரும் வருமானத்துக்கு கூடின வரிவிகிதமும் விதிப்பதே சமூக நீதி முறையாகும். நேர்முக வரியினுல்தான் உழைப்பால் வந்த வருமானம், உழைப்பில்லாது வந்த வருமானம் என்ற பாகுபாட்டை அடிப்படையாகக் கொள்ளமுடியும்.

எனவே, ஜனநாயக அமைப்பில் நின்று, சமூக நீதியை நோக்கிச் செல்லும் நாடுகளெல்லாம், சோசலிசம் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும்தேசீய வருமானத்தில் தகுந்ததொரு பகுதியை நேர்முக வரியாக எடுத்துக் கொள்கின்றன. கீழே வரும் புள்ளி விவரங்களைப் பார்ப்போம்.

தேசீய மொத்த வருமானத்தில் நேர்முக வரியும், சமூகச் சந்தாவும் இத்தனை சதமென்று:

| | நேர்முகவ்ரி | சமூகச்சந்தா |
|---|---|---|
| ஸ்வீடன் | 17·4 | 2.8 |
| நார்வே | 14·6 | 2·4 |
| அமெரிக்கா | 13·7 | 3·4 |
| ஹாலந்து | 12·9 | 7·5 |
| பிரிட்டன் | 11·8 | 3·0 |
| டென்மார்க் | 11.5 | 1·3 |
| கானடா | 9·9 | 1·9 |
| ஜர்மனி | 9·5 | 9·4 |
| பெல்ஜியம் | 7·0 | 6.0 |
| ஃபிரான்சு | 5·7 | 9·3 |
| அயர்லாந்து | 4·9 | 1 |

இதில் சமூகச் சந்தா என்பது, மருத்துவம் என்றும், முதுமைப் பருவம் என்றும் பலவகையான தொழிலாளர் நலனுக்காக தொழிலாளரும், முதலாளிகளும், அரசாங்கமும் செலுத்தும் இன்ஷூரன்ஸ் தொகையாகும். இதுவும் ஒருவகை நேர்முக வரிதான். இது எப்படி வரியாகும், அவர்கள் கொடுக்கும் தொகைக்கு வரும் பயன்தானே என்ருல், வரியும் அவ்வாறு தானே! அது பயனற்றதா?

## கன்ஃப்யூஷ்யஸ்

"உனக்கு மற்றவர் செய்ய விரும்பாததைப் பிறருக்கு நீ செய்யாதே!" என்பது இவரது மிகச்சிறந்த பொன்மொழிகளில் ஒன்று. இவர் பிறந்தது சீனவில். கி. மு. 551-ல்; அதாவது இன்றைக்கு 2,500 ஆண்டுகளுக்கு முன்னர். மூன்ருவது வயதில் தந்தையை இழந்தார். வறுமையில் வாடினர். 19ம் வயதில் திருமணம் நடந்தது. ஒரு பிள்ளை இரண்டு பெண்கள். சிறிது காலம் பண்டக் காப்பாளராகப் பணியாற்றினர். 22-ஆம் வயதில் நன்னெறிப் பள்ளியை நிறுவினர். சீன அரசு இவரை நாடு கடத்தியது. சீனவின் சீர்திருத்தத் தலைவர்; புது மதம் கண்டவர். 72 ஆவது வயதில் மறைந்தார்.

இச்சீனப் பெரியாரின் இயற்பெயர் குங்-பூ-ஷே.

இவரது பழமொழிகள் சீன இலக்கியங்களில் ஆயிரக்கணக்கில் இடம்பெற்றுள்ளன.

இவரது மதத்தைப் பின்பற்றுவோர் இன்று சீன, அமெரிக்கா, அய்ரோப்பா ஆகிய நாடுகளில் முப்பது கோடி மக்கள் இருக்கின்றனர்.

இந்த நிலையில் இந்தியாவில் நேர்முக வரி என்ன இடம் பெறுகிறது என்பதைப் பார்ப்போம். டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பட்ஜட்படி, மத்திய அரசாங்கத்தின் மொத்த வருமானம் 1963-64ல் 1913 கோடி ரூபாய்; 1964-65ல் எதிர்பார்க்கப்படுவது 2135 கோடி ரூபாய். இதில் நேர்முக வரிகள் விவரம்:

| | 1963-64 (திருத்திய கணக்கு) | 1964-65 |
|---|---|---|
| கம்பெனி வரி | 275 கோடி | 306 கோடி |
| வருமான வரி | 235 கோடி | 250 கோடி |
| எஸ்டேட் (வாரிசு)வரி | 4 கோடி 35 லட்சம் | 7 கோடி 40 லட்சம் |
| செல்வ வரி | 10 கோடி | 10 கோடி 20 லட்சம் |
| செலவு வரி | 17 லட்சம் | 1 கோடி 55 லட்சம் |
| நன்கொடை வரி | 1 கோடி 10 லட்சம் | 3 கோடி 10 லட்சம் |
| மொத்த நேர்முக வரிகள்:- | 525 கோடி 62 லட்சம். | 578 கோடி, 25 லட்சம் |

இந்தக் கணக்கைப் பார்க்கும் பொழுது முக்கிய நேர்முக வரிகள் நடப்பு ஆண்டில் ரூ 525 கோடி; மத்திய அரசாங்க வருமானம் ரூ. 1913 கோடி; அதாவது 27 சதம். வருகிற ஆண்டில் நேர்முகவரி ரூ. 578 கோடி; வருமானம் ரூ. 2135 கோடி; அதாவது, 27 சதம். மொத்த வருமானத்தில் நேர்முக வரியின் பங்கு முன்னிருந்தபடியே இருக்கிறது. சற்றும் திருந்தவில்லை.

## நேர்முக வரி உயர்வு

இவ்வளவுக்கும் நேர்முக வரிகளை எவ்வளவோ செங்குத்தாக இந்த ஆண்டில் உயர்த்தியுள்ளார்.

வாரிசு சொத்து வரி (Estate Duty) முன் ரூ. 50 லட்சத்துக்கு மேற்பட்டதற்கு 40 சதமாக இருந்தது. இப்பொழுது ரூ. 10 லட்சத்துக்கு மேல் போனாலே 40 சதமாகிவிடுகிறது. ரூ. 15 லட்சத்துக்கு மேல் 50 சதமாகிறது. ரூ. 20 லட்சத்துக்கு மேல் 85 சதமாகிறது. இங்கிலாந்தில் கூட உச்ச விகிதம் 80 சதந்தான் நடப்பு ஆண்டில் ரூ. 4 கோடி 35 லட்சம் கொடுக்கிற இந்த வரி, ரூ. 7 கோடி 40 லட்சம் கொடுக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது; 3 கோடி ரூபாய் அதிக வரி. (வாரிசு வரி முழுதும் மாநிலங்களுக்குச் செல்கிறது. (விவசாய நிலங்களின் மீது வரியை இந்த அளவுக்கு உயர்த்துவது மாநிலங்களின் உரிமையாகும். அதுபற்றி அவர்கள் சட்டம் செய்யப் போகிறார்களா என்பது பார்த்துத்தான் தெரியவேண்டும். ஒரிசா மாநிலம் மட்டும் மத்திய சட்டம் எதுவானாலும் அதை ஏற்றுக் கொண்டுள்ளது.

நன்கொடை வரியும் (Gift Tax) கணிசமாக ஏற்றப்பட்டிருக்கிறது. இப்பொழுது ரூ. 10,000-க்கு மேல் கொடுக்கப்படுகிற நன்கொடைகளுக்கெல்லாம் வரி உண்டு. இனிமேல் 5000க்கு மேல் கொடுத்தாலும் வரிதான். முன் ரூ 50 லட்சத்துக்கு மேல் தான் 40 சதம் வரி. இனிமேல் ரூ. $1\frac{3}{4}$ லட்சத்துக்கும் $3\frac{3}{4}$ லட்சத்துக்கு உட்பட்ட நன்கொடைகளெல்லாம் 40 சதம் கொடுக்க வேண்டும். அதற்குமேல் 50 சதம் கொடுக்க வேண்டும். முன்பு மனைவிக்கு 1 லட்ச ரூபாய் வரை வரியில்லாமல் நன்கொடை கொடுக்கலாம். இனிமேல், 50,000 ரூபாய் தான் அப்படிக் கொடுக்கமுடியும்.

முன் நிதி மந்திரியாக இருக்கையில் டி. டி. கே. செலவு வரி

(Expenditure Tax) போட்டார். பின்னே, சென்ற ஆண்டில் மொரார்ஜி அதை எடுத்துவிட்டார். செலவு வரியில் வருகிற வருமானத்தைவிட, அதை வசூலிக்கும் செலவு அதிகமாகிறது என்ருர் மொரார்ஜி. அதோடு அதற்காகக் கணக்கு வைக்கவேண்டியது வரிகொடுப்போருக்கு பெரிய தொந்தரவாக இருக்கிறது என்ருர். ஆனுல் இப்பொழுது டி. டி. கே சொல்வது: "அந்த வரிக்கு விலக்காகப் பல இனங்களிருந்தன. வரி விதிப்பைப் பற்றிய சரத்துக்களும் தெளிவாயில்லே. வரியும் சற்று உயர்வாகவே இருந்தது. எனவே அவற்றைத் திருத்தி அமைத்து, வரி விகிதத்தையும் குறைத்து, விலக்குகளேயும் சுருக்கி" வரிப்போடுகிருர். ஆண்டுக்கு 36,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறவர்களுக்கெல்லாம் இனி வரி உண்டு. 36 000க்கு மேல், முதல் 12,000 ரூபாய்க்கு 5 சதம், அடுத்த 12,000 ரூபாய்க்கு 7½ சதம், அடுத்த 12 000 ரூபாய்க்கு 10 சதம். ரூ 72 000க்கும் ரூ 84000-க்கும் இடையில் 15 சதம்; ரூ 84,000க்கு மேல் 20 சதம். எந்த வருமானத்திலிருந்து செலவு செய்தாலும் சரி, மொத்த செலவின் மேல் வரி. கம்பெனியிலிருந்து சம்பளத்துக்கு மேல் சலுகையாக கொடுக்கிருர்கள் என்ருலும், செலவு செய்தால் வரி உண்டு. கணக்குகளே கட்டாயமாக வைத்துக் கொள்ளும் நிபந்தனேயும் வந்துள்ளது. குடிசைத் தொழிலில் உற்பத்தியாகும் பொருள்கள் மீதும், கலேப் பொருள்கள் மீதும் செய்யும் செலவுக்கு விதிவிலக்கு இருந்தது. இப்பொழுது இது எடுக்கப்பட்டுவிட்டது. அது போலவே, சொந்த உபயோகத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் மேல் செலுத்தப்படும், சுங்க வரி, விற்பனே வரி போன்ற செலவுகளுக்கு இனி விதிவிலக்குக் கிடையாது. கல்யாணச் செலவு, வீட்டு சாமான்கள் வாங்குவதற்காக செய்யும் செலவு, கல்விக்காக செய்யும் செலவு. மருத்துவச் செலவு, பெற்ருேரைப் பேணுவதற்கென குறிப்பிடப்படும் செலவு எல்லாம் முன் போல் இல்லாது, இனி செலவு வரிக்கு உட்பட்டு விடுகின்றன.

மூலதனப் பெருக்க வரி (Capital Gains Tax) யிலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. ஒரு நிலத்தையோ, வீட்டையோ, பங்குகளேயோ, பத்திரங்களேயோ வாங்கி ஒரு ஆண்டுக்குள் அதிக விலேக்கு விற்ருல், அந்த இலாபம் ரூ 10,000க்கு மேலாக இருக்குமாஞல் வருமான வரி போலவே கருதி வரி விதிக்கப்படுகிறது. ஒரு ஆண்டு காலத்துக்கு மேற்பட்டு உரிமை கொண்டாடும் சொத்துக்கள் மீது மூலதனப் பெருக்கவரி போடப்படுகிறது. அப்படிப் போடுவதில் இன்று ஒரு வரம்பும் இருக்கிறது; அதாவது, வருகின்ற மூலதனப் பெருக்கத்தில் 25 சதத்துக்கு மேல் வரி போகலாகாது என்பது. இனிமேல் இந்த உச்சவரம்பு கிடையாது. ஆனுல் வரி விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. நிலம், வீடு போன்ற தாவர சொத்துக்களானுல், வருமான வரி அளவில் 75 சதம் கொடுத்தால் போதும். மற்ற சொத்துக்களுக்கு, 50 சதம் வருமானவரி விகிதத்தில் கொடுத்தால் போதும். இதனுல் பெரும் சொத்து விற்பனே செய்பவர்களுக்கு அதிக வரி விகிதமும் சிறு சொத்துக்களே விற்பனே செய்பவர்களுக்குக் குறைந்த வரி விகிதமும் ஏற்படு

-கிறது. எனினும், கம்பெனிகள் விற்று மூலதனத்தைப் பெருக்குமானால், முன்போலவே பெருக்கத்தில் 25 சதம் என்ற எல்லையுண்டு; ஆனால் இந்தப் பெருக்கத்தில் இடும் அமித வருமான வரி முன்பு 5 சதமென்று கம்பெனிகளுக்கு இருந்தது, இப்பொழுது 15 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## சைப்ரஸ்

மத்தியதரைக் கடலிலுள்ள இத்தீவில் இன்று இனப் போராட்டம் முற்றியிருக்கிறது. இங்குள்ள மக்கள் தொகை 5,88,000; இவர்களில் ஒரு லட்சம் பேர் துருக்கியர்; மற்றவர்களில் பெரும்பாலோர் கிரேக்கர். ஆர்ச் பிஷப் மக்காரியஸ் என்பவர் இக்குடியாட்சி நாட்டின் தலைவராக இருந்து வருகிறார்.

இந்தியாவைப்போல இத்தீவும் பல ஆண்டுகள் வெளி நாட்டாரின் ஆட்சிகளுக்கு உட்பட்டுக் கிடந்தது. இராணுவ முக்கியத்துவம் வாய்ந்துள்ளபடியால் 1878ல் பிரிட்டிஷார் இதைக் கைப்பற்றி இராணுவ தளங்களை அமைத்துள்ளனர். 1960ல் பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து விடுதலை பெற்றது.

இங்குள்ள கிரேக்க மக்கள் கிரீசுடன் சேரவேண்டுமென்றும், துருக்கியர் துருக்கியுடன் இணைய வேண்டுமென்றும் பெருங்கிளர்ச்சி செய்து வருகின்றனர். குடியாட்சித் தலைவரோ, தாம் தலைவராக இருக்க வேண்டுமென்பதைத் தவிர, பெருஞ் சிக்கலுக்கு முடிவு காண்பவராயில்லை. எனவே கொந்தளிப்பு.

பல கம்பெனிகளில் பல ஆண்டுகள் சரியாக பங்கு இலாபம் கொடுக்காமல், இலாபத்தைத் திரட்டி வைத்திருந்து, பிறகு போனஸ் பங்குகளென்று பங்குதாரருக்கு வழங்கும் பழக்கமிருந்து வருகின்றது. இதுவும் உண்மையில் மறைமுகமான மூலதனப் பெருக்கமே என்று மதித்து, இப்பொழுது அந்த போனஸ் பங்குகள் மீதும் மூலதனப் பெருக்கவரி போடப்பட்டிருக்கிறது.

கம்பெனி வரி (Corporation Tax) யிலும் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உழைப்பால் வரும் வருமானத்தைவிட சொத்தால் வரும் வருமானம் மீது அதிக வரிவிகிதம் வருகிறது. முன்னதின் பேரில் ஒரு லட்ச ரூபாய் வரையில் வருமான சர்சார்ஜ் கிடையாது. அதற்குமேல் 10 சதம் சர்சார்ஜ். பின்னதின் பேரில், பத்தாயிரம் ரூபாய்க்கே $12\frac{1}{2}$ சதம் சர்சார்ஜ் உண்டு. 75,000 ரூபாய் வரும் போது $17\frac{1}{2}$ சதம் ஆகிவிடுகிறது. கம்பெனி அலுவலாளருக்கு மொரார்ஜி பட்ஜட்டில் மாதம் ரூ 5000க்கு மேல் கொடுக்கலாகாதென்றிருந்தது. இப்பொழுது, எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம்; ஆனால் சம்பளத்தில் 20 சதத்துக்கு மேல் சலுகையாகக் கொடுக்க முடியாது. 15,000 ரூபாய்க்குக் குறைந்த வருமானக்காரர்களுக்கு சிறிது குணம் காட்டப்பட்டிருக்கிறது.

செல்வத்தின் வரியிலும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன; முன் ரூ 2 லட்சம் மதிப்புள்ள செல்வத்தின் மீதுதான் வரி விதிக்கப்பட்டது. இனி, ரூ 1 லட்சத்துக்கே $\frac{1}{2}$ சதம் வரி விதிக்கப்படுகிறது. முன் இந்து கூட்டுக் குடும்பத்துக்கு ரூ 4 லட்சம் வரையுள்ள

சொத்தின் மீது செல்வவரி கிடையாது. இப்பொழுது ரூ 2 லட்சத்திலே வரி தொடங்கிவிடுகிறது.

இங்ஙனமாக, பல வகையிலும் நேர்முக வரிகளை செங்குத்தாக உயர்த்தியும்கூட, கடைசியில் பெரும் பகுதி வருமானத்துக்கு மறைமுக வரியைத்தான் நம்ப வேண்டிய நிலையிலும் டி. டி. கே. யும் இருக்கிறார். மொத்தம் ரூ 40 கோடிக்குமேல் புதுவரிகள் போட்டிருக்கிறார். இதில் நேர் முக வரியிலிருந்து வருவது சுமார் ரூ 15 கோடிதான். மீதி ரூ 25 கோடியும் மறைமுக வரிகளான சுங்கத்திலிருந்து ரூ 6 கோடியும்; கலால் வரியிலிருந்து ரூ 19 கோடியுமாகவே வரவேண்டியிருக்கிறது.

நேர்முக வரிகளில் அதிக வரியீட்டினால் பெறும் ரூ 14 கோடி 70 லட்சமும் பின் வருமாறு வருகின்றன:—

| | | |
|---|---|---|
| 1) கம்பெனி வரி | ரூ | 11 கோடி |
| 2) சொத்து (வாரிசு) வரி | ரூ | 3 கோடி |
| 3) நன்கொடை வரி | ரூ | 2 கோடி |
| 4) செலவு வரி | ரூ | 1 கோடி 50 லட்சம் |
| 5) செல்வ வரி | ரூ | 20 லட்சம் |

ஆக 17 கோடி 70 லட்சம்.

இதில் சொத்து (வாரிசு) வரி ரூ 3 கோடியும் மாநில அரசாங்கங்களுக்குப் பகிர்ந்து போய்விடுகின்றன. மத்திய அரசாங்கத்துக்கு மீதியாவது ரூ 14 கோடி 70 லட்சம்தான்.

நாற்பது கோடி ரூபாய்க்கு மேல் அதிக வரி போட்டும், நேர்முக வரிகளை செங்குத்தாக ஏற்றியும் கூட சுங்கம், கலால் என்னும் இரு மறைமுக வரிகளே முதன்மை பெறுகின்றன என்பதூ கண்டோம். நடப்பு ஆண்டில் மொத்த வருமானத்தில் இந்த இரண்டு மறைமுக வரிகளும் சேர்ந்து 53 சதமாகின்றன. ஏறக்குறைய இதே விகிதத்தில்தான் 1964-65லும் இருக்கப் போகிறது.

## எளிதில் திரட்ட

ஆகவே மறைமுக வரிகளின் முதன்மை குறைந்துவிடவில்லை; ஆனால் கூடவுமில்லை. இது சற்று திருப்தி அளிக்கக்கூடியது தான். ஏனென்றால் வருமானத்தைப் பெருக்க நினைக்கும் பொழுதெல்லாம், நிதி அமைச்சர்கள் பெருவாரியான மக்கள் நுகரும் பொருள்கள் மீது விழும் கலால், சுங்கம் என்னும் மறைமுக வரிகளையே முதலில் நினைவு கொள்கிறார்கள். அதுதான் எளிதில் பெரும் பொருள் திரட்டும் வழி. இப்பொழுதும் அந்த முறையே ஓரளவு கையாளப்பட்டிருந்தாலும், நேர்முக வரிகள் கணிசமான முறையில் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதோடு மறைமுக வரிகளிலும், ஏழை மக்களைப் பாதிக்கும் பண்டங்கள் மீது வரி விழவில்லை. உயர்ந்த நம்பர் மெல்லிய நூலின் மேல் வரி உயர்த்தப் பட்டிருக்கிறது. கைத்தறி நெசவுக்கு வேண்டிய நூலின் மீதான வரி குறைவாக வைக்கப்பட்டுள்ளது. ரயான் என்ற செயற்கைப்பட்டு நாரிழை மீது வரி 50 சதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நைலான் போன்றவை மீது 100 சதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் ஏழைகளைப் பாதிப்பனவாக இல்லை. புதுச் சுங்க வரிகளும் அவ்வாறே அமைந்துள்ளன.

“நிற்கின்ற இடத்தில் நிற்பதற்கே ஓடிக் கொண்டிருக்க வேண்டும்” என்று ஆங்கிலத்தில்

ஒரு பழமொழியுண்டு. மொத்த வருமானத்தில் நேர்முக வரியின் பங்கு 27 சதம் என்ற நிலையைக் காப்பாற்றுவதற்குக் கூட, அந்த வரிகளை எவ்வளவோ உயர்த்த வேண்டியிருக்கிறது. இன்னும், மேல் நாடுகள் போல் நேர்முக வரிகள் சமூக நீதிக்குக் கருவியாக அமைய வேண்டுமானால், எவ்வளவோ உயரம் போக வேண்டும் என்பது தெளிவாகும்.

மேல் நாடுகளில் நேர்முக வரிகள் தேசீய வருமானத்தில் இத்தனை இத்தனை சதமாக இருக்கின்றன என்று இக்கட்டுரையின் முகப்பில் கண்டோம். முற்போக்கான ஜனநாயக நாடுகளில் 15 சதம் முதல் 20 சதம் வரையில் காணப்படுகிறது. நமது நாட்டில் மொத்த வரியே தேசீய வருமானத்தில் இன்னும் 15 சதத்தை எட்டவில்லை; 12 சதமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வாறாக, நேர்முக வரிகள் தேசீய வருமானத்தில் 3 சதத்துக்குமேல் இராது. இந்த நிலையில், டி. டி. கே. சோஷலிச இலட்சியம் நோக்கி முதல் அடி எடுத்து வைத்திருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். இன்னும் நெடுவழி போகவேண்டியிருக்கிறது.

அடுத்த கட்டுரையில் டி. டி. கே. பட்ஜட் உற்பத்திப் பெருக்கத்துக்குத் துணை செய்வதாக இருக்கின்றதா, அல்லது தடை செய்வதாக இருக்கின்றதா, அது எந்த அளவுக்கு என்பனவற்றையெல்லாம் பார்ப்போம்.

## வேதநாயகம் பிள்ளை

இவர் கிருஸ்துவத் தமிழர் (1826-1889). திருச்சி மாவட்டத்திலுள்ள குளத்தூரில் பிறந்தவர். வழக்கு மன்றத்தில் 'ரிக்கார்டு கீப்பராக'வும் பிறகு மொழிபெயர்ப்பாளராகவும் பணி புரிந்துவிட்டு மாவட்ட முன்சீஃபாகப் பணியாற்றினார். ஓய்வு பெற்றதும் மாயூரம் நகரசபைத் தலைவரானார்.

சிறந்த தமிழ்க் கவிஞர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்று புலமை பெற்றவர்.

இவரது நூல்கள் : சித்தாந்த சங்கிரகம் (நீதி மன்றச் சட்டங்களின் மொழிபெயர்ப்பு); பெண்மதி மாலை; திருவருள் அந்தாதி; பிரதாப முதலியார் சரித்திரம் (கற்பனைக் கதை); சர்வ சமய சமரசக் கீர்த்தனை; சுகுண சுந்தரி (கதை); சத்திய வேதக் கீர்த்தனைகள்.

இவருடைய தனிப்பாடல்கள் பலவும் சுவை மிக்கவை.

# உங்களுக்கு ஊக்கம் பிறக்க

[இங்குள்ள பொன்மொழிகளில் சிலவேனும் உங்களுக்குப் பொருந்தலாம். மிகப் பொருந்தக் கூடிய ஒன்றைப் பொறுக்கிக்கொள்ளுங்கள். அதைத் திரும்பத் திரும்பப் படியுங்கள்; மனப்பாடஞ் செய்யுங்கள்; பலதடவை நினைவுபடுத்திப் பாருங்கள்.—பிறகு நடத்தையில் காட்டுங்கள்.

மற்றப் பொன்மொழிகளை மற்ற நாட்களில் இப்படியே பயன்படுத்துங்கள்.

இவை பல பேரறிஞர்களால் கூறப்பட்டவை; சலித்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் இரண்டு – மூன்று வரிகள் உங்கள் வாழ்க்கையிலேயே ஒரு திருப்பத்தை உண்டாக்கலாம்.]

*"இன்றுள்ள ஒரு நாள், நாளை வரப்போகும் இரு நாட்களுக்கு ஈடானது."*

—பெஞ்சமின் ஃப்ராங்க்லின்.

*"நேரத்தை நன்றாகப் பயன்படுத்து. நல்ல வாய்ப்பு உன்னை விட்டு நழுவிப்போகவிடாதே!"*

—ஷேக்ஸ்பியர்.

*"உனக்கு விருப்பமிருந்தால் தப்பானதையாவது நினைத்துப் பார்; ஆனால் எப்போதும் நீயாகவே சிந்தனை செய்துபார்!"*

—லெஸ்ஸிங்.

*"உடலுழைப்பு என்பது உடலுக்கு உறுதி தருவதுபோல், இடையூறுகளும் துன்பங்களும் மனதுக்கு உறுதி தரும்.*

—செனிகா.

*"இன்றைய நகரவாழ்க்கைப் பரபரப்புக்கிடையிலுங்கூட மனத்தில் நிலையான அமைதி கொள்பவர் நரம்புக்கோளாறுகளிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள்."*

—டாக்டர் அலெக்சிஸ் காரெல்.

*"மற்றவர்களால் சாதிக்க முடியாத ஏதாவது ஒரு திறமையாவது ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையினால் அளிக்கப்பட்டிருக்கிறது; இதன் மூலம் மனித சமுதாயத்துக்கு இவன் தேவையுள்ளவனாக்கப்பட்டிருக்கிறான்."*

—R. W. எமர்சன்.

*"தன்னால் சாதிக்கக்கூடியது இதுதான் என்று ஒவ்வொருவனும் நம்பியிருப்பதைக் காட்டிலும் மிகுதியான பணியை மேற்கொள்ளுவதுதான் வாழ்க்கையில் உறுதியான வெற்றியைத் தரும். கூடுதலான இப்பணியில் அரைகுறை மனதோடு ஈடுபட்டாலுங்கூட வெற்றி கிடைப்பது உறுதி."*

—Viscount Kilmuir.

K. S. மகாதேவன், B. Sc., M. A.

# கல்லாய்ச் சமைந்த உயிரினங்கள்

*[சுருளிமலைப் பக்கத்தில் நீண்ட காலம் புதையுண்டு கிடக்கும் மரங்கள் கல்லாக மாறியிருப்பது பற்றித் தமிழ் நாடு சட்டமன்றத்தில் பேசப்பட்டது. இத்தகைய கற்களை அய்ரோப்பாவிலிருந்து தாமும் கொண்டு வந்திருப்பதாக அமைச்சர் கூறினார். இந்த இயற்கை மாற்றம் எப்படி ஏற்படுகிறது என்பது பற்றி விளக்குகிறார், கட்டுரையாளர்.]*

தேவதையின் சாபத்திற்கு ஆளாகிக் கல்லாய்ச் சமைந்து விடும் மனிதர் பற்றிய கதைகளை இன்றும் நம் குழந்தைகள் படித்து வருகின்றனர்! கணவனின் சீற்றத்தால் கல்லுருவம் பெற்றுக் கால வெள்ளத்தில் அமிழ்ந்து கிடந்த அகலிகையின் செய்தியும் நாம் அறிந்ததே! மேலும், கடல்மீது சென்ற தன் கணவனது கலம் மீண்டும் திரும்பிவரும் வரை கல்லுருவம் எய்திக் கடற்கரையில் காத்துக்கிடந்த கற்புக்கரசி பற்றிய செய்தியை

''மணல் மலி பூங்கானல்
வருகலன்கள் நோக்கிக்
கணவன் வரக்
கல்லுருவம் நீத்தாள்''
(சிலம்பு: வஞ்சினமாலை)

என்றும்,

''வரை கேள்வன் கலம் நோக்கி
வருமளவும் கல்லானாள்
புரைதீரப் பிறந்த
பூம்புகார்ப் பட்டினமே''
(பட்டினத்துப் பிள்ளையார் புராணம்)

என்றும் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன!

## சாபம் பெற்ற மரங்கள்?

கல்லாக மாறும் இவை போன்ற 'அற்புத' நிகழ்ச்சிகளைக் கதைகளில் கேட்டுக் கலங்கும் எளிய மக்களின் அறிவினை அண்மையில் செய்தித்தாளில் வந்த ஒரு செய்தி மேலும் குழப்பிவிட்டிருக்கிறது.

''தமிழ் நாட்டில் உள்ள சுருளி மலைப் பகுதியிலும், மற்றும் சில இடங்களிலும் கல்லுருவத்தில் நின்றபடி சில மரங்கள் காட்சி தருகின்றன'' என்பதே அச் செய்தி.

எவர் இட்ட சாபத்தால் இம் மரங்கள் இவ்வாறு கல்லாய்ச் சமைந்து போயின என்று அறிந்து கொள்வதில் அவர்கள் பெரிதும் அக்கறை கொண்டிருக்கிறார்கள்!

## மற்ற நாடுகளில்

மரங்கள் தாம் கல்லுருவத்தில் நிற்கின்றன என்பதில்லை; நத்தை, கிளிஞ்சல், மீன் போன்ற உயிரினங்களும் கல்லுருவத்தில் ஆங்காங்கே காணப்படுகின்றன! மேல் நாடுகளில் பாம்புக்கல் (Snake Stone) என்ற

ஒருவகைக் கல் உண்டு. கடவுள் ஒரு காலத்தில் சிறிதும் பெரிது மான நச்சுப் பாம்புகளையெல்லாம் கல்லாய்ச் சமையும்படி செய்து விட்டார் என்று அவற்றிற்குக் கதையும் வழங்குகிறது. ஆனால், அந்தக் கற்பாம்புகளில் ஒன்றுக்குக் கூடத் தலை காணப்படவில்லை! இதுபற்றி எவரும் எண்ணிப்பார்த்ததாகவும் தெரியவில்லை! ஆனால், இன்று அவை சுருண்டுகிடக்கும் கற்பாம்புகள் அல்ல; கல்லாக மாறிய நத்தை ஓடுகள் (Ammonite) என்பது தெரிய வந்துள்ளது. கல்லுருவத்தில் காணப்படும் பொருள்கள் பார்ப்பதற்கு உயிருடன் கூடிய உண்மைப் பொருள் போன்றே இருக்கும் கையில் எடுக்கும் போதுதான் அவை கல்லாகக் கனக்கும்! மூடிய உருவத்தில் இருக்கும் 'கற்கிளிஞ்சல்' களைத் திறக்க முயன்று ஏமாந்தவர்களும் இருக்கின்றனர்!

## இயற்கை இட்ட மந்திரம்!

நாம் இன்று வாழ்வது அறிவியல் உலகத்தில்! கதைகளில் வரும் தேவதைகளும், பழங்காலத்தில் மக்களை நடுங்கச் செய்த மந்திரவாதிகளும் நம் முன் வந்து கல்லாகி நிற்கும் மரங்களுக்கு விளக்கம் தருதல் இயலாது! எனவே, இயற்கை இட்ட மந்திரம்தான் இவ்வுயிரினங்களைக் கல்லாய்ச் சமையும்படி செய்திருக்க வேண்டும்! ஆனால், ஒரு வேறுபாடு; இயற்கையின் ''மந்திரம்'' செயல்படுவதற்குப் பல கோடியாண்டுக் காலம் வேண்டியிருக்கிறது. ஆம்! இன்று கல்லுருவத்தில் 'காட்சி தரும் விலங்கினங்களும் மரங்களும் பலகோடி ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்தவையாகும்!

## சோவியத் பெண்கள்

1959 கணக்குப்படி, சோவியத் சமுதாயப் பொருள் உற்பதத்தித் துறைகளில் ஈடுபட்டிருந்த மொத்த ஊழியர்களில் 48 சத விகிதத்தினர் பெண்கள்; எஞ்சினியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்கள்; நாட்டுப் பொருளாதாரத் துறை மானேஜர்கள், நிபுணர்கள் ஆகியோரில் பாதிப்பேர் பெண்கள்; மூளை உழைப்பாளர்களில் 54 சத விகிதத்தினர் பெண்கள்; ஆசிரியர்களில் 70 சதவிகிதத்தினர் பெண்கள்; டாக்டர்களில் 75 சதம் பெண்கள்.

யூனியன் குடியரசுகள், சுப்ரீம் சோவியத் உறுப்பினர், நகர—கிராம சோவியத் உறுப்பினர்—ஆகியவற்றில் 41 சதவிகிதம் பெண்கள். கல்லூரி மாணவர்களில் 43 சதவிகிதத்தினர் பெண்கள்.

“பெண்கள் இயற்கையில் வலுவற்றவர்கள்,” என்ற பழைய கருத்தை ருஷ்யா பொய்யாக்கிவிட்டது.

திருமணமான பெண்களை வேலை செய்யுமாறு கட்டாயப் படுத்துவதில்லை; ஆனாலும் வேலை செய்யாதிருப்பவர்கள் மிகச் சிலரே.

இன்று ஏராளமான பெண் குழந்தைகளுக்கு விண்வெளி வீராங்கனை வாலண்டினு (தெரஷ்கோவா)வின் பெயர் சூட்டப்படுகிறது.

—“சோவியத் நாடு!”

## வார்ப்பு உருவங்கள்

கல்லைச் செதுக்கித்தான் சிற்பங்கள் செய்யமுடியும். ஆனால் இயற்கையோ கல்லை 'வார்த்து'ச்-

சிற்பங்களைச் செய்து விடுகின்றன! சில சமயங்களில் விலங்கு அல்லது மரத்தின் உடல் மண்ணில் புதைந்து விடுகின்றது. அதைச் சூழ்ந்துள்ள மண் பகுதி இறுகிக் கெட்டிப்பட்டு விடுகின்றது. அதே சமயத்தில் மண்ணில் புதைந்த உடல் அழுகிச் சிதைந்து போய், அது இருந்த இடத்தில் அதன் உருவத்தைப் போன்றதொரு அச்சுக் கூடு (Mould) உண்டாகி விடுகிறது. பின்னர் இயற்கை இந்த அச்சினைத் தாதுப் பொருளால் (Minerals) நிரப்புகிறது. அப்படி நிரம்பிய பொருள் நாளாக நாளாகக் கெட்டிப்பட்டுக் கல்லாக மாறிவிடுகிறது. பின்னர் அதைச் சூழ்ந்துள்ள பாறைகள் கரையும் போது உள் உருவாகியிருந்த வார்ப்புப் படிவம் (Mould Fossil) வெளித்தோன்றிக் காண்போரை வியப்பில் ஆழ்த்துகிறது! முற்றிலும் வேறுபட்ட தாதுப் பொருளால் அது ஆகியிருந்தாலும், அது உண்டாவதற்குக் காரணமாக இருந்த அந்த உயிர்ப்பொருள் போன்றே அது தோற்றம் அளித்துக் கொண்டிருக்கும்! எனவே, மரங்களும், விலங்குகளும் கல்லாக 'மாறு'கின்றன என்று சொல்வதைவிட, அவை உண்டாக்கிய அச்சுக்களில் இயற்கை கல்லுருவங்களை 'வார்க்கின்றது' என்று சொல்வதே பொருத்தமாகும்!

## என்ன பயன்?

இவ்வாறு கிடைக்கும் கல்லுருவங்களில் 'புனிதத்தன்மை' எதுவும் இல்லையென்றாலும் அறிவியல் சிறப்பு நிறைய இருக்கிறது. இன்று வாழும் உயிரினங்களே அன்றும் வாழ்ந்து கொண்டிருந்தன என்று சொல்லிவிட முடியாது. மனிதன் உலக அரங்கில் தோன்றாத அத்துணைப் பழங்காலத்தில் எத்தகைய செடியினங்களும் உயிர் விலங்கினங்களும் உயிர் வாழ்ந்திருந்தன என்பதை இக்கல்லுருவங்களையும், இதுபோன்ற மற்றப் படிவங்களையும் கொண்டுதான் நாம் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது!

### லெனின் இராஜ்ய நூல் நிலையம்

மாஸ்கோ நகரிலுள்ள இது உலகத்திலேயே முதன்மையானது. ருஷ்யாவிலுள்ள 3,68,000 நூல் நிலையங்களில் இதுவே மிகப் பெரியது. இதில் 150 லட்சம் நூல்களும் 250 லட்சம் கையெழுத்துப் படிகளும் உள்ளன. இது 1862-ல் நிறுவப்பட்டது. ருஷ்யாவில் வெளியாகும் ஒவ்வொரு நூலும் இங்கு இலவசமாக வழங்கப்படுகிறது. 30 லட்சத்துக்கு மேற்பட்ட வெளி நாட்டு நூல்களும் பத்திரிகைகளும் உள்ளன. எல்லா நாட்களிலும் காலை 9 மணிமுதல் நள்ளிரவு வரையில் இது திறந்திருக்கும். ஒரே சமயத்தில் 1500 பேர் படிக்க வசதியுண்டு. நாளொன்றுக்கு சராசரி 26,000 நூல்களைப் படிக்க எடுத்துச் செல்கிறார்கள். இதில் 1500 பேருக்குமேல் பணியாற்றுகின்றனர்.

# 7. அலர் அறிவுறுத்தல்

[காதலனும் காதலியும் ஒருவரை ஒருவர் நினைத்துக் கொண்டு தம் வெட்கத்தை விட்டவர்களாக இருப்பதைக் கண்டு ஊரார் பரிகசிப்பதை (அலர் அறிவுறுத்துவதை)க் கூறுவது இந்த அதிகாரம். இதனால் இருவருடைய காதலும் உறுதிப் படுகிறது. அய்ந்து குறள்கள் காதலன் கூறுவதாகவும் பிற அய்ந்தும் காதலி கூறுவதாகவும் அமைந்துள்ளன.]

என் காதலியைப் பற்றி ஊரில் பரிகாசப் பேச்சுக்கள் உண்டாகிவிட்டபடியால் என் அருமையான உயிர் நிலைபெற்றிருக்கிறது; நல்ல வேளையாக என் உயிர் நிற்பதைப் பலரும் அறியமாட்டார்கள். மலர் போன்ற கண்களைக் கொண்ட என் காதலியின் அருமையை அறியாமல் இந்த ஊரார் இவளை எளியவளாகக் கருதிக்கொண்டு பரிகசித்து எமக்கு உதவி செய்தனர். ஊரார் அறிந்துவிட்ட இவ் ஏளனப் பேச்சுக்களால் கிடைக்காமலிருக்கின்ற இன்பம் அதைப் பெற்றுவிட்டது போன்ற நன்மை உடையதாயிருக்கிறது. காமம் என்பது பிறர் ஏளனம் செய்வதனால் பற்று அதிகரிக்கிறது. அந்த அலர் (பரிகாசம்) இல்லையானால் அது தன்மை இழந்து சுருங்கிப்போய்விடும். கள் குடிப்பவருக்கு மயக்கம் ஓங்க ஓங்க மேலும் மேலும் குடிக்க ஆசை உண்டாவது போல எங்கள் காதலைப் பற்றி ஏளனப் பேச்சுக்கள் பரவப் பரவ என் காம ஆசை மேலும் மேலும் பெருகி இன்பத்தைத் தருகிறது.

இது காதலன் காதலியைப் பற்றிக் கூறுவது. இனி, காதலி பேச்சு:—

என் காதலரைக் கண்டது ஒரே நாள்தான். அதனால் உண்டாகிய ஏளனப் பேச்சுக்களோ சந்திரனைப் பாம்பு பிடித்துவிட்ட செய்திபோல ஊரெங்கும் பரவிவிட்டது. இந்தக் காம நோயானது ஊரார் பேசுகின்ற ஏளனப் பேச்சுக்களை எருவாகவும் என் தாயார் இடித்துரைக்கும் சொற்களை நீராகவும் கொண்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. பரிகாசப் பேச்சினால் காமத் தீயை அடக்கிவிடலாம் என்று முயல்வது நெய்யை ஊற்றி நெருப்பை அணைத்துவிடலாம் என்று முயல்வதைப் போன்றதாகும். யாருக்காகவும் அஞ்ச வேண்டாம் என்று உறுதி கூறிய என் காதலர் இன்று என்னைப் பலர் பரிகசிக்கும்படியாக விட்டுப் பிரிந்திருக்கிறார் என்பதற்காக இப்பரிகாசப் பேச்சுக்கு நாணமடைந்து விடுவேனா? மாட்டேன். என் காதலர் தாம் விரும்பும் போது வந்து சேர்வார்; அது வரையில் இவ்வூரார் நான் விரும்புகின்ற இந்த ஏளனப் பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருக்கட்டும்.

## புரட்சியின் தோல்வி

1907–ல் லண்டனில் நடை பெற்ற தொழிற்சங்க மாநாட்டுக்குச் சென்று சொற்பொழிவாற்றி விட்டுத் திரும்பினர். இதற்குள் புரட்சி அடக்கப்பட்டுவிட்டது. ஃபின்லாண்டிலிருந்துகூட லெனினை விரட்டிப் பிடிக்க முயன்றது ருஷ்ய ஆட்சி. உயிருக்கே ஆபத்து நேரிடக்கூடிய முறையில் உறை பனிமீது நடந்து சென்று கப்பலில் ஏறி வெளிநாடு சென்றுவிட்டார். இந்த முறை ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாகவே தங்க நேரிட்டுவிட்டது. 1908–ல் ஜெனிவாவை அடைந்த லெனின் மன அமைதியை இழந்தார். சார் ஆட்சி புரட்சிக்காரர்மீது பழி வாங்கிக் கொண்டிருந்தது. ஆயிரக் கணக்கானவர் தூக்கிடப்பட்டனர்; பல்லாயிரக் கணக்கானவர் கொடுந் தண்டனைக் குள்ளாயினர். பொதுமக்கள் கலகலத்துப் போய் விட்டனர்.

ஆனாலும் லெனின் சளைக்கவில்லை. மீண்டும் பத்திரிகையைத் தொடங்கினர்; எழுதித் தள்ளினர்; மறைமுகமாக இப்பத்திரிகையை ருஷ்யாவுக்குள் அனுப்பிக் கொண்டிருந்தார். பிறகு பத்திரிகை பாரிசுக்கு மாற்றப்பட்டது. லெனினும் அவரது துணைவியாரும் அங்கு சென்றனர். இவர்கள் கிராமத்தில் தங்கியிருந்தபடியால் மத்திய நூல் நிலையத்திற்குச் சென்று படிப்பதற்காக நாள்தோறும் பலமைல்கள் சைக்கிளில் பயணஞ்செய்ய வேண்டியிருந்தது; பாரிசில் போல்ஷ்விக் குழுக்களை நிறுவி ருஷ்யப்புரட்சி நிலைமை பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்.

இவ்வளவு துயரத்திலும்கூட மன உறுதியை இழக்காமல் இன்ப முகத்துடன் தோழர்களுடன் கலந்து உரையாடிக் கொண்டிருந்தார்; தம் சொற்பொழிவுகள் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு உடனிருந்த தோழர்களின் வறுமையைப் போக்கினர்.

மார்க்சிசத்தின் புரட்சி தத்துவத்தைத் திருத்தக் கூடாது என்று கூறிவந்தார். விஞ்ஞான சோஷலிசத்தை மதத்துடன் பிணைப்பதை எதிர்த்தார். மதம் என்பது பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்ட உணர்ச்சியைத் திசை மாற்றக்கூடிய பணக்காரரின் முயற்சி என்பதை விளக்கிக் காட்டினர். அரசியலுக்கும் தத்துவ அறிவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பையும் விளக்கினர்.

இச்சமயத்தில் போல்ஷ்விக்குகளுக்கு எதிராகக் கிளம்பிய துரோகிக் கும்பலான டிராட்ஸ்கியையும் அவரைச் சேர்ந்தவர்களையும் ''அயோக்கியர்கள்'', என்றும், ''ஜுடாஸ் டிராட்ஸ்கி'' என்றும், ''சுயநலக்காரர்'' என்றும் கண்டித்துப் பிரசாரம் செய்தார்.

## புது முறுக்கு

1910–ம் ஆண்டில் ருஷ்யாவில் தொழிலாளர் கிளர்ச்சிகள் மீண்டும் புதுமுறுக்கோடு எழும்பின. பாரிசில் இருந்தபடியே அங்கு வந்த ருஷ்யத் தோழர்களுக்கு பொருளாதாரம், தத்துவம், சோஷலிசக் கோட்பாடு முதலிய பெரிய சங்கதிகளைப்பற்றி எளிய–இனிய முறையில் லெனின் விளக்கிக் கொண்டிருந்தார்.

1912–ல் பாரிசைவிட்டு ப்ரேக் (Prague) என்னுமிடத்திற்குச் சென்றர். இங்குதான் வரலாற்றுப் புகழ் பெற்ற அகில ருஷ்ய ப்ரேக் மாநாடு நடைபெற்றது. கட்சியிலுள்ள துரோகிகளை வெளியேற்றுவது என்பது இம்

உலகப் பெரியார் வரலாறு:

# லெனின்

[சா. கு.]

## III

பெரிய புரட்சி வாதியாயிருப்பவன் முரடனுகவோ, நெஞ்சுறுதி யுள்ளவனுகவோ மட்டுமே இருந்தால் போதாது. பரந்து, விரிந்த, ஆழ்ந்த படிப்பறிவு உள்ளவனுகவும் இருக்க வேண்டும். கற்ற அளவுக்குத்தானே ஊறும் அறிவு? அறிவு ஒன்றுதான் வைதீகத்தையும், முதலாளித்துவத்தையும், சமுதாய மடமைகளையும், கொடுமைகளையும் எதிர்த்து நிற்கும் சக்திவாய்ந்தது.

அமைப்பு முறை சக்தி, அறிவு சக்தி, பிரசார சக்தி-ஆகிய மூன்றையும் ஒருங்கே பெற்ற ஒரே உலகத் தலைவர் லெனின் ஆவார்.

ருஷ்யாவில் புரட்சி உணர்வு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதும், சார் ஆட்சியின் ஒரே தூணுன இராணுவமும் ஆட்டங் கண்டது. 1905-ல் இராணுவக் கப்பலின் மாலுமிகள் புரட்சி செய்தனர். இராணுவப் புரட்சியை வலுப்படுத்தும் பொருட்டு அது பற்றி மார்க்சும் எங்கெல்சும் எழுதியவற்றையெல்லாம் படித்தார்; இராணுவ நடவடிக்கைகளைப் பற்றிப் பல நூல்களைப் படித்தறிந்தார்.

"எங்கும் பரவியுள்ள இளைஞர்களிடம் செல்லுங்கள்! மாணவர்களை அணுகுங்கள்! குறிப்பாகப் பாட்டாளி மக்களை நெருங்கிப் பிரசாரம் செய்யுங் யுங்கள்!", என்று தம் கூட்டுத் தோழர்களுக்கு எடுத்துக் கூறினுர்.

இதே நேரத்தில் புரட்சிக்குத் தேவையான போர்க்கருவிகளை வாங்கி ருஷ்யாவுக்கு மறைவாக அனுப்பிக் கொண்டேயிருந்தார்.

சார் ஆட்சியினுல் சமாளிக்க முடியவில்லை. பேச்சுரிமை, எழுத்துரிமை முதலிய தனி மனித உரிமைகளை வழங்கியிருப்பதாக சார் ஆட்சி உத்தரவு பிறப்பித்தது. "இதையெல்லாம் நம்பி ஏமாந்துவிடாதீர்கள்!", என்று லெனின் எச்சரிக்கை விடுத்தார். புரட்சி உணர்ச்சி வலுத்துக் கொண்டேயிருந்தது. வெளி நாட்டிலிருந்து கொண்டு இயக்கத்தை நடத்த முடியாது என்பதை உணர்ந்த லெனின் ஜெனிவாவைவிட்டு செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்குக்குச் சென்றுர்; கட்சியின் தலைமையை ஏற்றுர்; போல்ஷ்விக் தோழர்களைக்கண்டு பேசினுர்; பத்திரிகைக்குத் தொடர்ந்து கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தார் சார் ஆட்சியின் போலீசிடம் சிக்கிக் கொள்ளாமலிருப்பதற்காக அடிக்கடி இடம் மாறிக் கொண்டும், பெயரை மாற்றிக் கொண்டும் ஃபின்லாண்டுக்கும் பீட்டர்ஸ்பர்க்குக்குமாக மாறி மாறிச் சென்று கொண்டிருந்தார். ஒருபுறம் ஆட்சியின் அடக்குமுறை; மறுபுறம் புரட்சிக்கான இரகசிய அமைப்பு முயற்சி!

மாநாட்டின் முக்கிய முடிவுகளில் ஒன்று. இந்த ஆண்டில்தான் இன்று உலகப் புகழ்பெற்று விளங்குகின்ற சோவியத் தினசரியாகிய 'ப்ராவ்டா' தோன்றிற்று. இதற்கு ஸ்டாலினும் மற்றத் தோழர்களும் உறுதுணையாக நின்றனர். ருஷ்யாவில புரட்சி அலைகள் ஓங்கி எழுந்தபடியால் அருகிலேயே இருக்கும் பொருட்டு கிராக்கவ் என்ற இடத்தில் தங்கிக் கொண்டார், லெனின்.

"பத்திரிகை வளர்ச்சியே இயக்க வளர்ச்சி; இயக்க வளர்ச்சியே பத்திரிகை வளர்ச்சி",

என்று எழுதினர், லெனின். தொழிற்சாலைகளிலேயே பிராவ்தா பத்திரிகைக்கு உறுப்பினர் சேர்த்தனர்; நாள் தவருமல் பத்திரிகைக்கு எழுதிக்கொண்டிருந்தார். ஆசிய நாடுகளின் விடுதலை வேட்கையைப் பாராட்டி எழுதினுர்; விஞ்ஞானத்திற்கும் கலாசார வளர்ச்சிக்கும் முதலாளித்துவம் முட்டுக்கட்டையாயிருப்பதை எடுத்துக் காட்டினுர்; ருஷ்யாவின் பொருளாதாரப் பிற்போக்கு நிலையை விளக்கினுர். முழுதும் தொழிலாளர்களின் நன்கொடையைக் கொண்டே 'ப்ராவ்தா' நடந்து கொண்டிருந்தது

அரசாங்கத்திடம் மூன்று அடிப்படைக் கோரிக்கைகளை விடுத்தது, போல்ஷ்விக் இயக்கம் :—

(1) ஜனநாயகக்குடி ஆட்சி (2) தொழிலாளர்களுக்கு 8 மணிநேர வேலை. (3) நிலப்பிரபுக்களிடமிருந்து நிலங்களையெல்லாம் பறிமுதல் செய்வது.

இக் கோரிக்கைகளை முன்வைத்து அடிக்கடி கிளர்ச்சிகளும் வேலை நிறுத்தங்களும் நடந்து கொண்டிருந்தன.

## உலகப்போர்

லெனின் அடிக்கடி எச்சரித்துக் கொண்டிருந்தபடியே முதலாவது உலகப் பெரும்போர் (1917) துவங்கிவிட்டது. ஜர்மனியையும் ஆஸ்ட்ரியா-ஹங்கரியையும் எதிர்த்து பிரிட்டன், ஃப்ரான்ஸ், ருஷ்யா ஆகிய நாடுகள் போரிட்டன. பிறகு அமெரிக்காவும் ஜப்பானும் பிரிட்டனுடன் சேர்ந்து கொண்டன.

ஏகாதிபத்திய நாடுகள் போரின் பெயரால் மனிதர்களைக் கொன்று குவிப்பதை லெனின் கடுமையாக எதிர்த்தார். "ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராகத் திருப்பிவிடுங்கள்!" என்று அறைகூவல் விடுத்தார். முதலாளிவர்க்கம் தன் சொந்த லாபத்துக்காகவே போர் நடத்துகிறது என்று கூறினுர். "போரும் சோஷலிசமும்" என்ற நூலை வெளியிட்டுப் பரப்பினுர்.

வறுமை அவரை மென்று தின்று கொண்டிருந்தது; எழுத்து மூலம் பொருளீட்டினுர். எளிய வாழ்க்கை வாழ்ந்தார். வயிற்றுக்கு இல்லாதபோதுகூட நிறைய நூல்களையும் பத்திரிகைகளையும் வாங்கிப் படித்தார். மிகக் கடினமாக உழைத்தார்.

1917 ஜனவரியில் ருஷ்யத் தொழிலாளர்கள் போரை எதிர்த்துப் புரட்சி செய்தனர்; "சார் ஆட்சி ஒழிக! போர் ஒழிக! எமக்கு வேண்டியது உணவே!" என்ற ஒலிமுழக்கம் நாடெங்கும் முழங்கிற்று. இராணுவமும் கடற்படையும் இப்புரட்சியை ஆதரித்தன.

இதுவரையில் சுவிட்சர்லாண்டிலேயே தங்கியிருந்த லெனின், பத்தாண்டு கால வெளிநாட்டு வாழ்க்கைக்குப் பிறகு 1917 ஏப்ரலில் ருஷ்யாவுக்குத் திரும்பினுர்.

பாங்குகளை நாட்டுப் பொது உடைமையாக்க வேண்டுமென்றும், எல்லா நிலங்களையும், அரசாங்கத்தின் உடைமையாக்க வேண்டுமென்றும் திட்டம் வகுத்தார். தம் இயக்கத்திற்கும் 'கம்யூனிஸ்ட் கட்சி' என்று பெயர் சூட்டினர்.

அச்சமயம் அதிகாரத்திலிருந்த இடைக்கால அரசாங்கம் தொழிலாளர்களைச் சுட்டு வீழ்த்தியது. தெருவில் இரத்த ஆறு ஓடியது; லெனினைக் கைது செய்ய முயன்று தோற்றது. மத்தியக் குழுவின் முடிவுப்படி லெனின் தலை மறைவாகிவிட்டார்; 111 நாட்கள் மறைந்தேயிருந்தார். பல வேடங்களில் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருந்தார். பிறகு திரும்பி வந்து புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்தினர். அக்டோபர் 25-ல் அரசாங்கப் பணிமனைகள்—போக்கு வரத்துக்கள் யாவும் புரட்சிக்காரர் வசமாகி விட்டன.

## வரலாறு காணாதது

மனித சமுதாய வரலாற்று நூலில் புதியதொரு பக்கம் எழுதப்பட்டது. சோவியத் அரசாங்கத்தின் முதல் தலைவரானர், லெனின்.

இச்சமயம் புரட்சியை ஒடுக்கும் பொருட்டு பிரிட்டன், ஃப்ரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் ருஷ்யாவில் நுழைந்து தாக்கின. ருஷ்யமக்கள் தன்னந்தனியாக நின்று வெளிநாட்டு எதிரிகளை முறியடித்தனர்.

1918 ஆகஸ்ட் 30-ந் தேதியன்று கப்ளான் என்ற ருஷ்யப் பெண் லெனின் மீது சுட்டாள். கடுமையான காயம் ஏற்பட்டது; ஆனால் உயிர்பிழைத்தார். கட்சிக்கு எதிராக வேலை செய்து வந்த டிராட்ஸ்கி கூட்டம் ஒழித்துக்கட்டப்பட்டது.

1918-ல் ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ஃபின்லாண்டு, ஹங்கேரி, போலண்டு ஆகிய நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சி முளைத்தெழுந்தது

இடைவிடாத முழு நேர, முழு மூச்சு உழைப்பின் விளைவாக லெனின் நோய்வாய்ப்பட்டார். வலது காலும் கையும் வேலை செய்யவில்லை; பேச முடியாத நிலையும் ஏற்பட்டது. மூளை நரம்பு வெடித்து 21-1-24-ல் மறைந்தார். எவரும் இன்றும் பார்க்கக் கூடிய முறையில் அவரது உடலம் அப்படியே தைலத்தில் போட்டுக் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப் பட்டது. உலகப் பாட்டாளி உலகமே கண்ணீர் பெருக்கிற்று. பெட்ரோ கிராட் நகரம் லெனின் கிராடு ஆகியது. அவர் பெயரால் பல நிலையங்கள் தோன்றின. லெனின் மறைந்தார்; அவர் ஏற்றிய விளக்கொளி மறையவில்லை. இன்று 87 நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன. இன்று சோவியத் ருஷ்யா இல்லாதபடி அகில உலகப் பிரச்னை எதுவும் தீர்க்கப் படுவதில்லை; ஆராயப் படுவதுமில்லை. சோஷலிச தத்துவத்தை ஏற்றுக்கொண்டுள்ள அய்ரோப்பிய—ஆசிய நாடுகளின் மக்கள் தொகை நூறுகோடியாகும். உலகிலுள்ள கம்யூனிஸ்ட் உறுப்பினர்களின் எண்ணிக்கை 3½ கோடியாகும்.

லெனின் புகழும் அவரது சாதனைகளும் உலகம் உள்ள அள்வும் அழியப் போவதில்லை. உலகப் பெரியார்களிலேயே ஒப்பற்ற பெரியார் லெனின். "கடவுள் கட்டளை" என்பதையே பொய்யாக்கிய புரட்சி வீரர், லெனின்.

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனாய் நகர், சென்னை-30

அன்புடையீர்,

வணக்கம். நாங்கள் இதுவரை தமிழ் நாட்டுப் பொதுக்கல்வி இயக்குநர்

திரு. நெ. து. சுந்தரவடிவேலு

அவர்கள் எழுதிய 12 நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

அவை :

1. தம்பீ நில்
2. நஞ்சு உண்டவர்
3. சிலுவையில் மாண்டவர்
4. குண்டுக்கு இரையானவர்
5. மின் விளக்கு
6. தங்கத் தாத்தா
7. வானொலி வழங்கியவர்
8. தோற்றும் வென்றவர்
9. பாக்கு வெட்டி
10. ஆறு
11. விளக்குப்பாவை
12. செஞ்சிலுவை தந்தவர்

அவற்றில் அரிய பெரிய கருத்துக்களை எளிய நடையில், தெளிவான முறையில், இளைஞர் முதல் பெரியோர் வரை ஆர்வத்தோடு படித்து இன்புறும் வகையில் தெரிவித்துள்ளார்கள். அவற்றைப் பெருமளவில் வாங்கிப் பயன் படுத்தியது எங்களுக்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது.

ஆகவே,

**“எண்ண அலைகள்”**

என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய 24 கட்டுரைகளின் தொகுப்பை இப்போது வெளியிடுகிறோம். அச்சில் உள்ள இந்நூல் விரைவில் வெளிவரும். சுமார் **260 பக்கங்கள்** கொண்ட இந்நூலின் விலை ரூ. **2-60.** நூலின் படிகள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதினால் அனுப்பப்பெறும்.

முருகன் & கம்பெனி,

**32, வெங்கடேச கிராமணி தெரு,**

*சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.*

டெலிஃபோன் நம்பர் : 51451
நிறுவனம் : 1930
தந்தி : ORIDOL

தரத்தில் சிறந்த

எங்கள் பருப்பு வகைகள்

| | | |
|---|---|---|
| பட்டினத்தார் உளுந்தம் பருப்பு | எப்போதும் வாங்கி உபயோகியுங்கள் — எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். | ஷெல் துவரம் பருப்பு |

தயாரிப்பாளர்கள் :

P. புன்னவன நாடார் (FIRM)

235, திருவொற்றியூர் ஹைரோடு,

சென்னை-21.